# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 10 சனிக்கிழமை (25.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 029


# இலங்கைக்கு இந்திய ஏவுகணைகள், ராடர்கள்; பாதுகாப்புச் செயலர் பிரதீப் திங்களன்று வருகை



கொழும்பு,டிசெ.25

இந்தியப் பாதுகாப்புச் செயலாளர் இரண்டு நாள்கள் விஜயமாக திங்கட்கிழமை இலங்கைக்கு வரவிருக்கின்ற நிலையில், இந்திய அரசு இலங்கைக்கு ஏராளமான இராணுவத் தளபாடங்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளது என பி.ரி.ஐ. செய்திச் சேவை நேற்றிரவு தெரிவித்துள்ளது.

நல்லெண்ண அடிப்படையில் இந்த இராணுவத் தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன. தோளில் வைத்துத் தாக்கும் ஏவுகணைகள், ராடர்கள் ஆகியனவே வழங்கப்படவுள்ளன என அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பாதுகாப்புக் கட்டமைப்பை மேம்படுத்தும் பொருட்டும், புலிகளுடனான யுத்தத்தை வெற்றி கொள்வதற்காக ஏற்கனவே வழங்கத் திட்டமிட்ட இராணுவத் தளபாடங்களின் ஒரு தொகுதியே இவ்வாறு வழங்கப் படவுள்ளது.

இலங்கையில் ஆதிக்கம் செலுத்துவதற்கு சீனா முயற்சித்து வரும் பின்னணியில் இலங்கையின் பாதுகாப்பு ஆற்றலை கட்டியெழுப்புவதற்கு உதவும் இந்தியாவின் முயற்சிகளை வெளிப்படுத்தும் வகையில் இந்த ஆயுதங்கள் வழங்கப்படுவதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

(28 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக் குழுவை

# ஐ.நா. நிபுணர் குழு எங்கு சந்திக்கும் என்பது முடிவில்லை

## அடுத்த மாதத்திலேயே அறிவிப்பு வரும்

நியூயோர்க்,டிசெம்பர்25

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம்தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமித்த நிபுணர் குழு இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவை கொழும்புக்குச் சென்று சந்திப்பதா வேறு ஒரு நாட்டில் வைத்துச் சந்திப்பதா என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

இது சம்பந்தமான உத்தியோகபூர்வ அறிவிப்பு ஜனவரி மாதத்திலேயே வெளியிடப்படும்.

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பதில் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

(28ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்து மக்களுக்கும் சமாதானம் நிறைந்த நாளாகத் திகழட்டும்



கொழும்பு,டிசெ.25

"இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் இந்த நத்தார், இலங்கை வாழ் மக்களுக்கும், உலகின் அனைத்து மக்களுக்கும் சமாதானமும், சௌபாக்கியமும் நிறைந்த நாளாகத் திகழப் பிரார்த்திக்கிறேன்."

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நத்தார் தினத்தை (28 ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளைக்கொடி விவகாரத்தில் பொன்சேகாவுக்கு எதிராகச் செயற்படுவதை அரசு நிறுத்தவேண்டும்

## படையினரை சர்வதேசத்துக்கு காட்டிக் கொடுப்பு என்கிறது ஐ.தே.க

கொழும்பு,டிசெ. 25

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பாக அரசு சரத் பொன்சேகாவுக்கு எதிராகச் செயற்பட்டால், படையினர் போர்க்குற்றங்கள் புரிந்தனர் என்று அர்த்தமாகிவிடும். அரசே அவர்களை சர்வதேசத்துக்குக் காட்டிக் கொடுப்பதாக அது அமைந்துவிடும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுக் கூறியது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி. தயாசிறி ஜயசேகர இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

(28 ஆம் பக்கம் பார்க்க)



'உதயன்' வாசகர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள், விநியோகஸ்தர்கள் அனைவருக்கும் நத்தார் தின நல்வாழ்த்துகள்

## நத்தார் தினத்தை முன்னிட்டு 90 முன்னாள் போராளிகள் இன்று விடுதலையாவர்

கொழும்பு,டிசெ.25

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகள் 98 பேரை அரசு விடுதலை செய்யவுள்ளது.

இன்று வவுனியாவில் இடம் பெறும் வைபவத்தில் வைத்து, 98 முன்னாள் விடுதலைப் புலி

(28 ஆம் பக்கம் பார்க்க)


வீட்டையோ வேலைத்தளத்தையோ எந்த நேரமும் எங்கிருந்தும் கண்காணிக்க
AT
Athavan Technology
Security camera, Door phone system, Finger print attandance, Burgler alarm
No. 111/2, Brown Road, Kokuvil East, Jaffna.
Tel - 0750 421 776


## பெரும் எண்ணிக்கையான வீடுகள் கட்டப்படும் குறைந்தவையே புனரமைப்புச் செய்யப்படும்

### இந்தியத் தூதரகம் அறிக்கை

கொழும்பு,டிசெ.25

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் வீட்டுத் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்குடனேயே ஐம்பதினாயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் திட்டத்தை இந்திய அரசு வகுத்து அதனைச் செயற்படுத்த முன்வந்தது.

பிரதானமாக இலங்கையின் வடமாகாண(இடம்பெயர்ந்த) மக்களின் தேவையை (28ஆம் பக்கம் பார்க்க)


இனிய நத்தார் வாழ்த்துக்கள்!!!
என்றென்றும் மக்களின் நன்மதிப்புப் பெற்ற ஸ்தாபனம்
நவீன் செரமிக்
Naveen Ceramic PVT LTD
# 212, Palaly Road, Jaffna.
Tel: 212220033, 212220044

சுந்தர்சன் மானிப்பாய்
மாபெரும் மலிவு விற்பனை - அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசில் வென்றோர்
Washing Machine
21" LG Colour TV
14" Haier Colour TV
Mobile Phone
Home Theater
Pedestal Fan
Table Fan
Sandwich Toaster
Jug Kettle
Iron Box
Hot Plate


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நகைக்கடை உரிமையாளர்கள் கைதானதை கண்டித்து கடைகளைப் பூட்டி நேற்று எதிர்ப்பு

## யாழ். நகரில் வவுனியா பொலிஸாரின் நடவடிக்கைக்கு அதிருப்தி

யாழ்ப்பாணம், டிசெ.25

திருட்டு நகைகளை விற்பனை செய்த திருடன் ஒருவனுடன் சிவில் உடுப்புடன் வவுனியாவிலிருந்து 'ஹைஏஸ்' வானில் வந்த பொலிஸ் குழு, யாழ். நகரிலுள்ள நகைக்கடை உரிமையாளர்கள் இருவரைப் பலவந்தமாகக் கைது செய்த சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. வவுனியாப் பொலிஸாரின் இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்து நேற்றுக்காலை யாழ்.நகர நகைக்கடை உரிமையாளர்கள் அனைவரும் தமது கடைகளைத் திறக்காமல் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சுமார் எட்டுக்கும் மேற்பட்ட பொலிஸார் கொண்ட குழு சிவில் உடையில் ''ஹைஏஸ்'' வானில் யாழ். நகருக்கு நேற்றுமுன்தினம் மாலை ஐந்து மணியளவில் வந்து இறங்கியது. யாழ். நகரில் திருட்டு நகைகளை விற்பனை செய்து வந்த திருடன் ஒருவனையும் அந்தப் பொலிஸ் குழு அழைத்து வந்திருந்தது.

அந்த நபர் வழங்கிய தகவலின்படி நகரிலுள்ள நான்கு நகைக்கடைகளுக்குச் சென்று கடை உரிமையாளர்களை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தினர். அதுமட்டுமன்றி, நகைக் கடை உரிமையாளர்கள் அந்தத் திருட்டு நபரிடம் இருந்து கொள்வனவு செய்த நகையின் அளவைவிட அதிகமான அளவு நகையை மீள வழங்குமாறும் பொலிஸ் குழு கேட்டுள்ளது. அத்துடன் இரண்டு உரிமையாளர்களை அந்தப் பொலிஸ் குழு கைது செய்து அழைத்துச் சென்றது. இது யாழ். நகர நகைக்கடை உரிமையாளர்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியது.


வெறிச்சோடிக்கிடக்கும் நகைக்கடைகள்

நகரிலுள்ள நகைக்கடை உரிமையாளர் ஒருவர் 6 கிராம் நகையை அந்த நபரிடமிருந்து கொள்வனவு செய்ததாகவும், ஆனால் பொலிஸார் திருட்டு நபரின் தகவலின்படி 25 பவுண் நகையை மீள ஒப்படைக்கும்படி அந்த உரிமையாளரை வற்புறுத்தியதுடன் பின்னர் 6 கிராம் நகையைப் பெற்றுக்கொண்டு அந்த உரிமையாளரையும் கைது செய்தது.

அந்தப் பொலிஸ்குழு பின்னர் மற்றொரு கடை உரிமையாளரை 25 பவுண் நகை வழங்குமாறு வற்புறுத்தியதுடன், அந்த உரிமையாளரையும் கைது செய்து அழைத்துச் சென்றது.

பிறிதொரு கடை உரிமையாளர் 5.4 கிராம் நகையைக் கொள்வனவு செய்துள்ளார். அவரிடமிருந்து 12 கிராம் நகையைப் பொலிஸ் குழு மீளப்பெற்றுள்ளது. அதேபோல நான்காவது நகைக் கடை உரிமையாளர் 2.5 கிராம் நகையைக் கொள்வனவு செய்தார். அவரிடமிருந்து அதே அளவு நகை பொலிஸ் குழுவினால் மீளப்பெறப்பட்டுள்ளது. அந்தத் திருட்டு நபரிடம் நகைகளைக் கொள்வனவு செய்யும்போது அவரின் தேசிய அடையாள அட்டை பதிவு செய்யப்பட்டு உரிய நடைமுறையிலேயே நகைகள் நகைக்கடை உரிமையாளர்களால் தங்க நகைக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பற்றுச் சீட்டும் நகைக் கடை உரிமையாளர்களால் வழங்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், யாழ். வணிகர் கழகத்தில் யாழ். நகைக்கடை உரிமையாளர்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது. அதன்போது பாதிக்கப்பட்ட நகைக்கடை உரிமையாளர்கள் தமக்கு ஏற்பட்ட அசௌகரிய நிலைமை தொடர்பாகக் கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள். அத்துடன் வவுனியா பொலிஸார் மேற்கொண்ட அடாவடித்தனம் தொடர்பாகவும் தமது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். இந்த நிலையில் யாழ். வணிகர் கழகத்தினர் விடுத்த கோரிக்கைக்கு இணங்க இரண்டு மணி நேரமாகப் பூட்டப்பட்டிருந்த யாழ். நகரிலுள்ள நகைக் கடைகள் அனைத்தும் மீளத்திறக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகளும், பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்களும் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவாவைச் சந்தித்து வர்த்தகர்களுக்கு வவுனியா பொலிஸார் ஏற்படுத்தியுள்ள அசௌகரியங்கள் குறித்து முறைப்பாடு செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ள நான்கு நகைக்கடை உரிமையாளர்களும் தனித்தனியாக எழுத்துமூலமான முறைப்பாட்டை வணிகர் கழகம் ஊடாக தமக்கு மேற்கொள்ளுமாறும், வவுனியாப் பொலிஸார் மேற்கொண்ட செயலுக்காகத் தாம் மனம் வருந்துவதாகவும் கைது செய்யப்பட்டுள்ள நகைக் கடை உரிமையாளர்களை விடுதலைசெய்ய உடனடி நடவடிக்கை எடுப்பதாகவும் பொலிஸ் அதிகாரி நெவின் பத்மதேவா குறிப்பிட்டதாகவும் வர்த்தகர்சங்கப் பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த சில வாரங்களுக்கு முன்னர், இதே போன்று திருட்டு நபருடன் திருகோணமலையிலிருந்து வந்த பொலிஸ் குழு யாழ்.நகர நகைக் கடை உரிமையாளரிகளிடம் திருட்டு நபர் விற்ற நகைளை மீளப்பெற்றுக்கொண்டது. அத்துடன் போக்குவரத்துச் செலவாக 15 ஆயிரம் ரூபாவையும் பொலிஸார் குழு உரிமையாளர்களிடமிருந்து பெற்றுள்ளது. (ஒ-14)

**வர்த்தகர்கள் இருவரும் விடுவிப்பு**

யாழ்ப்பாணம், டிசெ.25

*வவுனியாவிலிருந்து வருகைதந்த பொலிஸாரால் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்ட யாழ். நகைக்கடைகளின் உரிமையாளர்கள் நேற்றுப் பிற்பகல் வவுனியா நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.*

*யாழ். வணிகர் சங்கம், யாழ். சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா, யாழ். சிரேஷ்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா ஆகியோருடன் தொடர்புகொண்டு நடத்திய கலந்துரையாடலின் பேரில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.*

*நேற்று மாலை வவுனியா நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டு அந்த வர்த்தகர்கள் விடுவிக்கப்பட்டனர்.* (ஒ-ஐ)

# தகுந்த ஆவணங்களைப் பரிசீலித்து நகைகளைக் கொள்வனவு செய்யுங்கள்

## யாழ். வணிகர் கழகம் ஆலோசனை

தேசிய அடையாள அட்டை மூலம் உறுதிப்படுத்தியதன் பின்னரே உள்ளூர் நபர்களிடம் இருந்து நகைகளைக் கொள்வனவு செய்யுங்கள். சந்தேகம் ஏற்படின் அந்த நபரின் குடும்ப அட்டையைப் பரிசீலித்து உறுதிப்படுத்தியதன் பின்னரே கொள்வனவு செய்யுங்கள் என்று யாழ். நகர நகைக் கடை உரிமையாளர்களுக்கு யாழ். நகர வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் ஆலோசனை வழங்கினார்.

யாழ். நகர நகைக்கடை உரிமையாளர்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று வணிகர் கழக கேட்போர்கூடத்தில் இடம் பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:- உள்ளூர் நபர்களிடம் நகைகளைக்கொள்வனவு செய்யும்போது மிகவும் விழிப்புாகவும் நிதானத்துடனும் நடந்து கொள்ளவேண்டும். அறியாத நபர்கள் நகைகளை விற்பனை செய்ய வரும்போது அந்த நபர்கள் தொடர்பான உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களைப் பெற்று பதிவு செய்துகொள்வது மிக மிக அவசியமானது. இவ்வாறான நடவடிக்கை மூலம் கடை உரிமையாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.

வவுனியாப் பொலிஸார் சிவில் உடையுடன் யாழ்.நகர் வந்து நகைக்கடை உரிமையாளர்கள் இருவரை கைதுசெய்ய வரும்போது யாழ்.பொலிஸ் நிலையப் பொலிஸார் கூடவே வந்திருக்க வேண்டும் அல்லது வணிகர் கழகப் பிரதிநிதிகளுடன் வந்திருக்கவேண்டும்.

இந்த இரண்டு வழி முறைகளையும் விடுத்து வவுனியா பொலிஸ் குழு சிவில் உடையுடன் வந்து கைதுசெய்வது என்பது வன்மையாகக் கண்டிக்கப் படவேண்டியது. எனத் தெரிவித்தார்.

இதேவேளை - வவுனியா பொலிஸ் நிலைய பொலிஸ் குழு யாழ். நகரிலுள்ள நகைக் கடை உரிமையாளர்கள் இருவரைக் கைதுசெய்தது தொடர்பாக நகைக்கடை உரிமையாளர்கள் தமது கடும் விசனத்தையும் அதன் போது வெளிப்படுத்தினார்கள். திருடன் எனக் கூறப்படும் அந்த நபரிடம் இருந்து கொள்வனவு செய்த நகையின் அளவை விட பொலிஸார் அதிக எடை கொண்ட நகையை மீள வழங்குமாறு வற்புறுத்தியது எந்த விதத்தில் நியாயமானது? நகையைக் கொள்வனவு செய்தபோது பதிவுசெய்த பற்றுச் சீட்டுப் புத்தகத்தையும் பொலிஸ் குழு பறித்துச் சென்றுள்ளது - என்றும் உரிமையாளர்கள் தமது விசனத்தை வெளிப்படுத்தினார்கள். (ஒ-14)

### வெள்ளைக்கொடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. நிபுணர்கள் குழு வுக்கு எதிர்ப்புத் தெரிவித்த விமல் வீரவன்ஸ கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டார். அதை ஜனநாயகம் என்று அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கூறினார். ஆனால், இன்று அந்தக் குழு இலங்கை வர அனுமதி வழங்கப்போவதாக அரசு கூறுகின்றது. விமல் வீரவன்ஸவின் போராட்டத்துக்கு எதிராக ஜனாதிபதி ஏற்பாடுகளைச் செய்கின்றார்.

எல்லா நாடுகளும் எமக்குத் தேவை. சர்வதேசத்தில் எமக்குப் பிரச்சினை ஏற்பட்டால் அதனை நாம் பேசித் தீர்க்க வேண்டும். அந்த நிலைப்பாட்டில்தான் நாம் உள்ளோம்.

ஐ.நா. நிபுணர் குழுவை முதலில் எதிர்ப்பது பிறகு வரவேற்பது என்ற கொள்கை சரிவராது. இது தொடர்பாக அரசு ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டும்.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பாக அரசு சரத் பொன்சேகாவுக்கு எதிராகச் செயற்படுகிறது. இது எமது படையினருக்கு ஆபத்தாக அமையும். வெள்ளைக்கொடியுடன் வந்த புலித் தலைவர்களைப் படையினர் சுட்டுக் கொன்றனர் என்று சரத் பொன்சேகா கூற வில்லை என்றே அரசு சொல்லவேண்டும். அவ்வாறு இல்லாது பொன்சேகா அவ்வாறு கூறினார்தான் என்று அரசு சொன்னால், படையினர் போர்க்குற்றம் புரிந்தனர் என்று அரசே சர்வதேசத்துக்கு கூறுவதாக அமையும். ஆகவே, அரசு படையினரை காப்பாற்றுவதாக இருந்தால் இந்த விடயத்தில் பொன்சேகாவுக்கு எதிராக செயற்படுவதை நிறுத்தவேண்டும். - என்றார்.

### இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு ராடர்கள் மற்றும் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான தரையிலிருந்து வானுக்கு ஏவப்படும் ஏவுகணைகள் ஆகியவற்றையும் தற்காலிக அடிப்படையில் இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்த காலத்தில் இலங்கைக் கடற்படைக்கு கரையோரக் காவல் படகொன்றையும் இந்தியா வழங்கியது. எனினும் அதுவும் அன்பளிப்பாகுமா என்பது தெரியவில்லை.

மேற்படி கருவிகளை இயக்குவதற்கு இந்திய விமானப்படை அதிகாரிகளும் ஈடுபடுத்தப்பட்டனர். எனினும் அவர்கள் இலங்கைப் பாதுகாப்புப் படையினர் தமது முகாம்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உதவவே ஈடுபடுத்தப்பட்டனரே தவிர வலிந்த தாக்குதல்களில் பங்குபற்றவில்லை என அவ்வட்டாரங்கள் தெரிவித்தனர்.

இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் பிரதீப் குமார் பேச்சு நடத்தவுள்ளார். இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கான எதிர்காலத் தேவைகள் குறித்தும் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக் கடற்படையின் 60ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொள்வதற்கான இந்திய உயர் அதிகாரி நிர்மல் வர்மா அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இவரது விஜயத்தையடுத்தே இந்திய பாதுகாப்புச் செயலர் அவசரமாக இலங்கை விஜயம் மேற்கொள் கின்றார் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவின் முப்படைகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், கரையோர பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் இந்திய பாதுகாப்புச் செயாளருடன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதுடன், இரு நாடுகளுக்கிடையில் பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பாகவும் இவ்விஜயத்தின்போது பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

இதேவேளை, ஏற்கனவே விடுதலைப் புலிகளை அழித்தொழிக்கும் இலங்கையின் நடவடிக்கையில் பெரும் பங்களிப்பை நல்கியிருந்த இந்திய அரசு, தொடர்ந்தும் இலங்கைக்கு ஆயுத உதவிகளை வழங்குவதைத் தன்னை இனங்காட்டிக்கொள்ள விரும்பாத தமிழ்க் கட்சித் தலைவர் ஒருவர் கடுமையாக விமர்சித்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட வாக்காளர் பட்டியலில் 3 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கம்

கொழும்பு,டிசெ.25

2010ஆம் ஆண்டுக்கான யாழ். மாவட்ட வாக்காளர் பட்டியலிலிருந்து 300,000 பேரின் பெயர்களை தேர்தல் அதிகாரிகள் நீக்கியுள்ளனர். யுத்தகாலத்தில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதால் இவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புதிய மதிப்பீட்டின்படி யாழ் மாவட்டத்தில் வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 5 லட்சமாக இருக்கும். எனினும் யாழ் மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் மீளக்குடியேறிய முஸ்லிம் வாக்காளர்களின் கணக்கெடுப்புகள் இன்னும் பூர்த்தியாகவில்லை.

வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரில் பெரும்பாலானோர் நாட்டிலிருந்து வெளியேறி, வெளிநாடுகளில் நிரந்தர வசிப்பாளர்களாக அல்லது பிரஜைகளாக உள்ளனர் என யாழ் மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் ப.குகநாதன் தெரிவித்தார்.

அவ்வாக்காளர்களில் சிலர் ஒரு தசாப்த காலத்திற்கு முன்னர் சென்று விட்டனர். ஆனால் அவர்களின் பெயர்கள் தொடர்ந்தும் வருடாந்த வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்தன.

அத்துடன் சிலர் யாழ் மாவட்டத்திற்கு வெளியே வசிக்கின்றனர் என அவர் கூறினார். எதிர்வரும் ஜனவரி மாதம் பொதுமக்களின் பார்வைக்காக வாக்காளர் பட்டியல் காட்சிக்கு வைக்கப்படும். அதன்பின் மேற்படி வாக்காளர்களின் உறவினர்கள் விரும்பினால் மேன் முறையீடு செய்யலாம். இறுதிப்பட்டியல் ஏப்ரல் மாதமே வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைவதால் யாழ் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் குறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது யாழ் மாவட்டத்திலிருந்து 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர்.(த)

# பெருந்தொகையான குண்டுகள் வாகரைப் பிரதேசத்தில் மீட்பு

**புலிகளின் தயாரிப்புகளும் உள்ளடக்கம்**

கொழும்பு,டிசெ.25

மட்டக்களப்பு வாகரையில் பெருந்தொகையான குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக வாகரைப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

வாகரையின் கட்டுமுறிப்பு பிரதேசத்திலேயே குண்டுகளும் வெடிபொருள்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நேற்று வாகரைப் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனையின் போதே அவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கைக்குண்டுகள் மூன்று மற்றும் நூற்றுக்கும் அதிகமான மிதிவெடிகள் என்பன அவற்றில் உள்ளடங்கியிருந்ததாக தெரியவருகின்றது.

கைப்பற்றப்பட்ட குண்டுகள் மற்றும் வெடிப்பொருள்களில் வெளிநாட்டுத் தயாரிப்புகள் மட்டுமன்றி விடுதலைப் புலிகளின் சுய தயாரிப்புகளும் உள்ளடங்கியிருப்பதாக வெடிகுண்டு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் திருமலை உப்புவெளி பிரதேசத்தின் சாம்பல் தீவு பிரதேசத்திலும் கைக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கின்றது.

(த)

# நத்தார் பண்டிகைக்காக பஸ் சேவை அதிகரிப்பு

கொழும்பு,டிசெ.25

நத்தார் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, சேவையில் ஈடுபடுத்தப்படும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களின் எண்ணிக்கை 5,000 ஆக அதிகரிக்கப்படும் என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜா-எல, புத்தளம், நீர்கொழும்பு, மொரட்டுவையில் போக்குவரத்துச் சபை பஸ்களின் எண்ணிக்கை 1,200 ஆக அதிகரிக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் குமாரவேல்கம தெரிவித்துள்ளார். அத்துடன் ஹட்டன் - கொழும்பு வீதியில் விசேட பஸ் சேவையொன்றும் நடத்தப்படவுள்ளது.

அத்துடன் கொழும்பு கோட்டைக்கும் கண்டிக்கும் இடையிலான ரயில் சேவைகளின் எண்ணிக்கையும் டிசெம்பர் 24 முதல் ஜனவரி 2 ஆம் திகதிவரை அதிகரிக்கப்படவுள்ளன.

தேவையானால் பஸ் மற்றும் ரயில் சேவைகள் மேலும் நீடிக்கப்படும் என அமைச்சர் கூறினார்.

# இந்து சமுத்திரத்தில் மனிதக் கடத்தல்கள் தடுக்க இலங்கைக் கடற்படை கண்காணிப்பு

கொழும்பு,டிசெ.25

தற்போது மனிதக் கடத்தல்கள் குறைந்துள்ள போதும் இந்து சமுத்திரப் பகுதியில் மனிதக் கடத்தல்களை தடுக்கும் நோக்கத்தில் இலங்கை கடற்படை கண்காணிப்பு மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திசர சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கடற்படைத் தளபதி மேற்கண்டவாறு கூறினார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது :-

விடுதலைப் புலிகள் உட்பட மனிதக் கடத்தல்களில் ஈடுபடுவதாகச் சந்தேகிக்கப்படும் நபர்களைக் கைதுசெய்வதற்கு அவுஸ்திரேலியா மற்றும் இந்திய கடற்படைகள் எமது கடற்படைக்கு ஒத்துழைப்புக்களை நல்கி வருகின்றன.

நாட்டின் கடல் எல்லையை கடப்பதற்கு வசதியானவை என்று கருதப்படும் இடங்களை நாம் கடுமையாக கண்காணிக்கின்றோம். இவர்கள் நாட்டின் தென்பகுதியில் பல்வேறு புதுப் புது இடங்களூடாக நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

மனிதக் கடத்தலை பூரணமாகத் தடுக்க முடியாது. அவர்கள் இப்போது விமானம் மூலம் வேறு நாடுகளுக்கு சென்று அங்கிருந்து படகுகள் மூலம் தாம் போக விரும்பும் நாடுகளுக்குச் செல்கின்றனர். - என்றார்.

இலங்கைக் கடற்படையின் வைர விழா நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்த அவுஸ்திரேலிய கடற்படைத் தளபதி, மனிதக் கடத்தலை தடுப்பதற்கு இலங்கை மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டியதாகவும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திசர சமரசிங்க மேலும் தெரிவித்தார். (த)

# வடக்கு-கிழக்கில் கிளைகளைத் திறக்க வெளிநாட்டு வங்கிகள் ஆர்வமில்லை

**மத்திய வங்கி தகவல்**

கொழும்பு,டிசெ.25

வடக்கு, கிழக்கில் போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் உள்நாட்டு வங்கிகள் அங்கு கிளைகளைத் திறப்பதற்கு அதிக ஆர்வம் காட்டுகின்ற போதிலும் வெளிநாட்டு வங்கிகள் பெருமளவில் முன்வரவில்லை என்று இலங்கை மத்திய வங்கி கூறியுள்ளது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் 136 புதிய கிளைகளை ஆரம்பிக்க பல்வேறு வங்கிகளுக்கும் இலங்கை மத்திய வங்கி அனுமதி வழங்கியிருந்தது.

இவற்றில் பெரும்பாலானவை உள்நாட்டு வங்கிகளே யாகும். வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரையில், எச்.எஸ்.பிசி வங்கி யாழ்ப்பாணத்தில் ஒரு கிளையையும், ஹற்றன் வங்கி கிழக்கில் ஒரு கிளையையும் ஆரம்பித்துள்ளன.

இந்தியன் வங்கி யாழ்ப்பாணத்தில் ஒரு கிளையைத் திறக்கவுள்ளது.

அதேவேளை போரின் முடிவுக்குப் பின்னர் கிழக்கில் 64 புதிய கிளைகளை அமைப்பதற்கு மத்திய வங்கி அனுமதி வழங்கியிருந்தது. வடக்கில் 72 கிளைகளை அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

வடக்கில் 59 புதிய வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டு விட்டன என்றும் மத்திய வங்கி மேலும் கூறியுள்ளது.

(த)

# நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளை

# வண்ணார்பண்ணை ஓடை லேனில் கொள்ளை முயற்சி முறியடிப்பு

**அயலவர் உஷாரடைந்ததால் கொள்ளையர் ஓட்டம்**

யாழ்ப்பாணம்,டிசெ.25

வண்ணார்பண்ணை ஓடை லேனில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் இடம்பெற்ற கொள்ளை முயற்சி அப்பகுதி மக்கள் உஷாரடைந்ததால் முறியடிக்கப்பட்டுள்ளது.

கொள்ளைக் கோஷ்டியினர் அந்த வீட்டில் இருந்த தொலைக்காட்சியை இயக்கி வீட்டில் இருந்த பெண்களை விழிப்படையச் செய்து கொள்ளை முயற்சியில் ஈடுபட முனைந்துள்ளனர்.

அந்த வீட்டில் இருந்த பெண்கள் கூக்குரல் இட்டதாலும் அருகில் உள்ள வீட்டுக்காரர் பட்டாசு வெடிகளைக் கொளுத்தியதாலும் தடுமாற்றமடைந்த கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர்.

அந்த வீட்டில் நின்ற நாய் குரைக்கவே அந்த நாயை அவர்கள் எடுத்துவந்த ஆயுதத்தினால் குத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு அண்மையாக உள்ள படையினரின் காவலரணிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-ஐ)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மழையுடன் கூடிய காலநிலை

கொழும்பு,டிசெ.25

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மழையுடன் கூடிய காலநிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பித்துள்ளதாகவும் எதிர்வரும் நாள்களில் அதிகளவான மழையை எதிர்பார்க்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாணத்திலும், மாத்தளை மாவட்டத்திலும் எதிர்வரும் நாள்களில் மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் இடைக்கிடை மாலை வேளையில் மழை பெய்யக் கூடுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(த)

# சுரேஷ் ஸ்ரீஸ்கந்தராஜா பிணையில் விடுதலை

கொழும்பு,டிசெ.25

புலிகளுக்காக உபகரணங்களையும் நீர்மூழ்கி கப்பல் களுக்கான மென்பொருள்களையும் கொள்வனவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த தமிழ் இளைஞரான சுரேஸ் ஸ்ரீஸ்கந்தராஜா கனேடிய நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

30 வயதான சுரேஷ் ஸ்ரீஸ்கந்தராஜா என்ற இந்த இளைஞர் 445 ஆயிரம் டொலர்கள் பிணையில் செல்ல நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் தமக்கு எதிரான குற்றச்சாட்டை ஆட்சேபித்து ஸ்ரீஸ்கந்தராஜா மேன்முறையீடு செய்துள்ளார். இந்த மேன்முறையீட்டை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதா? என்பது தொடர்பில் உயர்நீதிமன்றம் தீர்மானிப்பதற்கு இன்னும் 6 மாதங்கள் செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீஸ்கந்தராஜாவின் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு சிறைத்தண்டனை வழங்கப்படலாம் என கனேடிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

(த)

# நல்லிணக்க ஆணைக்குழுவில் புலிகளின் ஆதரவாளர்கள் சிலர்

**குணதாஸ அமரசேகர குற்றச்சாட்டு**

கொழும்பு,டிசெ.25

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவிற்குள்ளும் புலிகளின் ஆதரவாளர்கள் சிலர் இருப்பதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர குறிப்பிடுகின்றார்.

நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப் [illegible] டம் கூறியபோது இதிலென்ன சாட்சியமளிக்கவுள்ளதென தெரிவித்த அமைச்சர் புலிகளுக்கு ஆதரவானவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எமது கருத்துக்களுக்கு எதிரானவர்கள் என்று கூறியதாகவும் குணதாஸ அமரசேகர குறிப்பிட்டார்.

இலங்கையில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவிலுள்ள புலி ஆதரவாளர்கள் வெளிநாட்டிலிருந்து வரும் புலி ஆதரவாளர்களான நிபுணர் குழுவினருடன் இணைந்து செயற்பட்டால் எவ்வாறு நிலைமை அமையும் என்பதை புரிந்து கொள்ளமுடிகின்றது என்றும் அவர் கூறினார்.

அத்துடன் புலிகளின் புள்ளிகள் தான் அழிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனாலும் புலிகள் இன்னும் செயற்பட்டுக்கொண்டிருப்பதாகவும், அவர் குறிப்பிட்டார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இந்த கருத்துக்களைத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூசகர் தேவை

ஆலங்குளாய் முருகமூர்த்தி ஆலயத்தின் நித்திய பூசைகளையும், மகோற்சவ காலங்களில் உற்சவங்களை மேற்கொள்வதற்குமான ஆலய குருக்கள் தேவை. 05.01.2011 ற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். இல. 0775383892, 021 2240453, 0774814600

சம்பளம் பேசித் தீர்மானித்துக் கொள்ளமுடியும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
இ.பகீரதன் (தலைவர்),
ஆலங்குளாய்,சண்டிலிப்பாய்.

இங்ஙனம்
நிர்வாகத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



செட்டிச் சோலை ,
அளவெட்டியைச் சேர்ந்த
*பண்டிதர்*
*கனகர் நாகலிங்கம்*

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஜவா இன்ஜினியறிங்
கொன்ஸ்ரக்ஸன்
தெல்லிப்பழை

## கண்ணீர் அஞ்சலி

வலி.மேற்கு பிரதேச செயலக, வழக்கம்பரை சமுர்த்தி வங்கியில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.அகிலன் அவர்களின் பாசமிகு அருமைத்தாயார்

*திருமதி நாகலிங்கம் மகேஸ்வரி*

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
பிரதேச செயலகம்,
நலன்புரி சங்க அங்கத்தவர்கள்,
வலி.மேற்கு, சங்கானை.

(சி/574081)

## மரண அறிவித்தல்கள்



### முருகேசு சின்னத்துரை
(கார் இராசையாண்ணை, கொடிகாமம்)

மந்துவிலைப் பிறப்பிடமாகவும், கொயிலாமனையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சின்னத்துரை (கார் இராசையாண்ணை, கொடிகாமம்) நேற்று (24.12.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் பாசமிகு கணவரும் சற்குணரத்தினம் (சற்குணம்-அஞ்சலகம், கொடிகாமம்), யசோதரன் (யசோ - கமநல சேவை நிலையம், மீசாலை), சாந்தினி (லண்டன்), பவளராணி (சுவிற்ஸாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகதீஸ்வரி (ஆசிரியர், யா/வரணி மகா வித்தியாலயம், வரணி), சதானந்தி (கச்சாய்), உதயசூரியன் (லண்டன்), யோகானந்தன் (சுவிற்ஸலாந்து) ஆகியோரின் பாசமிகு மாமனும் பதுர்ஷிகன் (மாணவன், யா/வீரசிங்கம் மகா வித்தியாலயம்), தனுஷிகன் (மாணவன், யா/வீரசிங்கம் மகா வித்தியாலயம்), கேனுஜா (மாணவி, யா/வீரசிங்கம் மகா வித்தியாலயம்), அனோசா (லண்டன்), அனித்தா (லண்டன்), லட்ஸ்மிகா (சுவிஸ்), பானுசன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2010) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சோனகன் புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கொயிலாமனை, கொடிகாமம். சற்குணம் (மகன்), யசோ (மகன்).



### தம்பையா நாகலிங்கம்
*(ராணி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)*

கல்வியங் காடு நல்லூர் வடக்கு, இராஜ வீதியைச் சேர்ந்த தம்பையா நாகலிங்கம் நேற்று (24.12.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பையா - சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், இராமலிங்கம் வேலுப்பிள்ளை காலஞ்சென்ற சிவக்கொழுந்து ஆகியோரின் சகோதரரும், பிறேமராணி (இந்தியா), பிறேமச்சந்திரன் (ராணி ஸ்ரோர்ஸ் , உரிமையாளர்), பிறேமமாலா (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும், அகிலன், திரு திருமதி கிருபன், றமீமிகா (அவுஸ்திரேலியா), தனுசன் (இந்தியா, பல்கலைக்கழகம்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26.12.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.26,இராஜ வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்

## மகாசபை கூட்டம்

இணுவில் கந்தசுவாமி கோயிலின் மகாசபை வருடாந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய உள் மண்டபத்தில் நடைபெறும்.

தர்மகர்த்தா சபையின் தலை வர் செ.சோதிப்பெருமாள் தலை மையில் நடைபெறும் இந்த நிகழ் வில் அடுத்த 2 வருடங்களுக் கான செயற்திட்டங்கள் குறித்து ஆராயப்படும். அதே சமயம் நிர்வாகக் குழு வேட்புமனு ஏற்றலும் இடம் பெறும். (ஐ)

## கூடைப் பந்தாட்டம்; இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,டிசெ.25

யாழ். மாவட்ட கூடைப்பந் தாட்டச்சங்கம் மாவட்ட கூடைப் பந்தாட்ட ஆண், பெண் கழகங்களுக்கு இடையே யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந் தாட்ட மைதானத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரில்-

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடை பெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு :- கோப்பாய் வி.க. எதிர் யாழ்.சென்றலைற்ஸ் வி.க. 'ஏ' அணி, ஜெலிஸ்ரார் வி.க. 'ஏ' அணி எதிர் கே.சி.சி.சி. வி.க.

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.25

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் இன்று இடம்பெறவிருந்த கல்லூரியின் விசேட பொதுக்கூட்டம் ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் நாளை மறுதி னம் திங் கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத் தில் இடம்பெறும் என்று கல் லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ஐ)

## மரண அறிவித்தல்

### *தில்லையம்பலம் பிரதாப்சிங் (கிளி)*

பொன் கந்தையா வீதி, நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும்,பொது கிணறு வீதி, தோணிக்கல் வவுனியாவில் தற்பொழுது வசித்தவருமாகிய காலஞ்சென்ற தில்லையம்பலம் பிரதாப்சிங் (கிளி) நேற்று (24.12.2010) வெள்ளிக்கிழமை காலமானர்.

அன்னார் நெல்லியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற தில்லையம்பலம் - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், விமலசிங் (கனடா), காலஞ்சென்ற சோதிசிங் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுகந்தா, அஜந்தா (ஜேர்மனி), விஷ்ணு (உதவிப்பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி), காலஞ்சென்ற குமணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், முகுந்தன் (ஜேர்மனி), கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், ரிதன், புருசோத், அடலஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலை தோணிக்கல்லில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தோணிக்கல் பொது மாயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொது கிணறு வீதி,
தோணிக்கல்.வவுனியா
T.P.,0244907342.
(சி/574083)

தகவல்:
[illegible]

## பாராட்டு வாழ்த்து



அண்மையில் பெருமை மிக்க அரச விருதான 'கலாபூஷணம்' விருது மற்றும் 'கலைவாரிதி' ஆகிய பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட
பண்ணாகம்

*இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை*

அவர்களைப் பாராட்டுவதோடு அவர் மேன் மேலும் பல பட்டங்கள் விருதுகள் பெற்று நீடூழி காலம் வாழ வேண்டுமென்று விசவத்தனை வேலவரை வேண்டி நிற்கும்

அன்பு அம்மா, இரத்தினசிங்கம் - சிவபாக்கியம்,
பாசமுள்ள- தங்கைமார், தம்பிமார்,
மைத்துனர்மார், மைத்துனிமார், பெறாமக்கள்,
மருமக்கள், பிரான்ஸ், நோர்வே, லண்டன்.

மெயின் ரோட்,
பண்ணாகம்.(103334)
(107894)



ஜெய் குருதேவ்
ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்
THE ART OF LIVING

### வாழும் கலை பயிற்சி

(மூச்சு பயிற்சி, சுதர்சன கிரியா, பிராணாயாமா, தியானம்,யோகா)

**அறிமுக உரை 26 - 12 - 2010**

இடம்:-நெல்லியடி தடங்கன் புளியடி
முருகன் கோயில் கல்யாண மண்டபம்
நேரம்:- 5.00p.m. - 8.00p.m.
பயிற்சி நாள்:- 27.12.2010 - 31.12.2010
குறிப்பு:- ஏற்கனவே பயிற்சி பெற்ற அனைவருக்கும்
ஒருநாள் நினைவூட்டும் முகாம்
இடம்:- நெல்லியடி தடங்கன் புளியடி
முருகன் கோயில் கல்யாண மண்டபம்.
திகதி:- 26.12.2010 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:- 9.45a.m. - 5.45p.m. (மதிய உணவு வழங்கப்படும்)
தொடர்புக்கு:- 0776731056, 0770474757.

(106902)

## கடைத்திறப்பு விழா

### S.N. கிருஸ்ணா ஜுவல்ஸ் அன் நகைத் தொழிலகம்



கஸ்தூரியார் வீதியில் இயங்கிவந்த எமது நிறுவனம் மீண்டும் புதுப் பொலிவுடன் 74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் புதிய இடத்தில் இன்று சனிக்கிழமை (25.12.2010) முதல் வாடிக்கையாளர்களுக்கான சேவையினை வழங்கும் என்பதை அறியத்தருவதுடன் அத்தினத்தில் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்:
நாககிருஸ்ணா (காலேப்)

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி மாணிக்கம்
(புத்தூர் கிழக்கு, புத்தூர்)

புத்தூர் கிழக்கு, குமாரசாமி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மாணிக்கம் நேற்று (24.12. 2010) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வானையின் அன்புக் கணவரும், ராதாகிருஷ்ணன் (பிரதேச சபை உப அலுவலக நூலகம், நீர்வேலி), ஜெயாகிருஷ்ணன் (லண்டன்), விஜி கிருஷ்ணன் (கொலண்ட்), பத்மா, தங்கராணி, வசந்த குமாரி, சந்திரவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கராசா, யோகரத்தினம் (உப தபாற்கந்தோர், புத்தூர்), கண்ணதாசன் (பான்சிக் கடை, சுன்னாகம்), சுதாஸ் (புத்தூர்), கௌரி (கொலண்ட்), ரேமலா (அரசினர் வைத்தியசாலை, புத்தூர்), நளினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பூதத்தம்பி (ஓய்வூதியம்), இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.12.2010) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அந்திரானை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு புத்தூர். (107932)

தகவல்
மா.ராதாகிருஷ்ணன்
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இனத்தின் இருப்பைத் தக்கவைக்க......

எமது கலாசார பண்பாட்டு விழுமியங்களைச் சீர்குலைப்பதன்மூலம், எமது இனத்தின் தனித்துவங்களையும் பண்பாட்டின் ஆணி வேரையும் இழக்க வைப்பதற்காக அதிகார வர்க்கங்கள் முனைப்புக் காட்டி வருகின்றன. இதற்கு எமது சமூகத்தில் உள்ளவர்களும் துணை போவது எமக்குப் பெரும் வேதனை அளிக்கிறது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

குடாநாட்டில் இப்போது நடைபெறும் கோணல் கோலங்களில் கலாசாரச் சீரழிவு முதல் இடம் பெறுகிறது. அதுகுறித்து பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமன்றி எல்லோரும் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டிய அவசியமானதும் அவசரமானதுமான தேவை எழுந்துள்ளது.

ஓர் இனத்தின் தனித்துவத்தைப் பேணிக்காப்பதற்கு அதன் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு என்பனவும் அவற்றின் தனித்துவங்களுமே அடிப்படையானவை. அதனாலேயே உலகின் சகல இனங்களும் மேற்சொன்னவற்றைப் பேணிக் காப்பதில் அதிக அக்கறை காட்டுவது உண்டு.

வேற்று நாடுகளின் ஆட்சிக்காலங்களில், இலங்கைத் தமிழ் இனத்தவரான எமது முன்னோர்கள் பல படையெடுப்புகள், ஆக்கிரமிப்புகளின்போது மொழி, கலை, கலாசாரம், பண்பாடுகளை பல ஆபத்துக்கள், நெருக்கடிகளின் மத்தியிலும் காத்தனர். அதன் பொருட்டுத் தமது வாழ்நாளின் பெரும்பகுதியைப் பலரும் அர்ப்பணித்து உழைத்தனர்.

மாணவர் ஒன்றியம் தனது அறிக்கையில் சுட்டிக் காட்டுவது போன்று, இன்றுவரை எமது இனத்தின் பெருமைகள் காப்பாற்றப்பட்டதற்கு எமது கலாசார விழுமியங்களை தமது உயிர்போல் மதித்து மக்கள் பேணி வந்தமையே காரணம்.

ஆனால் இப்போது நிலைமை மாறி வருகிறது; வேறு திசையில் திரும்பியுள்ளது. குறிப்பாக இளைய சமுதாயத்தினர் எங்கள் கலாசாரம் என்றால் எது, எவ்வகையானது என்று கேட்கும் அளவுக்குப் புதிய சீரழிவுக்குள் சிக்கிக் கொண்டுள்ளனர். அவர்களை அவற்றின் பக்கம் இழுப்பதற்கான பல கபடத்தனமான "கவர்ச்சிகள்" கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

அவை மறைமுகமாகவும், வெவ்வேறு வடிவங்களிலும் சம்பந்தப்பட்ட சக்திகளால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. அவற்றின் தாக்கமும், அவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புகளும் தெரியாதவர்களாக இளையோர் ஈர்க்கப்படுகின்றார்கள். கலாசாரப் பிறழ்வுகளால் எதிர்காலத்தில் உண்டாகக்கூடிய பேராபத்தை அவர்கள் உணரும் வாய்ப்புக் குறைந்துகொண்டே வருகிறது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய தலையாய பொறுப்பு முதலில் பெற்றோருக்கும் அடுத்து ஆசிரியர்கள், சமூக அமைப்புகள், மூத்தோர்கள் ஆகிய சகல தரப்பினரினதும் கைகளில் தங்கியுள்ளது.

மாணவப் பருவம், கட்டிளமைப் பருவம், பொல்லாதது. தமக்குப் பிடித்த எதனையும் பெறவேண்டும், அனுபவிக்க வேண்டும் என்ற எதிர்மறை இயல்புடையது. ஆகையால் அவர்களை நல்வழி நடப்பதற்கு உந்து சக்திகளாக இருக்கவேண்டிய பெரும் பொறுப்பு மேற்குறிப்பிட்ட தரப்பினருக்கு உண்டெனினும் சமூகத்தின் ஏனைய சகலரும் ஒரே நோக்குடன், ஒரே வழியில் சங்கமித்துப் பணியாற்ற வேண்டிய அவசர தேவை எழுந்துள்ளது.

தீய சக்திகளின் திட்டமிடப்பட்ட பொறிக்குள் எமது இளைய சமூகம் விழுந்து எமது இனத்தின் தனித்துவத்தைப் பொசுக்கிவிட இடம் கொடுக்காதிருக்க வேண்டும் என்ற உணர்வும் மன எழுச்சியும் எல்லோரிடமும் பிறக்க வேண்டும்.

நாம் உண்டு, எமது காரியம் உண்டு, எமது விருப்பு வெறுப்புக்கு ஏற்பச் செயற்படுவோம். நாங்கள் எங்களுக்கே முத்திரையிட்ட சுயநலத்தையும் தாரண்மை இல்லாத போக்கையும் இப்போதாவது துறந்து, இளையோர் ஒவ்வாத வழி செல்வதைத் தடுப்பது தட்டிக் கழிக்க முடியாத கடமை என்று எண்ணிச் செயற்பட வேண்டும்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டிய பேராபத்தை உணர்ந்து அதிலிருந்து எமது இளையோரையும் இனத்தின் தனித்துவத்தையும் பாதுகாக்க சகல தரப்புகளும் மனங்கொள்ள வேண்டும்.

எமது இனத்தின் இருப்பையே இல்லாதாக்கும் மறைமுகச் சதிவலை விரிப்போரை இனங்கண்டு, அவர்களின் சூழ்ச்சி வலையில் விழாது எங்கள் இளையோரைக் காப்பாற்றினால் மட்டுமே நாம் ஓர் இனம் என்ற அடையாளத்துவத்தைத் தக்கவைக்க முடியும். இதனைக் குடாநாட்டில் வாழும் ஒவ்வொருவரும் தமது சொந்தப் பிரச்சினையாக, தமக்கு நேரும் பெரும் ஆபத்தாக உணர்ந்து செயற்படவேண்டும். எங்கும் எப்போதும் கருங்காலிகள் இருப்பார்கள். அவர்களையும் அவர்களது செயற்பாடுகளையும் இனங்காணுங்கள். உங்கள் இளையோரையும் விடலை வயதினரையும் ஈர்க்க, அவர்களின் வயதுக்கேற்ற கவர்ச்சிகளைக் கட்டவிழ்க்கும் சக்திகளின் பக்கம் செல்லவிடாது தடுத்தால் மட்டுமே எங்கள் இனத்தின் இருப்பைத் தக்க வைக்க இயலும். இதுவிடயத்தில் எல்லோரும் ஒருவழித் தடத்தில் ஒருமித்துச் செயற்பட மனம் கொள்வோமாக.

# யாழ். நவீன சந்தைப் பகுதியில் புதிய ஐந்து மாடிக் கட்டடம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ். நகரப்பகுதியில் உள்ள நவீன சந்தைக் கட்டடப் பகுதியில் புதிய ஐந்து மாடிக் கட்டடத் தொகுதி ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளபடவுள்ளது.

இது தொடர்பாக வர்த்தகப் பெருமக்களதும், பொதுமக்களதும் கருத்துக்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரடியாகக் கேட்டுத் தெரிந்து கொண்டுள்ளார்.

எதிர்வரும் பொங்கல் தினத்திற்குப் பின்னரும் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐந்து மாடிக் கட்டடம் தொடர்பாக வெளிநாட்டு முதலீட்டாளர்களுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர சபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

நவீன சந்தைக் கட்டடங்களை அழித்து விட்டு அந்த இடத்தில் நவீன முறையில் ஐந்து மாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

தற்போது அதில் கடைகள் வைத்திருப்பவர்களுக்கு தற்காலிக கடைகளை அமைத்துக் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

அழகு சாதனக் கடைகள் மின்சார நிலைய வீதியிலும், வெற்றிலை, சில்லறைக் கடைகள் யாழ். முற்ற வெளிப்பகுதியிலும் தற்காலிகமாக அமையும்.

புதிய ஐந்து மாடிக்கட்டடம் ஆரம்பிக்கப்பட்டு ஒன்றரை வருடங்களில் பூர்த்தியாகும்.

இப் பகுதிகளில் முன்னர் கடை வைத்திருந்தவர்களுக்கு புதிய மாடிக்கட்டடத்தில் கடைகள் வழங்கப்படும் எனவும் மேலும் தெரிவித்தார்.

யாழ். வணிகர் கழக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஐந்து மாடிக் கட்டடம் அமைத்தல் தொடர்பான கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வர்த்தக நிலையங்களின் பிரதிநிதிகள், மாநகர வருவாய்த் துறை உத்தியோகத்தர்கள், மாநகர சபையின் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.(ம-7)

# இலங்கைத் தமிழ் மக்கள் மீது ராகுலுக்கு காலம் கடந்த ஞானம்

### கலாநிதி விக்கிரமபாகு கிண்டல்

கொழும்பு,டிசெ.25

இலங்கைத் தமிழ் மக்கள் மீது ராகுல் காந்திக்கு காலம் கடந்த ஞானம் ஏற்பட்டுள்ளதாகத் தான் கருதுவதாக இடதுசாரி விடுதலை முன்னணியின் தலைவர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழ் நாட்டுக்கு இருநாள் பயணத்தை மேற்கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி அங்கு இலங்கைத் தமிழ் மக்கள் மீதான அக்கறையை வெளியிட்டுள்ளார். இதன் மூலம் தமிழ் மக்கள் பிரச்சினையை அவர் உணர்ந்துள்ளதுடன் தீர்க்கப்பட வேண்டியுள்ளது என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

இது காலம் கடந்த ஞானமென்றே நான் கருதுகின்றேன். இன்றைய பேரினவாத ஆட்சியாளர் நிலைபெறுவதற்கும் பேரினவாதத்தை உச்சரிப்போருக்கும் இந்திய அரசே பக்கபலமாக இருந்தது. இது வெளிப்படையானதாகும்.

மேலும் போர் உச்சக் கட்டம் அடைவதற்கு முன் உண்மையில் இந்திய அரசு கூறுவது போன்ற விடுதலைப்புலிகள் பயங்கரவாதத்தை நினைத்திருந்தால், தனியாகக் கையாண்டிருக்கலாம்.

எது எப்படியாயினும் அவர்களைச் சுற்றியுள்ள இலங்கைத் தமிழ் அரசியல் கட்சிகளின் அணியுடன் இலங்கை அரசை பேச்சுவார்த்தை நடத்த வைத்து ஒரு அதிகாரப் பகிர்வு நிலையை நோக்கி முன்னேறியிருந்தால் விடுதலைப் புலிகள் தனிமைப்படுத்தப் பட்டிருப்பர்.

**இந்தியாவின் சாதனை**

ஆனால், எதையும் இந்திய அரசு செய்யவில்லை. மாறாக இலங்கையின் பேரினவாதத்துக்கு முற்றுமுழுதாக ஆதரவினை வழங்கியதுடன் தமிழ் மக்களின் ஆதரவுப் போராட்டத்தை முற்றுமுழுதாக அழித்ததே இந்தியாவின் சாதனையாகும்.

13 ஆவது அரசியல் திருத்தத்துக்கு மேல் அதிகாரத்தை வழங்குவதன் மூலம் தமிழ் மக்களைத் தமது பக்கம் கவர்ந்திழுக்க முடியும். அதனை அவர்கள் செய்யவில்லை.

தற்போது இந்திய அரசைப் பார்க்கின்ற போது மாதன முத்தாவின் கதையே ஞாபகம் வருகின்றது. முதலில் ஆட்டைக் கொன்று பானையை உடைத்ததாகவே தமிழ் மக்களின் பிரச்சினை மாறியுள்ளது - என்றார்.

# கரும் பலகைகளுக்கு இனி விடுதலை பச்சை நிறப் பலகைகள் வருகின்றன

கொழும்பு, டிசெ.25

பாடசாலைகளில் கரும் பலகைகளுக்குப் பதிலாக பச்சை நிறப் பலகைகளைப் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கரும்பலகைகள் சிறுவர்களின் கண்களைப் பாதிக்கும் என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கமைவாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மருத்துவ நிபுணர்களின் கருத்தின் பிரகாரம் ஆசிரியர்கள் பச்சை நிறப் பலகைகளை வெள்ளை நிறத்தினால் எழுத வேண்டும் என்று கூறிய அமைச்சர் தற்பொழுது கொரியாவிலிருந்து மூவாயிரம் பச்சை நிறப் பலகைகள் தருவிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் முப்பதாயிரம் ரூபா மதிப்பிலானவை-என்றார். முதலில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இந்தப் பலகைகள் விநியோகிக்கப்படவிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். (ப)

# அமைச்சர் விமலின் கட்சியில் விரிசல் விரிவடைகிறது

கொழும்பு, டிசெ.25

அமைச்சர் விமல் வீரவன்சவின் ஜாதிக நிதஹஸ் பெரமுன (தேசிய சுதந்திர முன்னணி) கட்சியில் ஏற்பட்டுள்ள விரிசல் மேலும் விரிவடைந்துள்ளது.

இதன் விளைவாகக் கட்சியின் இன்னொரு முக்கிய தலைவரான ஜாகொட என்பவர் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

2008ஆம் ஆண்டு ஜாதிக விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) யிலிருந்து விமல் வீரவன்சவுடன் இணைந்து வெளியேறியவர்களில் ஜாகொடவும் ஒருவர். ஜே.வி.பி யின் பொதுச் செயலாளர் பிரியாஜித் விதாரணவுடன் தொடர்பு கொண்டு இது பற்றி விசாரித்த போது ஜாகொட வெளியேற்றப்பட்டமை குறித்து உறுதிப்படுத்த மறுத்த அவர் கட்சியின் கோட்பாடுகளுக்கு மாறாக எவர் நடந்து கொண்டாலும் அவர் மீது கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ப)

## நாளை

மார்கழி 11 26.12.2010
ஞாயிற்றுக்கிழமை

| | |
|---|---|
| திதி: | சஷ்டி பி.இ. 03.56.44 வரை |
| நட்சத்திரம் | மகம் [illegible] வரை |
| [illegible] | 09.27-10.57 வரை |
| ராகுகாலம் | 04.57-06.27 வரை |

### ஆழிப்பேரலையில் உயிரிழந்தவர்களுக்காக

# நாளை நாடு முழுவதும் 2 நிமிட நேர மௌனம்

கொழும்பு,டிசெ.25

ஆழிப் பேரலையில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நாடு முழுவதிலும் நாளை இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

காலை 9.25 மணி தொடக்கம் 9.27 மணி வரை இந்த மௌன அஞ்சலியை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆழிப்பேரலை அனர்த்தத்தை நினைவு கூரும் முகமாக அனுஷ்டிக்கப்படும் தேசிய பாதுகாப்புத் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணம்-வீரசிங்கம் மண்டபத்தில் நாளை நடைபெறவுள்ளன. பிரதமர் டி.எம். ஜயரட்ன தலைமையில் இந் நிகழ்வு இடம்பெறவுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்றுத் தெரிவித்தது.

தேசிய பாதுகாப்புத் தின நிகழ்வுகள் வடக்கில் இடம்பெறுவது இதுவே முதல் தடவையாகும். இதன்போது யுத்தத்தில் உயிரிழந்த இராணுவத்தினரும் நினைவுகூரப்ப டுவர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.(ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்படையின் 60ம் ஆண்டு பூர்த்திக்கான வாழ்த்தும் - 26.12.2010 இல் யாழ் மாவட்டத்தில் அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டாடப்படும் தேசிய பாதுகாப்புத் தினத்திற்கான வாழ்த்தும்





### வடக்குக் கடற்படைக் கட்டளைத் தளபதி
## றியர் அட்மிரல் எஸ்.எம்.பீ.வீரசேகர
### அவர்களின் வாழ்த்துச் செய்தி

இலங்கைக் கடற்படையின் 60ம் ஆண்டு நிறைவையொட்டி நயினாதீவு மக்களினாலும், படகு உரிமையாளர்களினாலும் வெளியிடப்படும் இவ் வாழ்த்து வெளியீட்டிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். எமது இலங்கைத் திருநாட்டின் தலைவரான அதி உத்தம ஜனாதிபதி மேதகு மகிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆணையின் கீழ் இயங்கும் கடற்படையின் வடக்குக் கட்டளைத் தளபதியாக பணிபுரி-வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இப் பகுதி மக்களின் அபிவிருத்தியில் இலங்கைக் கடற்படை தற்போது சேவையாற்றுவது போன்று என்றும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் என்பதனைக் கூறுவதில் நான் பெருமையடைகின்றேன்.

மேலும் வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து முதன் முதலில் தீவுப் பகுதியிலேயே மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டார்கள். அப்போது கடற்படை அதிகாரிகளும், சிப்பாய்களும் சிறந்த முறையில் பணிபுரிந்தார்கள். அச் சந்தர்ப்பத்தில் இப் பகுதியில் பணியாற்றும் சகல உதவி அரசாங்க அதிபர்களும் சிறப்பாக பணியாற்றினார்கள். குறிப்பாக வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் அப்போதைய கஞ்சதேவ (வேலணை) கடற்படைத் தளபதி கப்டன் சமரசிங்க அவர்களுடன் இணைந்து சிறப்புற பணியாற்றினார்.

அத்துடன், இவ் வருடம் தேசிய பாதுகாப்புத் தினம் 26.12.2010 அன்று யாழ் மாவட்டத்தில் கொண்டாடப் படுவதனையொட்டி யாழ் மாவட்ட மக்களுக்கும், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.இமெல்டா சுகுமார் அவர்களுக்கும், அவர்களது உத்தியோகத்தர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இறுதியாக, நாட்டில் தற்போது எட்டப்பட்டுள்ள சமாதான சூழலினை நாம் அனைவரும் இன, மத, மொழி பேதமின்றிக் காப்பாற்ற வேண்டும் எனக் கூறி விடைபெறுகின்றேன்.

S.M.B.Weerasekara,
RSP, USP, ndu, psn
(Rear Admiral, Deputy Chief of staff &
Commander Northern Naval Area)



### நயினாதீவு நாகவிகாரை பீடாதிபதி
## வண.நவதகல பதுமகீர்த்தி தீஸ்ஸ தேரோ
### அவர்களின் வாழ்த்துச் செய்தி

நாகபூஷணி அம்பிகையின் அருளும் புத்த பெருமானின் அருளும் மேலோங்கி நிற்கும் இம் மணித் தீவிலே புத்த பெருமான் கி.மு. 523-583 இற்கு இடையில் நாகதீவில் நாகவழிபாடாற்றி இருக்கின்றார் என்ற தத்துவத்தோடும் இந்தியாவில் இருந்து தர்மசோக மகாராசா புத்திர சோகத்தால் வருந்தி நாக வழிபாடாற்றி புத்திர பேறடைய நாகதீவு வந்தார் என்றும்,

அபுத்திரன் அட்சய பாத்திரத்தை கோமுகிப் பொய்கையில் இட்டுச் சென்றார் என்ற தத்துவங்களுடனும் சிறப்புற்று விளங்குகின்ற இத் தீவில் இருந்து கடற்படையினரின் 60வது ஆண்டு நிறைவினையொட்டி எனது வாழ்த்துக்களை இம் மக்களுடன் இணைந்து தெரிவிப்பதில் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அந்த வகையில் நாட்டின் தலைவரும், முப்படைகளின் தளபதியுமான அதியுத்தம ஜனாதிபதி அவர்களுக்கும், இலங்கைக் கடற்படைத் தளபதியிற்கும், அவரது படையணிகளக்கும் எனது இதய பூர்வமான ஆசிகளை வழங்குகின்றேன்.

**நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ தேரோ, (J.P - All Island)**
பீடாதிபதி, நாகதீப விகாரை, நயினாதீவு.



### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆயை அறங்காவலர் சபைத் தலைவர்
## திரு.ஆ.தியாகராசா
### அவர்களின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண சிவில் நிர்வாகத்துடன் முற்றாகத் தொடர்பு அற்ற நிலை தீவுப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டதை யாரும் மறக்க முடியாது. இந்தச் சூழ்நிலையில் காரைநகர் கடற்படைக்கு அப்போது வேலணை உதவி அரசாங்க அதிபரான என்னை அழைத்து அத்தியாவசிய சேவைகள் நாயகம் அவர்கள் சகல நிர்வாகப் பொறுப்புக்களையும் என்னிடம் ஒப்படைத்து கடற்படை மூலம் கப்பல், கப்பலாக வேண்டிய உணவு, மற்றும் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் நயினாதீவில் களஞ்சியப்படுத்தி, மண்டைதீவு முதல் சகல தீவு மக்களுக்கும் கிராம அலுவலர்களின் உதவியுடன் வழங்கி, அப்போதைய அவலத்தை போக்குவதில் கடற்படையினர் வழங்கிய பாரிய சேவையினை யாரும் மறக்க முடியாது.

மிக மிக ஒரு இக்கட்டான காலகட்டத்தில் தீவக மக்களுக்கு சிறப்பாக சேவையாற்றிய கடற்படை தனது அறுபதாவது ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்யும் இவ்வேளையில் தனது எதிர்காலத்திலும் இச் சமூகசேவையினைத் தொடரவும், மக்களின் மனதில் நிலைத்து நிற்கவும், என்றும் எம் குல தெய்வமாகிய அன்னை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி தாழ் பரவி வாழ்த்துகின்றேன்.

**திரு.ஆ.தியாகராசா,**
தலைவர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய
அறங்காவலர் சபை.

### யாழ்ப்பாண அரசாங்க அதிபர்
## திருமதி.இமெல்டா சுகுமார்
### அவர்களின் வாழ்த்துச் செய்தி



எமது இலங்கைத் திருநாட்டின் அதிஉத்தம ஜனாதிபதி மேதகு மகிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் இலங்கைக் கடற்படையினர் எமது நாட்டில் அமைதியையும், நிரந்தர சமாதானத்தினையும் நிலை நிறுத்துவதற்கு தமது சிறப்பான பங்களிப்பினை வழங்கியிருந்தார்கள். தற்போது எமது நாட்டிற்கு கிடைத்துள்ள இச் சமாதான சூழலினைப் பயன்படுத்தி எமது பிரதேசங்களை நாம் அபிவிருத்தி செய்வதில் உறுதி பூண வேண்டும்.

2006 ஆம் ஆண்டு யாழ் குடாநாட்டிற்கான தரைவழிப் பாதை துண்டிக்கப்பட்ட போது கடல் வழியாக பொது மக்களிற்கு உணவுப் பொருட்கள் உட்பட்ட அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு வருவதற்கு கடற்படையினரே முற்று முழுதாக பணியாற்றினார்கள் என்றால் மிகையாகாது.

அந்த வகையில் வடக்குக் கட்டளைத் தளபதி றியர் அட்மிரல் எஸ்.எம்.பீ.வீரசேகர அவர்களும், கடற்படையினரும் இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சேவையாற்றி வருகின்றனர். முக்கியமாக தீவுப்பகுதி மக்களின் கடற்பயணத்தின் போது அவர்களின் பாதுகாப்பு விடயத்தில் மிகுந்த கரிசனையும், பொறுப்பும் எடுத்துக் கொள்கின்றார்கள். அதனடிப்படையில் நெடுந்தீவு கடற்படைக் கட்டளை அதிகாரி, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் மு.நந்தகோபாலனூடாக என்னிடம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் 300 உயிர் பாதுகாப்பு அங்கிகள் நெடுந்தீவு மக்களின் கடற்பயணத்தின் போது பாவிப்பதற்கு தேசிய பாதுகாப்பு தின நிகழ்வில் அவர்களிடம் அதியுத்தம ஜனாதிபதி அவர்களினால் வழங்கப்பட உள்ளது.

இத் தருணத்தில் இலங்கைக் கடற்படைத் தளபதியுடன், நாங்களும் இணைந்து அவர்களின் 60வது ஆண்டு நிறைவிற்கு எமது மகிழ்ச்சியினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.இமெல்டா சுகுமார்,**
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலர், யாழ்ப்பாணம்.

### தீவகம் தெற்குப் பிரதேச செயலர்
## திரு.மு.நந்தகோபாலன்
### அவர்களின் வாழ்த்துச் செய்தி



தற்போது நான் வேலணைப் பிரதேச செயலராகப் பணிபுரிவதோடு, நெடுந்தீவின் பதில் உதவி அரசாங்க அதிபராகவும் பணிபுரியும் இச் சந்தர்ப்பத்தில் இலங்கைக் கடற்படையின் 60ம் ஆண்டு பூர்த்தி விழாவிற்கு வாழ்த்துரை என்னிடம் கோரப்பட்டு, நான் வழங்குவது மிகவும் பொருத்தமான ஒன்று என கருதுகின்றேன். காரணம், கடற்படையின் சேவை பிரதானமாக தீவுப் பகுதி மக்களுக்கே கிடைக்கின்றது. சகல தீவுகளிலும் சிவில் நிர்வாகத்தினை அமுல் படுத்துவதில் கடற்படையினர் தமது பூரண பங்களிப்பினை வழங்கி வருகின்றனர்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூ'ணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் போது கடற்படையினர் வழங்கும் பங்களிப்பு மிகவும் காத்திரமானது. தற்போது நயினாதீவு ஸ்ரீ நாகபூ'ணி அம்மன் ஆலயத்திற்கும், நயினாதீவு ஸ்ரீ ரஜமஹா விகாரைக்கும் சென்றுவரும் இந்து, பௌத்த யாத்திரீகர்களின் கடற்பயணப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் இலங்கைக் கடற்படையினர் கால, நேரம் பாராது பணியாற்றி வருகின்றார்கள்.

விசேடமாக 2009ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 05ம் திகதி வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து மக்களை பொறுப்பெடுப்பதற்கு கடற்படையினர் சம்மதித்ததன் பெயரில் முதன் முதலில் யாழ் மாவட்டத்தில் தீவுப் பகுதியிலேயே மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டார்கள். அச் சந்தர்ப்பத்தில் இலங்கைக் கடற்படையின் வேலணை (கஞ்சதேவா) கடற்படைத் தளத்தின் கட்டளை அதிகாரி கப்டன் சமரசிங்க அவர்களும், அவரின் கீழ் பணியாற்றிய கடற் படையணியினரும் பொது மக்களினை மீளக் குடியமர்த்துவதில் சிறப்பான முறையில் பணியாற்றினார்கள்.

தற்போது வடகடல் கட்டளைத் தளபதியாகவும் கடற்படையின் பிரதிப் பிரதம அதிகாரியாகவும் பணியாற்றி வரும் றியர் அட்மிரல் எஸ்.எம்.பீ.வீரசேகர அவர்கள் பழகுவதற்கு இனியவராகவும்,தேவையான வேளைகளில் எமக்கு உதவிகளை வழங்குபவராகவும் காணப்படுகின்றார். இன்றைய தினத்தில் இலங்கைக் கடற்படையின் 60 வது ஆண்டுப் பூர்த்தி விழாவிற்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.அத்தோடு 26.12.2010 கொண்டாடப்படும் தேசிய பாதுகாப்புத் தினத்திற்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முத்துலிங்கம் நந்தகோபாலன்,
பிரதேச செயலர், தீவுகள் தெற்கு, வேலணை.

### நயினாதீவு படகு உரிமையாளர் சங்கத்தலைவர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

எமது நாட்டின் இலங்கைக் கடற்படையின் 60வது ஆண்டு நிறைவு விழாவிற்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் எமது சங்கத்தின் சார்பில் எனது மகிழ்ச்சியினை தெரியப்படுத்துகின்றேன்.



எமது படகு உரிமையாளர்களின் எந்தக் கோரிக்கைகளாயினும் சாதகமாகப் பரிசீலித்து எமக்குக் கடற்படையினர் தங்களின் ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றனர். எமது பகுதி பெருநிலப்பரப்புடன் தொடர்பற்று மிகவும் கடினமான சூழ்நிலையில் இருந்த போது இலங்கைக் கடற்படை தீவுப்பகுதி மக்களுக்கு ஆற்றிய உதவிகளை என்றும் மறந்து விட முடியாது. இலங்கைக் கடற்படையினருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சி.தனபாலசிங்கம்,**
தலைவர், படகு உரிமையாளர்கள் சங்கம், நயினாதீவு.

## வாழ்த்துபவர்கள்: நயினாதீவு மக்களும், படகு உரிமையாளர்களும், தீவுப்பகுதி தெற்கு மக்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 ஆண்டுகளின் பின் குடாநாட்டில் பௌத்த - தமிழ்ச் சங்கத்துக்கு மீள் உயிர்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ். மாவட்ட பௌத்த - தமிழ்ச் சங்கம் 30 வருடங்களின் பின்னர் மீண்டும் இயங்கவுள்ளது. அதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சங்கத்தின் இணைப்பாளர் அருள்நேசரத்தினம் ரவிக்குமார் தெரிவித்தார்.

1952ஆம் ஆண்டு நிஷங்க விஜயரட்ண என்பவர் யாழ். மாவட்ட அரச அதிபராக இருந்த காலத்தில் பௌத்த - தமிழ் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் அந்தச் சங்கத்தின் தலைவராக யாழ்.புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த எஸ்.வைரமுத்து நியமிக்கப்பட்டிருந்தார். இன்றுவரை அவர்தான் தலைவராக கடமையாற்றி வருகின்றார். இப்போது அவருக்கு வயது 93. வயோதிபத் தளர்வால் அவர் இப்போது செயற்பட முடியாதவராக உள்ளார்.



யாழ். மாவட்ட தமிழ் பௌத்த சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றிய எஸ்.வைரமுத்துவின் சேவையினைப் பாராட்டி அகில இலங்கை பௌத்த காங்கிரஸினால் வழங்கிய நினைவுப்பரிசினை சங்கத்தின் இணைப்பாளர் அருள்நேசரத்தினம் ரவிக்குமார் நேற்றுக் கையளித்தபோது எடுக்கப்பட்டபடம்.

''யுத்த சூழ்நிலையினால் இந்தச் சங்கத்தின் செயற்பாடுகள் முடங்கிப்போயிருந்தன. தற்போது ஏற்பட்டுள்ள சுமுகமான சூழ்நிலையினைக் கருத்திற்கொண்டு அதனை மீண்டும் யாழ்ப்பாணத்தில் இயக்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளோம்'' - என்கிறார் புதிய இணைப்பாளர்.

யாழ்.நாகவிகாரையைத் தலைமைப்பீடமாகக்கொண்டு இயங்கிய இந்தச் சங்கத்திற்கு அச்சுவேலி, புத்தூர், கரவெட்டி ஆகிய இடங்களில் கிளை அலுவலகங்கள் காணப்பட்டன என்று கூறப்படுகின்றது.

சுமார் 100 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு இயங்கிய இந்தச் சங்கத்தின் ஊடாக பௌத்த தர்மத்தை போதிக்கும் பாடசாலையொன்றை மானிப்பாயில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. "இதில் மாணவர்கள் இன, மத வேறுபாடின்றி பௌத்த தர்மத்தை கற்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்படும்'' - என்றார் ரவிக்குமார்.

தமிழ் மக்களதும் பௌத்த மக்களதும் உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு இந்தச் சங்கம் முழுமையான பங்களிப்பினை மேற்கொள்ளும் எனவும் அவர் கூறினார்.

பௌத்த, தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகள் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-9)

## வாழ்க்கைச் செலவுப்படி ரூ. 300 ஜனவரி முதல் ஓய்வூதியருக்கு

தென்மராட்சி, டிசெ. 25

அரசின் வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி ரூபா 300ஐ வழங்குவதற்கான சுற்றறிக்கை ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கையில் 2011 ஜனவரி மாதம் தொடக்கம் ஓய்வூதியர்களின் வாழ்க்கைச் செலவுப் படியாக 2 ஆயிரத்து 675 ரூபாவை வழங்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களுக்குத் தற்போது வாழ்க்கைச் செலவுப் படியாக மாதாந்தம் 2 ஆயிரத்து 375 ரூபா வழங்கப்படுகிறது. (உ-207)




## திருடப்பட்ட ஆலய முடிகள்

நவாலி,டிசெ.25

ஆனைகோட்டை மூத்த விநாயகர் ஆலய விக்கிரகங்களிலிருந்து திருடப்பட்ட வெள்ளி முடிகள், குடைகள் ஆலய பூந்தோட்டப் பகுதியிலிருந்து மானிப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை திருவெம்பாவை பூசை முடிந்த பின்னர் மீண்டும் மாலை நேரப் பூசைக்காக ஆலயத்துக்குள் ஆலய குருக்கள் சென்ற போது அங்கு வசந்த மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த விக்கிரகங்கள் மீதிருந்த பொருள்களைக் காணாது அதிர்ச்சிடைந்தார்.

இது தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் மானிப்பாய் பொலிஸில் முறைபாடு செய்துள்ளதைத் தொடர்ந்து ஆலயத்தில் காவலாளியாகப் பணிபுரிந்து வந்த தென்பகுதியைச் சேர்ந்த நபரைச் சந்தேகத்தின்பேரில் பொலிஸார் அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணைகளைத் தொடர்ந்து ஆலயப் பூந்தோட்டத்திற்குள் உரப்பைகளில் சுற்றி மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் அனைத்தும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஆலய திருவிழா முடிந்தவுடன் இந்தப் பொருள்களை ஆலய குருக்கள் கழற்றி எடுத்து பாதுகாப்பாக வைக்காது விட்டவர்களின் பொறுப்பற்ற தன்மையைக் காட்டுவதாக மக்கள் மத்தியில் கடும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (201-100)

## சட்டவிரோத மதுபான உற்பத்தியாளர்கள் யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் குறைவு

### மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடத்தை விட இந்த வருடம் சட்டவிரோத மதுபான உற்பத்தியாளர்கள் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி எஸ்.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கடந்த வருடம் 227 குற்றவாளிகள் இனங்காணப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இந்த வருடம் 185 குற்றவாளிகள் இனங்காணப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது 19 லட்சத்து 52 ஆயிரத்து 750 ரூபா அபராதமாக நீதிமன்றம் தண்டப்பணம் செலுத்துமாறு பணித்துள்ளது.

சட்ட விரோத மதுபாவனை உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை குறைவதற்குக் காரணம் நீதிமன்றத்தால் தண்டப்பணம் அதிகரிக்கப்பட்டமை, பொலிஸார் மற்றும் மதுவரித் திணைக்களத்தினரின் விழிப்புணர்வான கடமை, பொதுமக்கள், கிராம சேவையாளர்கள் எமக்கு இனங்காட்டித் தந்தமையே இவற்றுக்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் தீவகப் பிரதேசங்களில் தான் அதிகமானோர் சட்ட விரோத மதுபாவனை உற்பத்தியைச் செய்கின்றனர். கூலி, கற்றொழில்போன்றதொழில்களைச் செய்வோர் மதுபானத்திற்கு அடிமையானதே இவற்றுக்குக் காரணம் என மேலும் தெரிவித்தார் அவர். (201-313-311)

## 84 கிலோ மீற்றர் நீளமான வீதி சீன அரசின் நிதியுதவியில் அகலிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ். குடாநாட்டில் 84 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் சீன அரசின் நிதி உதவியுடன் அகலிக்கப்படவுள்ளதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

சீன அரசின் நிதி உதவியுடன் 17.31 கிலோ மீற்றர் நீளமான யாழ்.- பலாலி வீதி, 34.15 கிலோ மீற்றர் நீளமான யாழ்.- பருத்தித்துறை வீதி, 13.68 கிலோ மீற்றர் நீளமான புத்தூர் - மீசாலை வீதி ,18.49 கிலோ மீற்றர் நீளமான யாழ். - காங்கேசன்துறை வீதி என்பவையே இவ்வாறு அகலிக்கப்படவுள்ளன.

இலங்கை அரசினால் 17.23 கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்படவுள்ளது.

2.56 கிலோ மீற்றர் நீளமான சுண்டுக்குளி- கொழும்புத்துறை வீதி, 3.62 கிலோ மீற்றர் நீளமான கச்சேரி - கடற்கரை - கோட்டை வீதி, 3 கிலோ மீற்றர் நீளமான யாழ். - மானிப்பாய் - காரைநகர் வீதி, ஒரு கிலோ மீற்றர் நீளமான யாழ். - பொன்னாலை - பருத்தித்துறை வீதி, 2.41 கிலோ மீற்றர் நீளமான ஒட்டுமடம் வீதி, 1.21 கிலோ மீற்றர் நீளமானநாவாந்துறை-ஒட்டுமடம்வீதி, 3.43 கிலோ மீற்றர் நீளமான சங்கிலியன் தோப்பு- செம்மணி வீதி என் பனவே இவ்வாறு புனரமைக் கப்படவுள்ளன. (ம-15)

## விசேட தேவையுடைய மாணவர் கற்க வடமராட்சியில் மூன்று பாடசாலைகள் தெரிவு

வடமராட்சி, டிசெ.25

வடமராட்சிப் பிரதேசத்தில் வாழும் விசேடதேவையுடைய மாணவர்கள் கல்விகற்பதற்கு மூன்று பாடசாலைகளில் எதிர்வரும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி அனுமதி வழங்கப்படவுள்ளது.

இந்த மாணவர்கள் கற்பதற்கென கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன்பாடசாலை ஆகிய பாடசாலைகள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளன. அப்பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்களுக்காக கல்வி போதிக்க விசேடமாகப் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் மருத்துவத் தேவைகளுக்கும் என ஒரு லட்சத்து 27 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள், கல்விச்சுற்றுலா, பயிற்சிப்பட்டறை என்பனவற்றுக்கு 80 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதவிர கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் விசேட கல்வித்தேவைகளுக்காக 2 லட்சத்து 50ஆயிரம் ரூபா கல்வியமைச்சினால் வழங்கப்பட்டு புனருத்தாரண வேலைகள் இடம்பெற்றுவருகின்றன. (201-236)

## தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு புல்லுக்குளத்தில் சல்பீனியா அகற்றும் பணிகள்



புல்லுக்குளத்தில் சல்பீனியா அகற்றப்பட்டு அப்பகுதி துப்புரவு செய்யப்படுகிறது.

யாழ்ப்பாணம், டிசெ.25

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் யாழ். வருகையை முன்னிட்டு வீரசிங்கம் மண்டபத்துக்கு அருகிலுள்ள புல்லுக்குளத்தில் படர்ந்திருந்த சல்பீனியா தாவரங்களை அகற்றும் பணி வேகமாக இடம்பெற்று வருகிறது.

தேசிய பாதுகாப்புத் தினத்தில் கலந்து கொள்வதற்காக நாளை ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். தேசிய பாதுகாப்புத் தின நிகழ்வுகள் யாவும் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறுவதற்கு ஏற்பாடாகியுள்ளன.

இதன் காரணமாக யாழ். வீரசிங்கம் மண்டபத்தை சுற்றியுள்ள வீதிகள் மற்றும் சுற்றாடல்கள் என்பன மிக வேகமாக துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை காலமும் புல்லுக்குளத்தில் படர்ந்திருந்த சல்பீனியா தாவரத்தினை படகு மூலம் சென்றே அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

தற்போது அந்தப்பணிகளை விரைவுபடுத்துவதற்காக 'கிறெய்ன்' மூலம் அங்கு படர்ந்திருந்த சல்பீனியா தாவரம் அகற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (201-15-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிய அடிப்படையில் பசு வளர்ப்புத்திட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக் களத்தின் ஏற்பாட்டில் 'செயற்கைமுறைச் சினைப்படுத்தல்' சேவைமூலம் பிறக்கும் பசுக்கன்றுகளுக்கு 18 மாதம் வரை புதிய மானியத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பிறக்கும் நாகு கன்றுகளுக்கு 18 ஆயிரத்து 482 ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப் படவுள்ளதாக யாழ்.கால்நடை உற்பத்திச் சுகாதார திணைக் களத்தின் உதவிப்பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

எனவே மாடு வளர்க்கும் பண்ணையாளர்கள் செயற்கை முறைச் சினைப்படுத்தலை மேற்கொண்டு உரிய பலனைப் பெற்றுக்கொள்ளுமாறும், மேலதிக விவரங்களுக்கு உரிய கால் நடை வைத்திய பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ற)


## மாபெரும் மலிவு விற்பனை

யாழ்.நகரில் பாடசாலை உபகரணங்கள் மற்றும் குழந்தைகள், பெரியவர்களுக்கான ஆடை வகைகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படவுள்ளன.
25.12.2010 முதல் 31.12.2010 வரை காலை 7 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இல.374, 376, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
(145, பெரிய முஹிதின் ஜும்மா பள்ளிவாசல் முன்பாக) விற்பனை செய்யப்படவுள்ளன. (107895)

## துரித வகுப்புகள் (Intensive Classes)

**இலங்கை திறந்த பல்கலைக்கழக LLB பாடநெறிக்கான நுழைவுத் தேர்வுக்கான துரித பயிற்சி வகுப்புகள்**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் (LLB- Open University 2011- 2012) நடத்தப்படவுள்ள பட்டமாணிக் படிப்புக்கான நுழைவுத் தேர்வுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகள் யாழ்ப்பாணப் பரீட்சார்த்திகளின் நன்மைகருதி Cambridge Management College, 23 Kachcheri- Nallur Road, இல் வார விடுமுறை நாள்களில் ஆரம்பமாகவுள்ளன. மாணவர்களின் நன்மை கருதி தேவைப்படின் மாலை நேரவகுப்புக்களுக்கு ஒழுங்கு செய்யப்படும். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தைமாதம் 16ஆம் திகதி** நடைபெறும் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான இவ்வகுப்புகள் சட்டவல்லுநர்களினால் நடத்தப்படும்.

**மேலும் விவரங்களுக்கு....**
**Tel: 021 222 1818, 0774186913**
**or skype: cmcjaffna.**


## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத தில்லை நடராஜர் கோயிலில் திருவா சக முற்றோதல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறும்.

சைவசமயிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு இந்து சமயப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ற-311)

## புத்தூர் சோமஸ்கந்தாவில் புதிய அனுமதி பெறும் மாணவர்கள், பெற்றோருக்கு

கோப்பாய்,டிசெ.25

புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் 2011 ஆம் ஆண்டில் தரம் 6 இற்குப் புதி தாக அனுமதி பெறும் மாணவர்களை யும் அவர்களின் பெற்றோர்களையும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்குக் கல்லூரிக்குச் சமுகமளிக்கு மாறு பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் அன்றைதினம் சமுகமளிக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ம-72)

## நூற்றாண்டு தினமும் உருவப்படம் திரைநீக்கலும்

யாழ்ப்பாணம்,டிசெ.25

அல்வாய் க.மு.முருகேசனார் நூற் றாண்டு தினமும் உருவப்படம் திரைநீக் கமும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 3 மணிக்கு அல்வாய் இளங்கோ பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற வுள்ளன.

சி.மகேந்திரன் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா, மூத்த எழுத்தாளர் க.நடே சன்(தெணியான்), யாழ்.பல்கலைக் கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரி வுரையாளர் கலாநிதி த.கலாமணி, கவி ஞர் வே.இளையகுட்டி, யாழ்.வலய உத விக்கல்விப் பணிப்பாளர் மு.இராசநாய கம், யாழ்.பல்கலைக்கழக சமூகவியற் றுறை விரிவுரையா ளர் இரா.இராஜேஸ் கண்ணன், அல் வாய் வடக்கு கிராம அலுவலர் செ. சிவ பாலசிங்கம், ஓய்வு பெற்ற அதிபர் கி. கணேசன் ஆகி யோர் நினைவுப் பேருரையை நிகழ்த் துவர். அல்வாய் இளங்கோ சன சமூக நிலையம், முத்தமிழ் மன்றப் படிப்பகம் ஆகியன இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. (ம-7)


## இறைச்சிக் கோழி விற்பனை

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு உள் ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட புறொயிலர் இறைச்சிக்கோழி சுத்தம் செய்யப்பட்டது. 1kg 450/= மட்டும். (காலை 6 மணிதொடக்கம் இரவு 8 மணிவரை வியாபாரம் நடைபெறும்).

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். (107846)


## துயர் பகிர்கின்றோம்

எமது சக தாதிய உத்தியோகத்தர் மனுவல் சுரேஸ்நேசன் அவர்களின் அன்புத் தந்தை

**குழந்தைவேலு அப்புத்துரை மனுவல்**

மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,
யாழ்.போதனா வைத்தியசாலை. (107896)

## மரண அறிவித்தல்

**சுப்பிரமணியம் தம்பிராசா (சின்னண்ணை)**



சுன்னாகம், ஐயனார் கோயிலடி யைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமா கவும் கொண்ட சுப்பிரமணியம் தம்பி ராசா (சின்னண்ணை) (23.12.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- அன்னமுத்து தம் பதியரின் செல்வப் புதல்வனும் தங்க முத்துவின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற செல்வராசா (ஆசிரியர்) மற் றும் சரஸ்வதி (லண்டன்), கனகரத்தினம் (ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, ஞானேஸ்வரி, சிவலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தங்க ராசாவின் (சவுதி) பாசமிகு தந்தையும் சுபாஜினியின் அன்பு மாமனும் அரிகரனின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.12.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக் காகச் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத் துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐயனார் கோயில் வீதி, சுன்னாகம். (107893) த.தங்கராசா (மகன்).

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### நன்றி நவிலலும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## ஸ்ரீதரன் ஜெயமாலா



**தோற்றம்**
**1965.03.06**

**மறைவு**
**2010.11.25**

கடந்த 25.11.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவியவர்களுக்கும் ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அறுதல் கூறி ஆகாரம் அளித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (25.12.2010) சனிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**சோ.ஸ்ரீதரன் (கணவர்)**

சிம்மையா பாரதி வித்தியாசாலை வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
தொ.பே. 021 492 1353

## கண்ணீர் அஞ்சலி



15.12.2010 அன்று இறைபதம் அடைந்த அமரர் சிவாகம கிரியாரத்னம், சிவாகம கிரியாஞானி, சிவாகம ஞான பாஸ்கரன், வேதசிவாகம ஞானபானு, ஈசான சிவாச்சாரியார், கலாநிதி,

பிரம்மஸ்ரீ
**சிவானந்தக்குருக்கள் நித்தியானந்தக்குருக்கள்**
(யாழ்.மாவட்ட அமைப்பாளர் இந்துமத குருபீடம்)

அந்தண குலச்சிறப்பும் சைவத்தமிழும் உலகறியச் செய்த உத்தமபுருசரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தையும் ஆறுதலையும் கூறி அன்னாரின் ஆத்மா இறையடிசேர புத்தறானை ஸ்ரீ சித்தி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆலய பரிபாலன சபை, மட்டுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தால் 10 லட்சம் ரூபாவுக்கு மேல் இழப்பு
# ஒட்டுசுட்டான் பனை தென்னை வள கூ.ச.முடக்கம்

முல்லைத்தீவு,டிசெ.25

ஒட்டுசுட்டான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்குக் கடந்த யுத்தத்தின்போது சுமார் 10 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக அதன் முகாமையாளர் திருமதி செல்வராணி தனராஜ் தெரிவித்தார்.

இந்தச் சங்கம் 1988 ஆம் ஆண்டிலிருந்து கற்சிலைமடுவில் இயங்கி வந்தது. இச்சங்கத்தின் கிளைகள் முத்துஐயன் கட்டு, கூழாமுறிப்பு, ஒட்டுசுட்டான், மன்னாகண்டல், தட்டையன்மலை ஆகிய இடங்களில் இயங்கி வந்தன. இச்சங்கத்தில் சுமார் 200 பனந்தொழில் வல்லுநர்கள் அங்கத்தவராக இருந்தனர். 100 பதநீர்க்குழு உறுப்பினர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தனர். இவர்களுடாக 35 பயனாளிகள் பல விதமான பனை சார் பொருள்களை உற்பத்தி செய்து வந்தனர். இதனால் இந்தச் சங்கம் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னணிச் சங்கமாகத் திகழ்ந்தது.

''யுத்தத்தின்போது சங்கத்தின் தலைமைக் காரியாலயம் முற்றாகச் சேதமடைந்தது. ஏராளமான தளபாடங்களும், உற்பத்தி செய்த பொருள்களும் முற்றாக அழிவடைந்தன. தற்போது மீள்குடியமர்ந்த நிலையில் கட்டட வசதிகளோ அல்லது தளபாடங்களோ இல்லாத நிலையில் வெறும் தறப்பாளின் கீழ் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் சங்கம் இயங்கி வருகின்றது'' என்றும் தலைவர் மேலும் தெரிவித்தார்.

''இந்தச் சங்கத்தை மீளக் கட்டியெழுப்பவும், வெல்ல உற்பத்தித் தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கும் போதியளவு நிதிவசதியும், தளபாட வசதியும் இல்லாத நிலை காணப்படுகின்றது. அரசோ அல்லது வெளிநாட்டு நிறுவனங்களோ உதவி செய்ய வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

அவ்வாறு உதவிகள் கிடைக்கப் பெற்றால் சங்கத்தை மீளவும் சிறப்பாக இயக்குவதுடன் பலருக்கு வேலை வாய்ப்பையும் வழங்க முடியும். எமது பிரதேசத்தில் சுமார் 10 ஆயிரம் பனை மரங்கள் யுத்தத்தின் போது அழிவடைந்துள்ளன. அத்துடன் இத்தொழிலில் ஈடுபட்டுவந்த 300 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தொழிலின்றித் தவிக்கின்றனர். எமது சங்கத்தை மீளவும் சிறந்த முறையில் இயங்க வைப்பதன் மூலம் இந்தப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு நல்லதொரு எதிர் காலத்தை வழங்க முடியும்'' என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (க-500)

# ஆனையிறவு தட்டுவன்கொட்டியில் புதிய எரிபொருள் நிலையம் அமைப்பு

கிளிநொச்சி,டிசெ.25

கிளிநொச்சி ஏ-9 வீதியில் ஆனையிறவுப் பகுதியில் கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் புதிய எரிபொருள் நிலையம் ஒன்றினை அமைப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளதாகவும் அதன் முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சமாசத்தின் பொது முகாமையாளர் இ.கணேசபிள்ளை தெரிவித்துள்ளார்.

ஏ-9 வீதியின் ஆனையிறவு தட்டுவன்கொட்டிப் பகுதியில் புதிய எரிபொருள் நிலையம் ஒன்றினை அமைப்பதற்கான அனுமதியினைக் கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் கோரியிருந்தது. தற்போது இதற்கான முதற்கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொது முகாமையாளர் இ. கணேசபிள்ளை கருத்து வெளியிடும் போது, நாங்கள் இந்த எரிபொருள் நிலையத்தினை அமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். இவ்வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எரிபொருள் அமைச்சுடன் தொடர்பு கொண்டு அதற்கான அனுமதியைப் பெற்றுத் தந்துள்ளார்.

இந்த அனுமதி கிடைத்ததையடுத்து மேற்படி இடத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கான ஆரம்ப கட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார். (க-11)

## அசத்தும் பிஞ்சுகள்.....



நேர் கொண்ட பார்வை: கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியின் சிறுவர் கலை நிகழ்வின்போது சிறுவர்கள் நிகழ்வொன்றில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். (405)

# கிளிநொச்சியில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு
# கட்டுப்படுத்த மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி,டிசெ.25

கிளிநொச்சி ஊரியான், கோரக்கன்கட்டு ஆகிய பகுதிகளில் கசிப்பு உற்பத்தியினைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது மீள்குடியமர்வு செய்யப்பட்டுள்ள பல்வேறு பகுதிகளிலும் கசிப்பு உற்பத்தி அமோகமாகக் காணப்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்தி நல்ல ஒரு சமுதாயத்தினை ஏற்படுத்த வழிவகை செய்ய வேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும்.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேசத்துக்கு உட்பட்ட ஊரியான் மற்றும் கோரக்கன் கட்டு ஆகிய பகுதிகளில் கசிப்பு உற்பத்தி என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது. இத்தகைய கசிப்பு உற்பத்தி விற்பனை காரணமாக அதிகளவான வறிய குடும்பங்கள் மிக மோசமாக பாதிக்கப்படுவதுடன் குடும்பங்களில் பல்வேறு பிணக்குகளும் ஏற்படுகின்றன. இதனால் தினமும் பெருமளவான குடும்பங்கள் பாதிப்படைகின்றன.

இப்பகுதிகளில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடும் பல்வேறு குழுக்களும் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு தண்டப்பணம் அறவிடப்பட்ட போதிலும் அவர்கள் மீண்டும் கசிப்பு உற்பத்தியினை மேற்கொள்கின்றனர்.

கோரக்கன்கட்டுப் பகுதியில் கடந்த வாரம் பெரியளவில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த வேளை ஒருவர் கைது செய்யப்பட்டார். ஊரியான் பிரதேசத்தில் மூன்று பேர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் அவர்கள் மீண்டும் அதேதொழிலைச் செய்கின்றனர் என இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

எனவே கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்களை உடன் கைது செய்து சட்டநடவடிக்கை மேற்கொண்டு இதனைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-11)

# மனைவியைக் கத்தியால் வெட்டிய கணவன்; படுகாயமடைந்தவர் வைத்தியசாலையில்

கிளிநொச்சி,டிசெ.25

கிளிநொச்சி, கோணாவில் பகுதியில் கணவனின் கத்தி வெட்டுக்கிலக்காகிய குடும்பப் பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கத்தி வெட்டுக்கிலக்காகிப் படுகாயமடைந்த பெண்ணும் அவரது கணவரும் பிரிந்து வாழ்கின்றார்கள். அத்துடன் இந்தப் பெண் கிளிநொச்சியில் கண்ணிவெடியகற்றும் பிரிவொன்றில் பணியாற்றி வருகின்றார். சம்பவம் நடைபெற்ற அன்று காலை 5.30 மணியளவில் இவர் வீதியால் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த கணவன் கத்தியால் வெட்டினார் என்று பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் இந்தப் பெண் இடது கையிலும், இடது மார்பகத்திலும் படுகாயமடைந் துள்ள நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இரண்டு பிள்ளைகளின் தாயாகிய இந்தப் பெண் அதிகாலை வேளை தமது கடமைக்காகச் சென்று கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரியவருகின்றது. (க-11)




# மஹிந்தவின் 10 இலட்சம் வீட்டுத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சியில் பயனாளிகள் தெரிவு

சண்டிலிப்பாய்,டிசெ.25

பத்து லட்சம் வீட்டுத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கான முதலாவது விண்ணப்பப் படிவத்தை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவருக்கு வழங்கி வீட்டுத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

சேரி வீடுகளை ஒழிக்கும் திட்டத்தின் கீழ் ஜனாதிபதியால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 10 லட்சம் வீட்டுத்திட்டம் அடுத்த மாதத்திலிருந்து சகல மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

ஆரம்பத்தில் மாவட்டத்திற்கு 500 வீடுகள் என்ற அடிப்படையில் இத்திட்டம் அடுத்த வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு இலக்கை அடையும் வரை வருடாவருடம் அதிகரிக்கப்பட்டுத் தொடர்ந்து நடை பெறும் என்று அமைச்சர் கூறினார்.

புனரமைக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட தேசிய அபிவிருத்தி வீடமைப்பு அதிகார சபையின் கட்டடத்தைத் திறந்து வைப்பதற்காகக் கிளிநொச்சிக்கு வந்த அமைச்சர் விமல் வீரவன்ச கட்டடத்தைத் திறந்து வைத்த பின்பு அடுத்த வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்படவிருக்கும் 10 லட்சம் வீட்டுத் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட கிளிநொச்சி மாவட்டப் பயனாளி ஒருவருக்கு விண்ணப்பப் படிவத்தை வழங்கி இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (க-115)

# சரியான முகவரிகள் வழங்கப்படாமையால் தேங்கிக் கிடக்கும் பதிவுப் பத்திரப் பிரதிகள்

கிளிநொச்சி,டிசெ.25

கிளிநொச்சி மாவட்டத்தில் சரியான முகவரிகள் இல்லாத காரணத்தினால் சுமார் 400 இற்கும் அதிகமான பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுப் பத்திரப்பிரதிகள் விநியோகிக்க முடியாத நிலையில் பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவு அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தமது பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுப் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பப் படிவங்கள் மூலம் விண்ணப்பித்தவர்கள் தமது சரியான தபால் முகவரிகளைக் குறிப்பிடாமையினால் சுமார் 400 இற்கும் மேற்பட்ட பிறப்பு, இறப்பு விவாகப் பிரதிகள் பல்வேறு தாபலகங்களுக்கும் பல தடவை அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும் உரியவர்களிடம் சேர்க்க முடியாத நிலையில் கிளிநொச்சி மாவட்ட பிறப்பு, இறப்பு, விவாக அலுவலகத்தில் தேங்கிக்கிடக்கின்றன.

இவ்வாறு பதிவுப் பிரதிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் தமது பிரதிகளை அலுவலக நேரங்களில் சென்று பெற்றுக் கொள்ள முடியுமென திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-11)

# வேலையற்றிருக்கும் இளையோர்களை கிளி. வேலை வங்கியில் பதிவு செய்ய அறிவுறுத்து

கிளிநொச்சி,டிசெ. 25

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வேலையற்ற இளைஞர்கள், யுவதிகளை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் உள்ள திட்டமிடல் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள வேலை வங்கியில் பதிவு செய்யுமாறு கிளிநொச்சி அரச அதிபர் திருமதி. ரூபாவதி கேதீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் 18 வயதுக்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகளுக்குப் பொருத்தமான வேலைகளை இனங்கண்டு வழங்குவதற்காக இவ்வேலை வங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வேலை வங்கியில் பதிவு செய்ய விரும்புவோர் தத்தம் கிராம அலுவலர்களிடம் விண்ணப்பங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி அவரின் உறுதிப்படுத்தலுடன் தமது பிரிவு பிரதேச செயலர்கள் ஊடாக அனுப்பி வைக்கவேண்டும் எனவும் அறிவிக்கப்படுட்டுள்ளது. (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்துவம் மிக்க மார்கழி மாதம்

மார்கழி மாதம் பீடைமாதம் என்று சொல்லுவார்கள். இறைவனையும் இறைவியையும் மனோபீடத்தில் ஏற்றி வழிபடுவதற்கேயுரிய மாதம் இது. மார்கழி என்றாலே ஒடுங்கும் காலம் என்று பொருள். மா என்றால் மறைப்பு அல்லது ஒடுக்கம், கழி என்றால் கழிதல் என்பர். அதாவது இறைவன் உயிர்களுக்காக தனு காரண புவன போகங்களை மாயையில் ஒடுக்கி மீள உருவாக்கும் காலம் மார்கழி.

முன்பனிக்காலமாகிய ஹேமந்த ருதுவின் முதல் மாதம் மார்கழி ''மாஸானாம் மார்கசீசோஹம்'' என்று கண்ணன் கீதையிலே ''மாதங்களில் நான் மார்கழி'' என்று குறிப்பிடுகிறான். மார்கழியில் பூரணை மிருகசீரிடம் நட்சத்திரத்துடன் கூடும். இதனால் ''மார்கசீர்ஷம்'' என்று இந்த மாதத்ததை அழைக்கிறார்கள். தேவர்களுக்கு இம் மாதம் புலரிக்காலம் என்று நம்பப்படுகிறது.

### பிள்ளையார் பிடித்து வழிபடும் காலம்

மார்கழிக்கு எத்தனையோ விசேஷங்கள் உண்டு. அவற்றுள் ஊர் மக்கள் எங்கும் அதிகாலையிலேயே வீட்டு வாசலில் கலை அழகு கொஞ்சும் வண்ணக் கோலங்கள் இட்டு மார்கழிப்பிள்ளையார் வைத்து வழிபடுவதும் முதன்மையானது. இம் மாதத்தில் மகாபாரதப் போர் நடந்தது என்றும் தர்மயுத்தமான அதில் தர்மவழி நிற்கும் பாண்டவர் பக்கம் பகவான் கண்ணன் இருந்தான் என்பதும் ஐதீகம். பாண்டவர்களை காப்பாற்றக் கண்ணன் அவர்களின் இல்லங்களைக் கோலமிட்டு அடையாளப்படுத்தக் கூறினான். எனவே இன்றும் கோலமிட்டுப் போற்றப்பெறும் இல்லங்களை அவன் வந்து நின்று காப்பான் என்று பெரியோர் கூறுவர்.

பச்சையரிசி மாவினால் கோலமிட்டு எறும்பு முதலிய சிற்றுயிர்களுக்குக் கூட உணவிட்டுப் புண்ணியம் தேட உரிய காலம் இது. அழகுக்கலைக்கும், ஓவியக்கலைக்கும் நம் முன்னோர் தந்த பெரும் முதன்மையை காட்டும் பண்பாட்டம்சம் இதுவாகும்.

### பாவை பாடி துயிலெழுவோம்

மார்கழி நோன்பு என்ற பாவை நோன்பு உன்னதம் நிறைந்தது. 'பிங்கலந்தை' என்ற பழம் நூல் இதை ''பனி நீர் தோயலும், பாவை பாடலும்'' என்று கூறும் இக்கால நோன்பை மகாபாரதம் ''காத்யாயினீவிரதம்'' என்று சொல்லும். மனித உடல்வளர்ச் சிக்குரிய ஓசோன் என்ற புதுக்காற்று மார்கழி மாத அதிகாலையில் நிறைந்து காணப்படும் என்கிறது நவீன விஞ்ஞானம்.

''மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில் நீராடப்போதுவீர்'' என்று சூடிக் கொடுத்த சுடர்க்கொடியும், ''போற்றி யாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்'' என்று மணிவாசகமாமணியும் போற்றும் மார்கழி மாதம் இது.

பூவையர் மட்டுமன்றி ஆடவரும் பாவை பாடி இறைபாதம் பணிய பல் நலனும் கிட்டும் என்பது நம்பிக்கை.

### நாடு செழிக்க, நல்வாழ்வு கிட்ட

''தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்யவும், சீர்த்த முலை பற்றி வங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள் நிறையவும், நாடு செழிக்கவும் மார்கழி நோன்பை மங்கையர் அனுசரித்தனர். ஔவைப்பிராட்டி ''நீருயர'' என்று வாழ்த்தியது போல மழை பொழியப் பாடினர்.

கன்னிப் பெண்கள் தங்களுக்கு நல்ல கணவர் வேண்டியும் இம் மாதத்தில் போற்றினர் இதனை.

**''...உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம், அன்ன வரே எங்கணவராவார்...''** என்று மாணிக்க வாசகப் பெருமான் காட்டுவதாலும் விளங்கிக்கொள்ளலாம்.

### ஏல் ஓர் எம்பாவாய்

திருவெம்பாவைத் திருப்பாவை திருப்பாடல்கள் யாவற்றினதும் நிறைவில் ''ஏல் ஓர் எம்பாவய்'' என்று வருகிறது. பலருக்கும் இதன் கருத்தென்ன என்ற சந்தேகம் உண்டு. இதிலுள்ள ஏல் மற்றும் ஓர் என்பன தமிழ் அசைச் சொற்கள், இசைச் சொற்கள் என்றும் கூறுவர். சிலப்பதிகாரத்திலுள்ள அம்மானை வரியிலும் இச்சொற்பாவனையைக் காண முடிகிறது.

எம்பாவாய் என்பது சக்தியாகிய அன்னையை விழித்துப் பெண்கள் எழுப்பும் வாக்கியமாகக் கருதலாம். பீடும் பெருமையும் கொண்ட மார்கழியில் வைகறை எழுந்து வையகத்துயரலை வலியுறுத்தும் வரிகளாகவும் இதனைக் கருதலாம்.

### ஆண்டாளும் மார்கழியும்

வியாழன் விளங்கு தனுவில் சூரியன் நிற்கும் காலமாதலில் ''தனுர் மாதம்'' என்றும் சிறப்பிக்கப்பெறும் மார்கழி, வைணவ வழிபாட்டிற்கும் மிகச் சிறப்பானது. இம் மாதத்தில் ''திருவத்யயன உற்ஷவம்'' என்று வைணவக் கோயில்களில் நாலாயிரத் திவ்ய பிரபந்தம் முழுமையாக பாராயணம் செய்யும் சீரிய வழக்கம் இருக்கிறது. தமிழுக்குச் சிறப்புச் செய்கிற வகையில் இவ் உத்ஸவம் இலங்கையிலும் நிகழ்த்தப் பெறுதல் அவசியமானது.

திருவில்லிபுத்தூரில் ஆண்டாளுக்கு விசேடமாகச் செய்யப்படும் திருவிழா மாதமாக மார்கழி அமைகிறது.

''இற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உற்றமேயாவோம் உனக்கே நாம் ஆட் செய்வோம்'' **(திருப்பாவை - 29ஆம் பாசுரம்)**

என்று கண்ணனையே காதலித்து அவன் கழலடிகளைச் சார்ந்த அவள் தமிழ் ஆண்டாள், இறைவனையும் ஆண்டாள். அத் தமிழ்ப் பெண்ணின் தமிழ்ப் பணியை பாராட்டி சமஸ்கிருத மொழியில் ''கோதாஸ்துதி'' என்ற பிரபந்தம் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

விஷ்ணு வழிபாட்டாளர்களுக்கு எல்லாவற்றினையும் விட மார்கழியில் வைகுண்ட ஏகாதசி என்ற பரமபத வாசல் ஏகாதசி விளங்குகிறது. இத் திருநாளன்றே தமிழ்மாறன் என்ற நம்மாழ்வார் திரு வரங்கன் திருவடிகளை அடைந்தார்.

திருவரங்கத்தில் மிக மிகச் சிறப்பாகக் கொண்டாடும் இவ் விழாவில், சுவர்க்கவாசல் அதிகாலையில் திறக்கப்பெறும். இதை முன்னிட்டு அனைத்து வைணவாலயங்களிலும் சுவர்க்க வாசல் திறப்பு இடம்பெறும். முழுப்பட்டினியாக அனுசரிக்க வேண் டிய இந் நோன்பிற்கு சமமான நோன் பில்லை என்பதும் ஐதீகம்.

### ஆதிரையும் ஆருத்ரா தரிசனமும்

மார்கழிப் பௌர்ணமியை நிறைவாக வைத்து திருவெம்பாவை அனுசரிப்பர். தினமும் சிவாலங்க ளிலும் சிவரூபமான சகல ஆலயங்களிலும் இக்காலத்தில் அபிஷேக, ஆராதனைகளும் உற்சவமும் திருவெம்பாவைப் பாராயணமும் நடை பெறும். சிதம்பரம் பெரிய கோயிலிலும் ஈழத்துச் சிதம்பரத்திலும் இந்த விழா மஹோற்சவமாக கொடியேற்றத்துடன் கொண்டாடப் பெறுகிறது. நிறைவு நாளன்று திருவாதிரை நன் நாளில்அதிகாலையில் ஆடவல்ல பெருமானுக்கு மகாபிஷேகமும் ஆருத் திரா தரிசனமும் இடம்பெறும்.

பரிபாடலும் சிவபெருமானை ''ஆதிரை முதல்வன்'' என்று அழைக்கிறது. தனுராசியில் குரு சஞ்சரிக்கும் மார்கழி மாதத்தில் ஒரு நாளில் அம்மையப்பனுக்குச் செய்யும் பூசை கோடி நாள் பூசைக்கும் மேலாயது. அப்படிச் செய்பவரும், செய்விப்பவரும் இந்திர நாளில் கோடி நாள்கள் இந்திர சுகம் அனுப விப்பர். இத்தகு மாண்புமிகு மார்கழியில் முழுமதி ஆதிரையில் குனித்த புருவமும் கொவ் வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பும் பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும் இனித்தமுடைய எடுத்த பொற்பாத மும் கண்டு வணங்குவோம். நாவரசர் போல ஆனந்திப்போம்.

இது மட்டுமா? இம் மாதம் முழுவதும் ஐயப்ப நோன்பு அனுசரிக்கப் பெறுகிறது. இம் மாத அமாவாசையில் ஆஞ்சநேயர் அவதரித்த நாளானஹநுமத் ஜெயந்தி (03.01.2011) கொண்டாடப்பெறுகிறது.

நாமும் இத்தகு மகிமை பொருந்திய மாதத்தை மாண்புடன் கொண்டாடுவோம். மனக்கவலை தீரட்டும். மிரட்டும் போரும் அது சார் வாழ்வியலும் தொலையட்டும்; மாமழை வாழட்டும்; மாதவனும் மா நடராசனும் அருளட்டும் என்று மார்கழியில் போற்றி மகிழ்வுற வாழ்வோம்.

**''போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்**

**போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்''**

நீர்வை தி. மயூரகிரிசர்மா


## விற்பனைப் பிரதிநிதி தேவை

எமது நிறுவனத்துக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளில் பணிபுரிவதற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**வாகன சாரதி தேவை.**

வென்டோல் லங்கா (பிறைவேற்) லிமிட்டெட்

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:

0772341119, 0777768100

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No. 1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் 30.12.2010 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும். (பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்)

**நல்லூர் பாம் சென்ரர்**

19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6944

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்ப ஆசிரியர் அரச நிரந்தர சேவை, 26 வயது சைவபோசனம், செவ்வாய் 8இல் மூலத்த கிரகபாவம் 16 அரச சேவையிலுள்ள மற்றும் தகைமையுடன் தொழில் எதிர் பார்த்திருப்போரது விண்ணப்பங்கள் 2011 ஐப்பசி வரை பரிசீலிக்கப்படும். பொருத்தமானதை மீளனுப்புவோம். மே/பா உதயன் விளம்பர இல: 4098

## காணி விற்பனைக்கு

கலைவொளி மில் ஒழுங்கை கொக்குவில் கிழக்கில் 2 பரப்பு, 2½ப் பரப்பு விஸ்தீரணமான இரண்டு துண்டு காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 0773868147

## காணி விற்பனைக்குண்டு

தென்மராட்சி, சாவகச்சேரி பருத்தித்துறை வீதியில் கிராம்புவிலில் சிவசிறீ கிருபானந்தக் குருக்கள் வீட்டிற்கும் அருகில் 9 பரப்பும், 8 பரப்பும் கொண்ட இரண்டு காணிகள் விற்பனைக்குண்டு. சி.நடேசமூர்த்தி

தொலைபேசி: 0785609521, 0112943860

## காணி விற்பனைக்கு

உரும்பிராய், கோப்பாய் வீதியில் இராசபாதைச் சந்திக்கு அண்மையில் வடக்கில் 6 ½ பரப்பு பனைகளுடன் சதுரக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 0213214063, 0750399516

## தவறிவிட்டது

வட்டு - தெற்கு, மூளாய் வீதி, நல்லமாவடி என்னும் விலாசமுடைய குலசேகரம்பிள்ளை பாலேந்திரகுமார், என்பவருடைய மோட்டார் வாகன ஆவணங்கள்

1. NPVV2140 பதிவுப்புத்தகம்
2. இவ் வருடம் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு
3. மோட்டார் வாகன பயிலுநர் அனுமதிப்பத்திரம் (L board) Group A என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே. இல. 0770785366, 0771138867

## German Swiss மொழிகள்

German, Swiss மொழி வகுப்புக்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றது. ஜேர்மனியில் படித்து வந்த ஆசிரியரால் ...

German Institute, 10 Palaly Road Jaffna

T.P. 0771604825


## எட்டமாகப்போன எட்டு ஆண்டுகள்



செல்வி

சோபியா ஜொய்சி மகேந்திரன்

உதயம்: 01.10.1982

உதிர்வு: நத்தார் 2002

ஒரே ஒரு பூவுக்காக
நீ யாசித்த போது
எம் கைகள்
காலியாயிருந்தது.
இப்போது எம் கை யெல்லாம்
பூவாய்க் குவிந்திருக்கும் போது
உன் கல்லறையைப் பார்த்து
நட்சத்திரங்கள் கண் சிமிட்டுகின்றன.

(மு.மேத்தா)

குருமனை,
CACM ஆலயம்,
அளவெட்டி. 0773559944

திரு.திருமதி மகேந்திரன்
மருமகன் சுதர்சன், சசி பமிலா, அன்ரன் லோகர்ஸன்.

## யாழ்ப்பாணக் கல்லூரி மாணவனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

மூளாயூர் Dr.நடராசா-திருமதி நடராசா தம்பதியரின் பேரனும் சோமராஜ்-ஜெயந்தா தம்பதியரின் ஏக புதல்வனும், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவனுமாகிய

**சோமராஜ் நிலோத்தமன்**

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல சித்திகள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.



**வாழ்த்துவோர்:**

தாத்தா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியம்மா, பெரியப்பா,

ந.ரவிக்குமார், பதுளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பஸ்களில் மாதாந்தம் 150 கோடி ரூபா கப்பம் அறவீடு

## உரிமையாளர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.25

தனியார் பஸ்களிலிருந்து மாதமொன்றுக்கு சுமார் 150 கோடி ரூபா கப்பம் அறவிடப்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பிரதேச வாரியாக ஒரு சில அரசியல்வாதிகள் குண்டர் குழுக்களை ஈடுபடுத்திக் கப்பம் அறவிடு கின்றனர் - என தனியார் பஸ் உரிமையாளர்களின் சம்மேளனம் குற்றஞ்சாட்டுகின்றது.

குறுந்தூர பஸ்களிலிருந்து தினமொன்றுக்கு ஐநூறு வரையும், நெடுந்தூரப் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களிலிருந்து நாளொன்றுக்கு 1,500 ரூபா வரையும் கப்பமாக அறவிடப்படுகின்றது என்றும் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள், கப்பக்காரர்களுக்கு உடந்தையாக இருக்கின்றனர். அதேவேளை, அமைச்சர்களின் ஆதரவு பெற்றவர்களே கப்பம் அறவிடுவதில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என அவர்கள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரிடம் முறையிட்டுள்ளனர். (சி)

# யாழ்ப்பாணத்துக்கு புதிய சிறை ஆணையாளர் நாயகம் தகவல்

கொழும்பு, டிசெ. 25

யாழ். குடாநாட்டில் புதிய சிறைச்சாலையொன்றை அமைப்பதற்கான நிர்மாணப்பணிகள் அடுத்த வருட முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வி.ஆர்.சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு மேலதிக வசதிகளை ஏற்படுத்தும் முகமாகவே இந்தப் புதிய சிறைச்சாலை நிர்மாணிக்கப்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்கான நிதியை அரசு ஒதுக்கி உள்ளது எனவும், நிர்மாணப் பணிகள் வருட முற்பகுதியில் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்த சிறைச்சாலை 1985 ஆம் ஆண்டு சேதமானது. பின்னர் 1996 இல் இரண்டு தனியார் வீடுகளில் தொழிற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சி)

# நட்டத்தில் இயங்கும் 25 அரச நிறுவனங்களுக்கு திறைசேரியால் ரூ. 10,161 கோடி நிவாரணம்

கொழும்பு, டிசெ.25

நட்டத்தில் இயங்கிவந்த 25 அரச நிறுவனங்களுக்கு கடனாகவும், நிவாரணமாகவும் 10,106 கோடி ரூபாவை திறைசேரி செலுத்தியுள்ளது - என அரச வர்த்தகத் திணைக்களத்தின் 2009 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி அதிகப்படியான நிவாரணம் இலங்கை மின்சாரசபை, துறைமுக அதிகார சபை, நீர்வழங்கல் திணைக்களம், உரக் கூட்டுத்தாபனம், கொழும்பு கொமர்ஷல் கம்பெனி, போக்குவரத்துச் சபை, மிஹின் லங்கா ஆகிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டில் மின்சார சபைக்கு 2,527 கோடி, துறைமுக அதிகாரசபைக்கு 2,253 கோடி, நீர்வழங்கல் திணைக்களத்துக்கு 1,975 கோடி ரூபா கடனாகவும், நிவாரணத் தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே நிவாரணத் தொகையாக உரக் கூட்டுத்தாபனத்துக்கு ரூ. 1,456 கோடியும், கொமர்ஷியல் கம்பெனிக்கு ரூ.752 கோடியும் ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளுக்காக போக்குவரத்துச்சபைக்கு ரூ. 516 கோடியும் மிஹின் லங்கா நிறுவனத்துக்கு ரூ.300 கோடியும் திறைசேரியால் வழங்கப்பட்டுள்ளது. (சி)

# இராணுவத்திலிருந்து தப்பியவர்களை பிடித்து அவர்களுக்கும் புனர்வாழ்வு

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.25

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களைக் கைதுசெய்து அவர்களுக்கு 90 நாள்கள் புனர்வாழ்வு அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உதய மெதவெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதுவரை சுமார் 50,000 பேர் இராணுவத்தை விட்டுத் தப்பியுள்ளனர். இவர்களுள் பணியில் இருந்தபோதும் விலகிச்சென்ற பின்னும் அவர்களது ஒழுங்கு முறைகள், ஈடுபட்ட குற்றச் செயல்கள் போன்றவற்றைத் தீவிரமாக ஆராய்ந்து பொருத்தமானவர்களை மீண்டும் இராணுவச் சேவையில் இணைத்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படும்.

இராணுவத்தை விட்டுத் தப்பியோடி மறைந்து வாழும் சிப்பாய்களின் நடவடிக்கைகள் பற்றி சம்பந்தப்பட்ட பிரதேச பொலிஸ் நிலையங்களின் அறிக்கை பெறப்பட்டு அதன் பிரகாரம் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதன்பின் தொடர்ந்து இராணுவச் சேவையில் இணைத்துக் கொள்ளத் தகுதி பெற்றவர்களுக்கும், விலக்கப்படவேண்டியவர்களுக்கும் முதலில் புனர்வாழ்வு அளிக்கப்படும்.

புனர்வாழ்வு நடவடிக்கையின்போது தொழில்நுட்பப் பயிற்சிகளைப் பெற்று புதிய வாழ்வை ஆரம்பிக்கலாம். அதன் பின் அவர்கள் விரும்பினால் உத்தியோகபூர்வமாக இராணுவச் சேவையிலிருந்து விலகிக் கொள்ள வாய்ப்பளிக்கப்படும். புனர்வாழ்வு காலத்தில் அவர்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் தொழில் வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரப்படும். - இவ்வாறு கூறினார் இராணுவப் பேச்சாளர். (சி)

# ஐ.நா. நிபுணர் குழு போலியானது விக்கிரமபாகு கருணாரட்ன சாடல்

கொழும்பு, டிசெ. 25

ஐ.நா. நிபுணர்கள் குழு என்பது ஒரு போலியான குழு எனவும் அந்தக் குழு உலக வல்லரசுகளின் முகவர் எனவும் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கறைகளுக்கு வெள்ளையடிப்பதற்காகவே இந்த நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அரசின் யுத்த நடவடிக்கைக்குப் பின்னால், பான்-கீ-மூன் உள்ளிட்ட மேற்குலக சக்தி களே இருந்தன'' என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் போன்ற முதலாளித்துவ சக்திகள் பான்-கீ-மூனுக்கு பின்னால் இருந்துக்கொண்டு, அரசு யுத்தம் செய்வதற்கான ஆயுதங்களையும்நிதியுதவிகளைவழங்கின.

இவ்வாறானவர்கள் நியமித்துள்ள குழுவொன்றின் மூலம் உண்மை வெளிவரும் எனக் கூறுவது வெறும் மாயை. இந்த நிபுணர்கள் குழு இலங்கைக்கு விஜயம் செய்து, மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து அவரது கரங்களில் படிந்துள்ள கறையைத் துடைக்க முயற்சிக்கின்றது. இது புரியாத விமல் வீரவன்ஸ சத்தமிடுகிறார். பான்-கீ-மூனின் நிபுணர்கள் இலங்கை வருவதால், இலங்கைக்கு எந்தப் பயனும் ஏற்படபோவதில்லை என்றும் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

# ஐ.தே. கட்சியின் இடைக்கால மத்திய செயற்குழு நியமனம்

கொழும்பு, டிசெ. 25

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பு சீர்திருத்தத்திற்கு அமைய எதிர்வரும் 2011ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் செயற்படும் வகையில் இடைக்காலச் செயற்குழு ஒன்று அக்கட்சியினால் நியமிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் கருஜயசூரிய, பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் பொருளாளர் செனரத் கடிகொட்டுவ ஆகியோர் நேற்று முன்தினம் கூடி ஆராய்ந்து மேற்படி இந்த இடைக்காலச் செயற்குழுவை நியமித்துள்ளனர்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா வெளிநாட்டுக்கு சென்றுள்ளதனால் அவர் சார்பானோர் இந்த இடைக்காலச் செயற்குழுவுக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, தற்போதைய செயற்குழுவில் உள்ள அனைவரும் மேற்படி புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இடைக்கால செயற்குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# சீதுவை இளைஞர்களிடம் பணம்பறிக்கும் கும்பல்; பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட 11 பேர் சிக்கினர்

கொழும்பு, டிசெ.25

வெளிநாடு செல்வதற்கென வரும் இளைஞர்களைக் கடத்திச்சென்று அவர்களிடமிருக்கும் பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையிட்டு வந்த 11 பேரடங்கிய கும்பல் ஒன்று சீதுவ பொலிஸாரிடம் சிக்கியுள்ளது.

இந்தக் கும்பலைச் சேர்ந்த ஐவர் பொலிஸ் புலனாய்வு மற்றும் அதிரடிப்படையைச் சேர்ந்தவர்களெனத் தெரியவந்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் தொழில் வாய்ப்புகள் பெற்றுத் தருவதாக ஆசைகாட்டி அழைத்துவரும் இளைஞர்களை இவர்கள் சீதுவ பிரதேச ஹோட்டலொன்றில் தங்கவைப்பார்கள். அதன் பின் அந்த இளைஞர்களிடமுள்ள பணம், நகைகளைக் கொள்ளையிட்டுக் கொண்டு மாயமாகிவிடுவர்.

இளைஞர்கள் ஹோட்டல்களில் தங்கியபின் இரவில் திடீர்ச் சோதனைக்கு வருவது போல் வரும் இவர்கள் அவர்களது கடவுச் சீட்டுக்களைப் பரிசோதித்து அவை போலியானவை எனக்கூறி அவர்களை விசாரணைக்கென அழைத்துச் செல்வர்.

இப்படி இதுவரை 50 லட்சம் ரூபாவுக்கு மேல் கொள்ளை அடித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி பண மோசடி செய்தவர் கைது

கொழும்பு, டிசெ.25

கனடாவில் தொழில் பெற்றுத் தருவார் எனக் கூறி 19 லட்சம் ரூபாவை மோசடி செய்த நபர் ஒருவர் இரண்டரை வருடங்களுக்குப் பின்னர் ஊழல்மோசடிப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு முகத்துவாரப் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்பட்டு பத்து லட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அதேவேளை அவர் பாதிக்கப்பட்ட நபருக்கு மாதாந்தம் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் பணத்தை திருப்பிச் செலுத்தவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# வீடமைப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்க புதிய அலுவலகங்கள்

## தேசிய வீடமைப்பு அதிகார சபை நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 25

புதிதாக வீட்டை நிர்மாணிக்க விரும்புபவர்கள் சகல ஆலோசனைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளும் வகையில் 'சஹன சேவை இல்லங்கள்' என்ற பெயரில் சகல மாவட்டங்களிலும் அலுவலகங்களைத் திறக்கத் தேசிய வீடமைப்பு அதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நிர்மாணத்துறை, பொறியியற் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் ஆலோசனையின் பேரில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதியதொரு வீட்டை நிர்மாணித்துக் கொள்ளல், வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக் கொள்ளல் மாத்திரமல்லாது, வீடு சம்பந்தமான எந்தப் பிரச்சினைக்கும் தேவையான ஆலோசனைகளையும் இந்தச் சேவை நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். ஆலோசனை வழங்குவதற்கு மாத்திரம் மட்டுப்படாமல் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்குத் தேவையான உதவிகளை வழங்குதல் இச்சேவையின் விசேட அம்சமாகும். இதன்படி வீடொன்றை நிர்மாணித்துக் கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள ஒருவரின் தீர்த்துக்கொள்ள முடியாதுள்ள ஒரு சில பிரச்சினைகளையும் தீர்த்துக் கொடுப்பதற்கு இந்த 'சஹன சேவை இல்ல' அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பர்.

புதிதாக வீடொன்றை நிர்மாணித்தல், வீட்டுக்கு ஒரு பகுதியை இணைத்துக் கொள்ளல், வீடொன்றை நவீனமயமாக்கல், காணித் துண்டொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வீடமைப்புக் கடன் ஒன்றைப் பெற்றுக் கொள்ள வழிகாட்டுதல் என்பவற்றுக்காக உதவி செய்வதற்கும் 'சஹன சேவை இல்ல' அதிகாரிகள் ஆயத்தமாகவுள்ளனர். இதற்காக எவ்வித பணமும் அறவிடப்படமாட்டாது. இது முழுமையான ஒரு சமூக சேவை என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ஜயந்த சமரவீர குறிப்பிடுகிறார்.

'சஹன சேவை இல்ல'த்தை ஆரம்பித்து அதனைப் பேணி நடத்தி வருவதற்கான ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கான பயிற்சிக்களம் ஒன்று அண்மையில் மாவட்ட முகாமையாளர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டு கொழும்பில் நடத்தப்பட்டது.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேஷம்:**
பிரிந்து சென்ற குடும்ப உறுப்பினர்கள் மீண்டும் ஒன்று சேரலாம். மாமன், மைத்துனர்களை நம்பி முக்கியமான காரியம் ஒன்றில் இறங்கலாம். பயணங்கள் பலன் தரும் விதத்தில் அமையும். தொழில் ரீதியாகச் சிலருக்கு நல்ல ஆலோசனை சொல்வீர்கள். சிலருடன் வாக்கு வாதங்களில் ஈடுபடலாம். மற்றவர்களுக்காகச் செலவிடலாம்

**இடபம்:**
எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி நடக்கலாம். சுயநலமின்றி பொது நல நோக்குடன் செயற்படுவீர்கள். நண்பர்கள் மத்தியில் சிலர் உங்களைப் பாராட்டலாம். தொழில் ரீதியாக ஒப்பந்தம் போட மேற்கொண்ட முயற்சிகளில் பலன் உண்டு. சில பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்குவீர்கள்.

**மிதுனம்:**
மற்றவர்களைக் கேலி, கிண்டல் பேசி அதில் இன்பம் காண்பீர்கள். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்துப் பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். வழக்கத்திற்கு மாறாகக் கூடுதல் நேரம் தூங்கலாம். பிள்ளைகள் கேட்ட தின்பண்டங்களை வாங்கிக் கொடுப்பீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம்.

**கடகம்:**
அயலார் ஆதரவுக் கரம் நீட்டுவர். புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். கணவன் மனைவி இடையே சிறு சண்டை, சச்சரவுகள் ஏற்பட்டு பின்னர் சரியாகும். உங்களின் கருத்துக்களுக்குக் குடும்ப உறுப்பினர்கள் ஆதரவு தெரிவிப்பர். நாளை வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே வரலாம்.

**சிங்கம்:**
பொருள் ஒன்றை வாங்கப் பல இடங்களுக்குச் செல்லலாம். தொழில் ரீதியாகச் சிலரிடம் உதவி கேட்க வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். முடிவது போல தோன்றிய காரியம் ஒன்று முடியாமல் போகலாம். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும்.

**கன்னி:**
நண்பர்கள் வட்டம் விரிவடையும். போட்டிகள், எதிர்ப்புகளை முறியடிக்கும் தன்னம்பிக்கையை அதிகரிக்கும். எதிர்காலம் தொடர்பான சிந்தனைகள் அதிகரிக்கும். எந்த வேலையையும் நாளை எனத் தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள். அலைச்சல் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். சுகமான அனுபவம் உண்டு.

**துலாம்:**
புதிய முயற்சிகளைச் செயற்படுத்தி வெற்றி காணும் நாள். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். காலை முதல் மாலை வரை பரபரப்பாக ஏதாவது வேலைகளைச் செய்யலாம். வாங்கிய கடன் மிகுதி ஒன்றை திருப்பிக் கொடுப்பீர்கள். நல்ல செய்தி கேட்கலாம். குடும்பப் பெரியவர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:**
மனதில் இனம்புரியாத கவலை குடிகொள்ளும். குடும்ப விவகாரங்களில் மாற்று மதத்தினரின் தலையீடுகளைத் தவிர்க்கவும். ஆரோக்கியக் குறைவைத் தவிர்க்க உணவில் கவனம் அவசியம். சில விடயங்கள் நினைத்தது போல நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும்.

**தனுசு:**
சிக்கனமாகச் செயற்பட நினைத்தாலும் ஏதாவது ஒரு வழியில் விரயச் செலவுகள் ஏற்படும். சிலர் உங்களை எங்காவது வரச்சொல்லி விட்டு அவர்கள் தாமதமாக வரலாம். உங்களிடம் உதவி பெற்றவர்கள் அதை மறந்து விட்டு பரிகாசம் செய்யலாம். சிலரின் அதிருப்திக்கு ஆளாகலாம். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு.

**மகரம்:**
செய்யும் வேலைகளை சிறப்பாக செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு செயற்படுவீர்கள். தொழிலில் ஏற்றமான பலன் காணும் நாள். பொறுப்புகளைத் தைரியமாக எதிர்கொண்டு சமாளிக்கும் திறமை அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்கள் காரணமாக சில வேலைகளில் மாற்றம் செய்யலாம். பெண்களால் சந்தோஷ அனுபவம் உண்டு.

**கும்பம்:**
நிதி நிலைமையில் மேம்பாடு காணப்படும். நேற்று பாதியில் விட்ட சில பணிகளை இன்று சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எந்த விடயத்திலும் முந்திக் கொண்டு செயற்படுவதைத் தவிர்க்க வேண்டும். சுபகாரிய விடயங்களில் நல்ல திருப்பங்களைக் காணலாம். தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். கனவுகள் பலிக்கும்.

**மீனம்:**
அக்கறை, ஆர்வம் இல்லாமல் நடந்து கொள்ளும் சிலரால் கோபம், எரிச்சல் அடையலாம். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறுவது தள்ளிப் போகலாம். சில விடயங்களை நினைத்து அதிக பயம் கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வரலாம். மறதியால் அவதியுண்டு.

## கப்பம் கோரித் தம்புள்ளையில் கடத்தப்பட்ட பெண் புறக்கோட்டையில் விடப்பட்டார்

கொழும்பு, டிசெ.25

இரண்டு லட்சம் ரூபா கப்பம் கோரி தம்புள்ள மருந்துக் கடை உரிமையாளரின் மனைவி கடத்தப்பட்டு கடந்த 22ஆம் திகதி கொழும்பு பெஸ்டியன் மாவத்தையில் அநாதரவாக விட்டுச் செல்லப்பட்ட வேளையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் தம்புள்ள நகரில் வைத்துக் கடத்தப்பட்ட இப்பெண்ணை விடுவிக்க இரண்டு லட்சம் ரூபா கப்பம் கோரப்பட்டிருந்தது.

கடத்தப்பட்ட போது தனது முகத்தில் கைக்குட்டை ஒன்று அழுத்தப்பட்டதையடுத்து தான் மூர்ச்சையுற்றதாகவும் நினைவு திரும்பிய போது வீடொன்றின் அறையில் சிறை வைக்கப்பட்டிருந்ததை அறிந்ததாகவும் இப் பெண் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

இப் பெண் கடத்தப்பட்டதை அவரது கணவன் பொலிஸாருக்கு முறையிட்டதையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது அவர் கிரிபத்கொடயில் உள்ள வீட்டில் சிறை வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வந்தது.

அதையடுத்து பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டதை அறிந்து கொண்ட கடத்தல்காரர்கள் அப் பெண்ணை கொழும்பு புறக்கோட்டை பெஸ்டியன் மாவத்தையில் விட்டுச் சென்றனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ம-5)

## சமூகநோக்கு...



உயர்வு: தென்மராட்சிப் பிரதேசத்தில் திடீர் மரண விசாரணை அதிகாரிகளாகப் பணிபுரியும் இருவர் அண்மையில் சமாதான நீதிவான்களாகச் சாவகச்சேரி மேலதிக மாவட்ட நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர். சாவகச்சேரிப் பிரிவு திடீர் மரணவிசாரணை அதிகாரி செல்வி நாகராஜா சசிகலா, கொடிகாமம் பிரிவு திடீர் மரண விசாரணை அதிகாரி செல்வி இராசேந்திரம் தவமலர் ஆகியோர் மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்கின்றனர். (207)

## உருப்பட வேண்டாமா?

சில பேரிடம் ஐந்து நிமிடம் பேசிக்கொண்டிந்தால் போதும் பல பேருடைய பலகுறைகளைப் பட்டியல் போட்டு பரபரப்பாகப் பேசுவார்கள் "அவர் அப்படி, இவர் இப்படி என்று அந்தரங்க அசிங்கங்களை ஆசை ஆசையாக அம்பலப்படுத்துவார்கள். ஆனால் தங்களது தவறுகளையோ, பிழைகளையோ சிறிதளவும் ஆராயமாட்டார்கள். வருந்தவும்மாட்டார்கள். வருந்தித் திருந்தவும் மாட்டார்கள். இது அஞ்ஞானிகளின் வாழ்க்கை முறை. ஞானிகளின் வாழ்வியலே அல்ல.

மகாஞானிகள், அருளாளர்கள், தீர்க்கதரிசிகள் எப்போதும் குறைகண்டு கொண்டே இருப்பார்கள். பிறர் மீது அல்ல... தன் மீது, தம் மனம் மீது..."இழிவுற்ற நெஞ்சே" என்பார்கள். "பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையன்" என்று தன்னைத் திட்டுவார் மாணிக்கவாசகர். அருணகிரிநாதரும், பட்டினத்தாரும் தம்மைக் கேவலப்படுத்திய மாதிரி யாரவது பேசுவார்களா? தன்னையே வார்த்தைகளால் அடித்துக் கொண்டவர் வள்ளலார்.

இப்படித் தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொண்டால் தன்னம்பிக்கை போய்விடாதா என்று கவலைப்பட வேண்டாம். வாழ்க்கை என்பது பூரணத்தை நோக்கிய ஒரு பயணம். குற்றம், குறைகளில் இருந்து விடுபட்டு நிறைவாகிய இறை நிலை எய்துதலே வாழ்வின் அர்த்தம். இறைவன் "குறையற்ற நிறை பிழையற்ற நிலை" என்பதே ஞானிகளின் முடிவு. "குறைவிலா நிறையே கோதிலா வமுதே" என்றே கடவுளை மாணிக்கவாசகர் பாடுகிறார்.

எந்தக் குறையும் இல்லாத இறைவனில் இருந்துதான் நாமும் வெளிவந்தோம். பிறவிகளாக எமது பயணம் நீடிக்கிறது. ஒவ்வொரு பிறவியிலும் புண்ணியங்களைச் சேகரிப்பதற்குப் பதில் மாயையால் பெரும் பாவிகளாக ஆகிவிடுகிறோம். மீண்டும் தூய இறை நிலை பெறுவதே நமது பயணத்தின் இலக்காக வேண்டும்.

தூய தங்கத்தில் நகை செய்ய முடியாது. எனவே சிறிதளவு செம்பு கலப்பார்கள். அதை மாற்றி வேறு நகை செய்யும் போது வேலை சுலபம் கருதி இன்னும் சிறிதளவு செம்பு சேர்த்துச் சில ஆசாரிகள் நகை செய்வார்கள். [illegible] தரம் [illegible]ம்.



நதி, பனி மலையில் இருந்து பளிங்கு மாதிரி புறப்படும். பயன்படுத்தப் பயன்படுத்த கழிவு நீராகி விஷம் பரப்பும். மனிதனின் கதையும் இதேதான்.

வாழ வாழ மனிதன் மேலும் சாக்கடையாகிறான். பிறவிக்குப் பிறவி மாற்றுக் குறைந்த தங்கமாகிறான். இந்தக் கீழான பயணத்தை நிறுத்தி தூய்மை நோக்கிய பயணமாக வாழ்வை உணந்தவர்களே அருளாளர்கள். கழிவு நீர் நதியாகிக் கடலில் கலந்து ஆவியாகி மழை நீராகச் சுத்திகரிக்கப்படுவது போல, கடவுள் என்ற கடலில் கலந்து தூய்மையாவதற்கே ஞானி விரும்புகிறான்.

தங்கம் நெருப்பிலும் அமிலத்திலும் சுத்தமாவது போல, ஞானக்கண்ணில் தன்னை எரித்துத் தூய்மைப் பிறப்பெடுக்கவே மகான்கள் விரும்புகிறார்கள். அதனால்தான் தங்கள் பிழைகளைப் பற்றியே ஓயாமல் பேசுகிறார்கள். சிந்திக்கிறார்கள். அற்பர்கள் தான் பிறர் கதைகளைப் பேசிக் காலத்தைப் வீணாக்குவார்கள். இப்போது அற்பமானவர்கள் இன்னும் ஒரு படி மேலே போய்விட்டார்கள். தங்கள் தவறுகளையும் ஒழுக்கக்கேட்டையும் அவர்கள் நியாயப் படுத்துகிறார்கள். இன்னும் ஒருபடி மேலே போய் பெருமைப்படுகிறார்கள்.

"எத்தனை போத்தல் மது குடித்தாலும் ஐயா 'ஸ்டெடியா' இருப்பேன் தெரியுமா?" என்று குடிகாரர்கள் தம்மைக் கௌரவப்படுத்திக் கொள்வது போன்றது இது.

தன் தவறுகளுக்கு வெட்கப்பட்டு ஞானியாகா விட்டாலும் பரவாயில்லை..... பெருமைப்பட்டு அஞ்ஞானியாகலாமா? ஒரு நகைச்சுவைக் கதை உண்டு. பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த முன்வரிசையில் நின்ற பயணி கையில் பேப்பர் வைத்திருந்தார். டிரைவர் அவரைப் பார்த்து செய்திப் பத்திரிகையப் படித்துச் சொல்லுங்கள் என்றார். "கண்ணே தெரியவில்லை எல்லாம் தெளிவில்லாமல் வட்ட வட்டமாகத் தெரியுது.... இதில் பத்திரிகையை எப்படிப் படிக்கிறது" என்று இழுத்தார்.

"எனக்கும் கூடத்தான் எதுவும் கண்ணுக்குத் தெரியவில்லை ஒரே தெளிவில்லாமல் தெரியுது. ஒரு குத்து மதிப்பா பஸ் எப்படி ஓடுகிறேன் பார். அப்படிக் குத்து மதிப்பாகப் பத்திரிகையைப் பார்த்துச் சொல்லுங்கள்." என்றார் பஸ் ஓட்டுநர். அவர் போன்று தனது தவறுகள், குறைகள் இன்று யாருக்கும் வருத்தமாகத் தோன்றுவதே இல்லை. பெருமையாகக்கூட இருக்கிறது!

சுகி சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களை முதலில் திருத்திக் கொள்ளுங்கள்

இலங்கைத் தமிழ் மக்கள் இன்றிருக்கும் நிலைபற்றியும் அவர்கள் இதுவரையிலும் அனுபவித்த - இன்னமும் அனுபவித்துக் கொண்டிருக்கும் - துன்பங்கள் பற்றியும் பேசாத வாயே இல்லை என்னுமளவுக்கு தினமும் செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன.

எது எப்படியிருந்தபோதும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்வதாக இல்லை. அவை மேன்மேலும் கேள்விக்குரியதாகவே மாறி வருகின்றன.

தமிழ்மக்களின் பூர்வீக வாழ்விடமான வடக்கு - கிழக்குப் பிரதேசம் பிரிக்கப்பட்டு அங்கு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், புத்த விகாரைகள் என்பன அமைக்கப்படுகின்றன. குறித்த பிரதேசங்களின் தமிழ் இன விகிதாசாரத்தினை குறைத்து, அவற்றை சிங்களவர்களுக்கும் உரியதாக மாற்றும் நடவடிக்கையாகவே இவை நிகழ்ந்தேறுகின்றன.

யுத்த அழிவுகளில் இருந்து மீள முடியாமல் தவிக்கின்ற தமிழ் மக்கள் மீது அரசு தொடர்ந்தும் புதிய பிரச்சினைகளை ஏவிவிடுகின்றது. இதனூடாக தமிழர்களின் மன நிலையைச் சீர்குலைத்து, அவர்கள் மத்தியில் இருக்கும் ''தேசியம்'' ''சுயநிர்ணயம்'' பற்றிய சிந்தனைகளை அழித்து வருகின்றது.

இவ்வாறான இன ஆக்கிரமிப்புக்கு தமிழ் அரசியல் வாதிகள் சிலரும் துணைபோகின்றனர். இதுவே காலாகாலமாகத் தொடர்கின்ற சாபக்கேடு.

வடக்கு, கிழக்குப் பகுதியில் இப்போது தலை தூக்கியுள்ள சமூகச் சீரழிவுகள் குறிப்பாக இளம் பராயத்தினர் மத்தியில் தோன்றியுள்ள தமிழ்க் கலாசாரங்களுக்கும், பண்பாட்டுக்கும் முரணான செயற்பாடுகள் எம்மினத்தை மேலும் நசுக்குவதாகவே உள்ளன.

இத்தகைய செயற்பாடுகள் அனைத்தும் யானை தன் தலையில் மண்ணை அள்ளிப் போடுவது போலவே அமைந்துள்ளன.

இந்தத் துரதிஷ்டவசமான சூழ்நிலையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ் இனத்தின் கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கவும் அது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டவும் ஒரு செயற்றிட்டத்தை ஆரம்பித்திருப்பது வரவேற்கத்தக்கது- மகிழ்ச்சிக்குரியது.எனினும் இத்தருணத்தில் 'உன்னைத் திருத்திக் கொள் சமூகம் தானாகவே திருந்திவிடும்' என்ற வாக்கியங்கள் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

பல்கலைக்கழக மாணவர்களும் மற்றும் பல்கலைக்கழகச் சமூகத்தினரும் தம்மிடமுள்ள பல குறைகளை கறைகளைக் - களைந்த பின்னரே மக்கள் மத்தியில் நாங்கள் சமூக சீர்திருத்தவாதிகள் என்பதை நிலை நாட்ட வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் தமிழ் மக்களின் கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கக்கூடிய, தமிழ் மக்களது அறிவுப்பசியைப் போக்கும் உயர் கல்விக் கூடமாகும். பல்வேறு துறைசார் கல்வியியலாளர்களையும், சமூக சேவையாளர்களையும், உருவாக்கிய, உருவாக்கிவரும் ஒரு பட்டறை இது என்பதையும் மறுக்க முடியாது.

கடந்த காலங்களில் தமிழ் மக்களது அரசியல் பின்புலங்கள் யாவும் இந்தக் கல்விக் கூடத்தை மையமாகக் கொண்டே மேற்கிளர்ந்தன.

தமிழின விடுதலைக்கான மாணவர்களது அகிம்சைப் போராட்டங்கள் மூலம் குறிப்பாக வரலாற்றில் பதிவு செய்யக்கூடிய ''பொங்கு தமிழ்'' நிகழ்வு மற்றும் உணவுத்தவிர்ப்புப் போராட்டங்கள், மௌனப் பிரார்த்தனைகள், வகுப்புப் புறக்கணிப்புகள் என்று தழிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட துன்பங்களுக்கு ஏதிராக யாழ்.பல்கலை மாணவர்கள் குரல் கொடுத்து வந்தனர்.



இவ்வாறான முன்னெடுப்புகளால் பல மாணவர்கள் தமது உயிர்களைக் கூடத் தியாகம் செய்ய வேண்டியிருந்தது. தமது கல்வியைத் தொடரமுடியாது இடைநிறுத்திவிட்டு வெளிநாடுகளுக்குத் தப்பியோட வேண்டியிருந்தது. பெரும்பாலான மாணவர்கள் போர் நிகழ்ந்த காலங்களில் சுதந்திரமாக நடமாட முடியாமலும் தமது வாழ்க்கையைத் தியாகம் செய்தனர்.

இவை கடந்த கால வரலாறுகள். பல்கலைக்கழகச் சமூகம் தமிழ் மக்கள் தொடர்பான தீர்மானங்களையும் நெருக்கடியான நேரங்களில் - சரியான தருணத்தில் - சரியாக நிறைவேற்றியும் வந்துள்ளது.

இவை எல்லாவற்றினையும் வைத்துப் பார்க்கையில் இப்போதுள்ள பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் - சமூகத்தினர் எடுத்திருக்கும் தீர்மானமும் காலத்தின் சூழமைவில் மிகச் சரியானதே. ஆனால்! இன்றுள்ள நிலையில் பல்கலைக்கழக சமூகத்தினர் சிறந்த தீர்மானங்களை நிறைவேற்றும் வல்லமை கொண்டவர்களா? என்பதில் மக்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது.

* நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் எடுத்த தீர்மானத்தில் இருந்தே பல்கலைக்கழகச் சமூகம் இப்போது எந்த நிலையில் உள்ளது என்பதை மக்கள் எடைபோட்டுக்கொள்ள முடிந்தது.

* பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் தொடர்பாகவும் விரிவுரையாளர்கள் தொடர்பாகவும் மக்களுக்கு நம்பிக்கையின்மை அதிகரித்துள்ளது.

**சீரழிவுகள் உற்பவிக்கும் இடம்**

* 'கலாசாரத்தைப் பேணுவோம்' என்பது இப்போது முழக்கமிடும் பல்கலைக்கழக சமூகத்தினரே அதனை சீரழிப்பவர்களாகவும் அவ்வாறு சீரழிவானபாதையில் பயணிப்பதையே தமது ஒழுக்கமாகக் கொண்டவர்களாகவும் மாறி வருகின்றனர்.

* மதுப்பழக்கம் இல்லாது கற்க வந்த மாணவர்கள்கூட மதுபோதைக்கு அடிமையாவதும், பகிடிவதை என்ற பெயரில் மாணவர்களைத் தவறாக வழி நடத்துதல், பணம் பறித்தல் போன்ற இழிவான செயல்களிலும் மாணவர்கள் ஈடுபடுகின்றனர்.

* களியாட்ட [illegible] யங்களில் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தும் பல்கலை மாணவர் ஒன்றியத்தினர் தங்கள் கல்விக்கூடத்தில் நடைபெறும் வரவேற்புபசார நிகழ்விலும்சரி, பிரிவுபசார நிகழ்விலும்சரி எவ்வாறு நடந்து கொள்கின்றனர். இதைச் சற்றேனும் யோசிப்பதுகூட இல்லையா? என்ற கேள்வி எழுகின்றது.

**பல்கலைக்கழக மாணவர்களும் மற்றும் பல்கலைக்கழகச் சமூகத்தினரும் தம்மிடமுள்ள பல குறைகளை – கறைகளைக் களைந்த பின்னர் மக்கள் மத்தியில் நாங்கள் சமூக சீர்திருத்தவாதிகள் என்பதை நிலை நாட்ட வேண்டியுள்ளது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் தமிழ் மக்களின் கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கக்கூடிய, தமிழ் மக்களது அறிவுப்பசியைப் போக்கும் உயர் கல்விக் கூடமாகும். பல்வேறு துறைசார் கல்வியியலாளர்களையும், சமூக சேவையாளர்களையும், உருவாக்கிய, உருவாக்கிவரும் ஒரு பட்டறை இது என்பதையும் மறுக்க முடியாது. கடந்த காலங்களில் தமிழ் மக்களது அரசியல் பின்புலங்கள் யாவும் இந்தக் கல்விக் கூடத்தை மையமாகக் கொண்டே மேற்கிளர்ந்தன.**

* ஒரு தடவை யாழில் இருந்து வவுனியா சென்றுவந்து பார்த்தவர்களிடம் கேட்டுப் பாருங்கள். ''பஸ்ஸுக்குள் காதல் ஜோடிகள் அதிகம்'' என்று புலம்புவார்கள். அந்த ஜோடிகளில் பலர் பல்கலைக்கழக மாணவர்களே. படுக்கை அறையாக பஸ் இருக்கையை அவர்கள் பயன்படுத்துவதைப் பார்க்க முடியாது. மறுபக்கம திரும்பியிருந்தே பயணிகள் பிரயாணம் செய்ய வேண்டிய நிலை.

* பல்கலைக்கழக வளாகத்துக்குள்ளும் விடுதி அறைகளுக்குள்ளும் மதுப்போத்தல்கள் எப்படி வந்தன? ஏன் வந்தன? மதுச்சாலைகளில் தினமும் பல்கலை மாணவர்களின் 'பார்ட்டிகள்' நடைபெறுகின்ற காரணமென்ன? பீடி, சிகரெட் வியாபாரிகளுக்கு பல்கலை மாணவர்கள்தான் நிரந்தர வாடிக்கையாளர்கள்.

* மது அருந்திய மாணவர்கள் தமது வெறியை வெளிக்காட்ட பேசும் வார்த்தைகளும், மற்றவர்களைச் சீண்டுதல் மற்றும் வீதிகளில் நின்று பெண் பிள்ளைகளை கிண்டல் செய்தல் என்னும் செயற்பாடுகளும் தான் கலாசாரம் காக்கும் செயல்களா?

* பெற்றோர்களிடமும், வேறு உறவினர்களிடமும் பெற்ற பணத்தை அதிகளவில் தொலைபேசிக்காகவும் ஆடம்பரங்களுக்காகவுமே பல்கலை மாணவர்கள் பயன்படுத்துகின்றனர். தொலைத் தொடர்பு நிறுவனங்கள் யாழ். பல்கலைக்கழக மாணவர்களிடம் இருந்து பல லட்சம் ரூபாவை வருமானமாக ஈட்டிவருவதும் தெரிந்ததே.

* இவ்வாறு பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் விரிந்து கிடக்கும் சமூகச் சீரழிவான நடத்தைகளும், வாழ்வியல் முறைகளும் சீர் செய்யப்படும்.வரை எங்கனம் இவர்கள் சமூகத்துக்கு உரைகல்லாவது?

**கேள்விகளுக்கு பதில்?**

கடந்த வியாழக்கிழமை (23.12.2010) அன்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த கலாசார ஒன்றுகூடல் நிகழ்வில் தாம் முன்னெடுக்கவிருக்கும் தீர்மானங்களை அறிவித்திருக்கின்றனர். அந்த தீர்மானங்களை எவரும் விமர்சிக்க மாட்டார்கள்- வரவேற்பார்கள்.

ஆனால் பல்கலைக்கழகச் சமூகத்தினர் விழிப்புணர்வு நோக்கில் சமூகத்தின்முன் தோன்றும் போது, மக்கள் பல்கலை மாணவர்கள் மீது தோற்றுவித்திருக்கும் எண்ண அலைகளை வெளிக்காட்டினால் மாணவர்கள் வெட்கித் தலைகுனியும் நிலையும் ஏற்படலாம்.

## திப்பிலி

எனவே முதலில் பல்கலைக்கழகத்திலும் அது சார்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கண்ணுக்குத் தெரிந்தும் மறைக்கப்படும், கண்ணுக்கே தெரியாத சமூகச் சீரழிவுகளை கட்டுப்படுத்த வேண்டும். இதற்கு ஒவ்வொரு மாணவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கல்விச் சமூகம் சீரழிவுப் பாதையில் பயணித்துக் கொண்டு மக்களுக்கு அறிவுரை கூறுவதை எவரும் ஏற்க மாட்டார்கள். இதனை மனதில் கொண்டு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் செயற்படவேண்டும்.

எமது இனத்தின் தேவைகருதியும், மக்களின் எதிர்கால அரசியல், வாழ்க்கை கருதியும் கல்வியாளர்கள் கவனமாகவும் நேர்மையான அக்கறையுடனும் செயற்பட வேண்டும்.

இந்த அறநிலையிலையே எம்மீது திணிக்கப்படும் திட்டமிட்ட சமூகச் சீரழிவுகளைக் கட்டுப்படுத்த முடியும். இது தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவர் மனதிலும் தோன்ற வேண்டும். அதனை தோற்றுவிக்கச் சமூகத்தைக் கட்டமைக்கக் கூடிய- பொருத்தமான அமைப்பாகப் பல்கலை மாணவர்கள் உருவாக வேண்டும்- உருவாகுவார்களா? *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது பெருமை மிகுந்த மரபுரிமைகள்

# நூற்றாண்டு வாழ்த்துக்கள் வீ

வீடென்பது வெறும் இருப்பிடமல்ல; மண்ணும், சல்லியும் சேர்த்துக்.கட்டப் பட்ட வெறும் கட்டுமானமும் அல்ல. அது எமது நினைவுகளாலும், எதிர்பார்ப் புக்களாலும் கட்டப்பட்ட ஒரு சின்னம். எமது முன்னர் வாழ்ந்து மறைந்து போன சுவடு. வீட்டை இழத்தலும், வீட்டை விட்டு வெளியேறிப் போதலும் என்பது மனதுக்கு மிகச் சங்கடமான ஒரு நில வுரம் தான். ஆனால் கடந்த கால் நூற் றாண்டு காலம் நிகழ்ந்த போர் எம்மை நமது வீடு களில் இருந்து பிடுங்கி எறிந் துள்ளது, ஆசையாய் சிறுகச்சிறுகச் சேர்த்த பணத் தில் கட்டிய வீடுகளை நொடிப்பொழு தில் அழித்து இன்புற் றிருக்கிறது. இரவல் வீடுகளில் தொடர்ந்து வாழவிட்டிருக் கிறது. வீடு தொடர்பில் எம்மிடம் இருந்த மிகக் கட்டிறுக்கமான தொடர்பினையும் ஈடாட வைத்துள்ளது. இத்தகைய அவ லம் காரணமாக நமது பரம்பரை வீடுகள் பலவும் விற்கப்படுகின்றன அல்லது அழிக்கப்படுகின்றன. இந்தப் பின்னணி யில் -சமகால யாழ்ப்பாணத்தில்- நடந்தேறி வரும் மிக முக்கியமான ஒரு துரதிர்ஷ்ட மாக பண்டைய, வரலாற் றுப் பண்பாட் டுத் தனித்துவமுடைய வீடுகளின் அழிப் பைக் குறிப்பிடலாம். பெரும்பாலான இவ்விதமான வீடுகளின் உரித்தாளர்கள் பிற நாடுகளில் இருப்ப தால் அவர்கள் திரும்ப வரப்போவ தில்லை. அவர்க ளுக்குத் தங்களின் நிலம், வீடு யாவும் பழைய ஞாபகங்களாகி விட்டன. எனவே அவர்கள் வீட்டை விற்கிறார்கள் அல்லது வீட்டை அழித்து விட்டுக் காணியை விற்கிறார்கள். இவ் விதமான பண்டைய சிறப்புடைய வீடு களை, கட்டடங்களைக் குறித்த விலைக்கு வாங்கி உடைக்கும் குழுக்கள் புதிதாக உருவாகியுள்ளன. கல்வியங்காடு, சுன் னாகம் போன்ற பகு திகளில் இவ்விதம் வீடுகள், கட்டடங் களை உடைத்து தென்னிலங்கைக்கு அவற்றை நல்ல விலைக்கு விற்கும் குழுக் களும், தொழில்களும் அமோகமாக நிகழ் கின்றன. நாம் கழித்துவிடும் பழைய வீடு தென்னிலங்கையின் ஒரு புதிய வீட்டின் பகுதியாக - புதிய நடப்பு வழக்காக (Fashion) மாறியுள்ளது. இங்கு ஆயிரக் கணக்கில் பணத்தை முதலீடு செய்து வாங்கப்படும் பழைய வீடுகளை, அங்கு இலட்சக் கணக் கில் விற்றுப் பெருந் தொகைப்பணம் பெறப்படுகின்றன. இவ் விதம் அழிக்கப் படும் பழைய வீடுகளில் சில இனிமேல் பயன்படுத்தவே முடியாதென இருந் தால்- அதனை உடைத்துக் கட்டுவதைத் தவிர வேறு மார்க்கம் நமக் கில்லைதான். ஆனால் பாவிக்கத்தக்க பழைய வீடுகளை யும் - திருத்தத்தக்க வற்றையும் -இடித்து அழிக்கின்றோம். உலகத்தில் இவ்விதமான மரபுரிமை வீடுகள் (Heritage houses) தம்மிடம் இருந்தால் அதனையொட்டி அந்த மக்களும் - நாடுகளும்- பெருமை கொள் கின்றன. இது எனது பேரனாரின் வீடு - முப்பாட்டனாரின் வீடெனக் கொண் டாடுவதில் அவர்கள் மகிழ்ச்சி கொள்கி றார்கள். இன்று கட்டப்படும் கொங்கிறீற் வீடுகளை அவர்கள் கனவு கண்டு, தமது பண்டைய பெருமைமிக்க வீடுகளை அழிப்பதில்லை. எம்மிடம்- யாழ்ப்பா ணத்தில் -காலணித்துவ காலத்தில் எம் மிடம் வந்து சேர்ந்த பண்பாட்டுத் தொடர் புகள், பொருளாதார முன்னேற்றங்கள் வழியாக நாம் கட்டடவியல் ரீதி யாகவும், பண்பாட்டு ரீதியாகவும் பலமுடைய பல வீடுகளை ஊர் தோறும் கட்டியுள்ளோம். நூற்றாண்டுகளைக் கடந்த இந்த வீடுகள் தான் பெரும்பாலும் இன்று பலி கொள் ளப்படுபவை தென்னிலங்கைக்கு ஏற்றப் படுபவை. குறைந்தபட்சம் புதிய வீடு களைக் கட்டும் நாம் இந்தப் பண்டைய செதுக்கற் சிறப்புடைய வீடுகளின் கதவு கள், யன்னல்களைக் கூடத் தென்னி லங்கை மக்கள் போல வாங்கி மீளப் பொருத்துவதுமில்லை. இவற்றின் தொடர்ச் சியான அழிப்பு, எமது வீட்டுக் கட்டடக் கலையின் பிராந்தியச் சிறப்பின் தனிய டையாளங்களையும் அழித்துச் செல்கின் றன. இப் பின்னணியில் இவற்றைப் பாது காப்பதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டம் தேவைப்படுகிறது. வெளி நாடுகளைப் போல இவ்வித மான வீடுகளைப் பொது அமைப்புக்கள் தமது நிறுவனப் பயன்



பாட்டுக்குப் பயன்படுத்தலாம். ஆக்கிக் கொள்ளலாம்; வாங்கலாம். இது அவர்களது நிறுவனத்தை நோக் கிய ஈர்ப்பை, அதன் கட்டுமானத் தாலும் பெறத்தக்க வாய்ப்பினை உண்டாக்கும். ஆகவே இவ்வித மான பண்பாட்டு வீடுடையோர், இது பற்றி ஆர்வ முடையோர் இத்த கைய சூழலில் இறந்து கொண்டும், கொல்லப் பட்டுக் கொண்டிருக்கும் வீடுகளைக் காக்க நடவடிக்கை ஏதா வது மேற்கொள்ள வேண்டும். இது இவ்வாறிருக்க, முன்னுதாரணமாக இவ் விதமான வீடுகளைக்காக்கும் நடவடிக்கைகளையும் எடுத்துக்காட்ட விரும்பு கின்றேன். திருநெல்வேலி ஆடிய பாதம் வீதியில் உள்ள பழைய வீடுகளில் ஒன்று சபா கிரி.1910 இல் கட்டப்பட்ட இந்த வீடு நூற்றாண்டைக் கடந்து வாழ்கிறது. சபா பதி பரம்பரைக்குச் சொந்தமான இந்த வீட்டின் உரிமையாளர்களும், பிறநாட்டி ல் தான் வசிக்கிறார்கள். ஆனால் அவர்கள் தமது

# காத்திருந்து...
# காத்திருந்து...




வெள்ளம் வடிந்தோடும் முன்னரே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டிருப் பது மனதுக்கும் மகிழ்ச்சியைத் தருகின் றது. அதுவும் மீள்குடியேற்ற அமைச் சர், பிரதியமைச்சர் இருவரும் நேரடியாகச் சென்று மக்களின் காலடியில் நிவாரணத்தைக் கைய ளித்துள்ளமை இன்னும் ஒருவித சந்தோஷத்தை ஏற்படுத்தியது.

இத்தகைய நிவாரணங்களை அந்தந்தக் கிராம உத்தியேகத்தர்கள் தான் வழங்குவது வழமை ஏன் இந்த முறைமட்டும் இப்படியொரு மாற் றம்? என்று பலரும் தமக்குள் பேசிக் கொண்டார்கள் ''என்ன தான் இருந்தா லும் தாங்களே வந்து குடுத்தால் தான் அவங்களுக்கொரு மவுசாம்.....''

ஆனால் என்ன எதனையும் முறை யாக பிளான்' பண்ணிச் செய்யவில்லை.

பாவம் வேலணை மக்கள்! பரிதா




பத்துடன் நீண்ட நேரம் காத்திருக்க வேண் டியதாகிவிட்டது.

அதை நினைக்கும் போது 'பனை யால் விழுந்தவனை மாடேறி மிதித்த' கதைதான் ஞாபகத்துக்கு வந்தது.

''வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் காலை 8 மணிக்கே பிரதேச செயலகத்துக்கு வந்துவிட வேண்டும்'' என்று கிராம உத்தியோகத் தர்கள் அறிவித்திருந்தார்கள். எனவே குறித்த நேரத்துக்கு முன்பாகவே மக்கள் அங்கு குழுமியிருந்தார்கள். அந்த மண்டபத்தில் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஒளிவிழா நிகழ்வுகளும் நிறுத்தப்பட்டு மக்கள் அமைச்சர்களின் வருகைக் காகக் காத்திருக்கிறார்கள்.

**கனிநேசன்**

நீண்ட நேரமாக வழிமேல் விழி வைத்து...... பார்த்திருந்து... காத்திருந்து.... மக்கள் களைத்தே போனார் கள். கைக்குழந்தையுடன் வந்த தாய்மார்கள், வயோதிபர்கள் எனப்பலரும் கால் கடுக்க காத்திருக்கிறார்கள்.... பின்னர் இடையிடையே ஒளிவிழா நிகழ்வு களையும் நடத்திக் கொண்டிருந்தார்கள். அமைச்சர்கள் நண்பகல்2 மணிக்குத்தான் அங்கு பிரசன்னமாகினர்.

மேடையில் ஏறியதும் பிரதியமைச்சர் குனிந்து பணிந்து வணக்கம் சொன்னார். அங்கி ருந்த மக்களின் முகத்தில் எவ்வித [illegible] வில்லை. அந்தளவுக்குக் களைத்துப் போனார் கள் என்பதை மட்டும் புரிந்துகொள்ள முடிந்தது. இப் படியே ஒருவாறு நிகழ்வுகள் நண்பகல் ஒரு மணியளவில் நிறைவு பெற்றன.

ஒரு பொதிப் பொருள்களுக்காக ஆறு மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டிய மக்களின் அவல நிலையினை யார் அறிவர்? எமது மக்களைக் காத்திருக்க வைத்திருப் பதிலே சிலருக்கு அலாதிப் பிரியம் போல...!

எந்த நிகழ்வென்றாலும் குறிப்பாக அமைச்சர்களுடைய நிகழ்வுகள் என்றால் அவ்வாறு அதிக நேரம் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

'இவர்கள் ஏன் தொடர்ந்தும் இந் தத் தவறை விடுகிறார்கள்'? என்று மக்கள் அங்கலாய்க்கிறார்கள்.

இதை எமது மக்களுக்கான விதியென்பதா? சதியென் பதா?...... அல்லது இதுதான் நியதியென்பதோ? ஒன்றுமே புரியாமல் இருக்கின்றோம். பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக் கும் நிவாரணங்கள் கிடைத்ததா? என்பது வேறு விடயம். வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவா ரணங்கள் வழங்குவதாகக் கூறி அவர் களை உள்ளத்தாலும் பாதிப்படையச் செய்துவிட்டார்களே என்ற மனக் கவலையைத் தவிர வேறொன் றும் அறியேன் பாரபரமே.........!

# க லைகளி
# லாபவ

யாழ்ப்பாணத்தில் பரதக்கலை பரீட்சையை மையப்படுத்தி வளர்ந்து வருவதனால் மாண வர்களைத் தயார்ப்படுத்துவதில் கலாபவனம் முக்கிய பங்கு வகிக்கின்றது. அத்துடன் நாட் டிய நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஆற்றுகை செய்வதிலும் முன்னணி வகிக்கின்றது. கலாப வனத்தில் கற்ற மாணவர்கள் பல்கலைக் கழகத் திலும் நுண்கலைக் கழகங்களிலும், ஆசிரியர் கலாசாலை, கல்வியியற் கல் லூரிகளிலும் பரதத் தினைக் கற்று கலைமாணி, நாட்டிய மாணி, முதுதத்துவமாணி, கலா வித்தகர்பட்டங்களைஇலங்கை, இந்தியப் பல்கலைக்கழங் களில் பெற்ற துடன் கலாநிதி பட்டத்திற்கான ஆய்வினை யும் மேற்கொண்டு வருகின்ற னர். பட்டங்கூள் பெற்றதுடன் ஆசிரியர் களாகவும், ஆசிரிய ஆலோசகர்களாகவும், விரிவு ரையாளர்களாகவும், கலைஞர் களாகவும் திகழ்கின்றனர்.




கலாபவன படைப்புக்கள் தனித்துவம் வாய்ந்தவை. பரத நிருத்தியம், நடன நாட கங்கள் இடம், சூழல் கலைஞர்கள் ரசனை யைக் கவனத்தில் கொண்டு ஆற்றுகை செய் யப்படும். நடனக்கலையினைப் பல வருடங் கள் முறையாகக் கற்ற ஏரம்பு சுப்பையாவின் நெறிப்படுத்தலில் ஏழு மாணவர்களும் திருமதி சாந்தினி சிவனேசன் நெறி யாள்கையில் இருபத்தைந்திற்கு மேற்பட்ட மாணவர்களும் அரங்கப் பிரவேசம் செய் துள்ளனர்.

ஏரம்பு சுப்பையா அவர்கள் கலாபவன மாணவர்களினூடு முள்ளில்ரோஜா குறிஞ்சிக் குமரன், காமதனம், சதி அகல்யா, ஊர்வசி போன்ற பதினைந்திற்கு மேற்பட்ட நடன, நாடகப் படைப்புக்களையும், திருமதி சாந்தினி சிவனேசன் அவர்களால் 'விமோ சனம்', 'திருக்குற்றாலக் குறவஞ்சி', 'இராகவ தாதன்', 'நித்திய சுமங்கலி', 'ஆர் கொலோ சதுரர்' போன்ற இருபத்தாறுக்கு மேற்பட்ட நடன, நாடகங்களையும் தயாரித்து உள்ளார். இவரு டைய காலத்தில் பல்கலைக்கழக விரிவுரையா ளர்களின் நெறிப்படுத்தலில் கலாபவன மாண வர்களும் ஏனைய நிறுவன மாணவர்களும் இணைந்து நடன, நாடகத் தயாரிப்பில் ஈடு பட்டுள்ளனர். கலா பவன நடன, நாடகங் களின் வெற்றிக்கு பரதநாட்டிய அறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடே....!

வீட்டை உடைக்க வுமில்லை, உடைப்பவர்களிடம் கொடுத்து வீட்டைக் கொத்தி விட்டு நிலத்தை மட்டும் பாதுகாக்கவும் இல்லை. மிகவும் பிரக்ஞை பூர்வமாக இந்த வீட்டைப் பாதுகாக்க வேண்டும் என நினைத்து 2004 இல் இவ்வீட்டை அவர்கள் காப்பு நடவடிக்கைக்கு உள்ளாக்கி இருக்கிறார்கள். அது கூட முகப்பில் எழுதி வைக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டுக்கு, அதன் உரித்தானவர்களுக்கு அவ்வீட்டின் நூற்றாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்க இந்தப் பத்தி விரும்புகிறது. இது போலவே 1914 இல் கட்டப்பட்டு, தற்போது 96 வயதில் வாழும் வீடு (இருதய சிகிச்சை நிபுணர் லஷ்மணனுக்குச் சொந்தமானது இந்த வீடு) மற்றுமோர் சிறந்த உதாரணம். ஆனைப் பந்தியில் இருக்கும் இந்தவீட்டை அவர் புதிய ஒரு வீடு போலவே வர்ணம் பூசிப் பாது காக்கிறார். அங்கேயே வாழ்கிறார். காலங் கடந்தது - பழையது - தனது உத்தியாக அந்தஸ்துக்கு இதைவிட வேறொரு மனை தான் பொருத்தமென அவர் கருதவில்லை. பதிலாகத் தமது மரபுரிமையின் மகத்துவத்தினை அவர் நன்கு அறிந்துள்ளார். எத்தகைய புதிதும் தமது பழைய வீட்டுக்கு ஈடில்லை என்பதும்





அவருக்குத் தெரிகின்றது. எனவே இயன்றவரை எமக்குக் கிடைத்த பண்பாட்டுச் சுட்டிகளை - எமது முன்னோர்கள் கட்டியமைத்த வீடுகளை இயன்றவரை பாதுகாக்க - கொண்டாடி மகிழ முயல்வோம். எமது நாற்சார வீடுகளின் அழகிய லையும் - ஆரோக்கியச் சிறப்பினையும் நாம் மறந்து விட்டோம். புதிய வீடுகளை நிர்மாணிக்கும் போது, எமது பழைய வடிவமைப்புக்களின் சிறப்புக் கூறுகளை திரும்பக் கொண்டு வரவும், பழையனவற்றை (யன்னல், கதவுபோல) புதியவற்றிலும் பகுதியாகவும் இணைப்பதன் மூலமும் கூட பழையதோடு, புதியதையும் நற்பண்பாட்டு அடையாளம்ஆக்கமுடியும். முயல்வோமா?

**ம.திருக்குமரன்**

# ...ளின் உறைவிடம் ...வனம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

மட்டுமன்றி கதகளி, கிராமிய நடனங்கள், நாடகம் பற்றிய அறிவும் பயிற்சியும் முக்கியமான காரணிகளாகும்.

வெளிநாட்டுப் பிரமுகர்களும் யாழ்ப்பாணத்திற்கு வெளியேயுள்ள பிரமுகர்களும் யாழ்ப்பாணம் வந்த பொழுது அவர்களை வரவேற்று கௌர விக்கும் வகையில் கலாபவனம் நடன நிகழ்வுகளைத் தயாரித்து அளித்து பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. அமெரிக்கா, ரஷ்யா,



அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்த போது அவர்களைக் கௌவிக்கும் வகையில் கலாபவன உள்ளக அரங்கில் நடன நிகழ்ச்சிகளை நடாத்தி அவர்களை மகிழ் வித்தனர். பல்கலைக்கழக மன்ற விழாக்கள், கம்பன் விழா, ஆலய கும்பாபி ஷேக விழாக்கள், நூல்வெளியீடுகள், இளம் கலைஞர் மன்ற வருடாந்தக் கலைநிகழ்வுகள் நவராத்திரி விழாக்கள், மணி விழாக்கள் பிரதேச சபை வருடாந்த கலை விழாக்களில் கலாபவன மாணவர்களின் கலைப்படைப்புக்கள் அரங்கேற்றப் படுகின்றன. ஏரம்பு சுப்பையாவுடைய காலப்பகுதியில் கலாபவன உள்ளக அரங்கிலேயே நவராத்திரி விழா, நடன அரங்கேற்றங்கள் இடம் பெற்று வந்தன. நிகழ்வுகளில் கலைஞர்களின் வரவு அதிகரித்தமையினால் திறந்த வெளியரங்கினை நிறுவிக் கலை நிகழ்வுகள் அவைக ஆற்றுகை செய்யப் பட்டன.

கலாபவன ஆற்றுகைகள் யாழ்ப்பாணத்தில் மட்டு மன்றி வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம், வவுனிக்குளம், நெடுங்கேணி, அனுராதபுரம், குருனாகல், திருகோண மலை, காலி, நுவரெலியா, கண்டி, கொழும்பு போன்ற இடங்களிலும் நடன நிகழ்வுகளை அரங் கேற்றியுள்ளனர்.

கலாபவனத்தில் மூன்று சஞ்சிகைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவை நாட்டியக் கலையைக் கற்கும் மாணவர்களுக்கு ஒரு சிறந்த வழி காட்டியாக விளங்குகின்றன. கலாபவன ஆசிரியர்கள், மாணவர்கள், சஞ்சிகை, பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதுவது டன் நடனம் சார் விரிவுரைகளையும் நிகழ்த்தி வருகின்றனர். கலா பவனம் கலைப் பணியுடன் மட்டு மன்றி சமூகப் பணியிலும் செயற்பட்டு வருகின்றது. கோயில்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகம், கலா மன்றங்கள் தம் பணிகளைச் செவ்வனே செய்வதற்கு நிதி சேகரிக்கும் வகையில் பல நடனநிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கியுள்ளது.



ஏரம்பு சுப்பையாவின் விடா முயற்சி அயராத உழைப்புடன் கலைக்காகவே தன்னை அர்ப்ப ணித்து தமது கலைப் பணியை எந்த இடையூறுகளுமின்றி வளர்வதற்கு உருவாக்கப்பட்ட கலைப் பொக் கிசமான 'கலாபவனம்' இன்று தனது பொன்விழா ஆண்டிலே தடம் பதித்துள்ளது. கொக்குவிலில் ஆரம்பமான 'கலாபன' செயற்பாடு ஏரம்பு சுப்பையாவின் மகள்களான திருமதி கிருத்திகாயினி ஜெகதீஸ்வரன், குமுதினி ஸ்ரீகாந்தன் போன் றோராலும் கலாபவன மாணவர்களாலும் புலம் பெயர் நாடுகளில் அரங்கேற்றங்களாக, கலை நிகழ்வுகளில் வளர்க்கப் பட்டு வருகின்றன. கலாபவன மாணவ்ர்கள் பல போட்டிகளிலும் நடன நிகழ்வுகளிலும் பங்கு பற்றிப் பல பரிசில்களையும் பாராட்டுதல்களையும் பெற்று கலாபவனத்திற்கு பெருமை சேர்த்தவண்ணமுள்ளனர். கொக்குவில் கலாபவனத்தில் திருமதி சாந்தினி சிவனேசன் சம காலத்தில் பல மாணவர்களுக்கு பயிற்சியளித்து சிறந்த நடனக் கலைஞர்களை உருவாக்கி வருகின்றார். கலாபவனம் தனது கலைப் பணியைக் காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு தொடர்ந்து ஆற்ற வேண்டும். பல மாணவர்களையும், கலைஞர்களையும் ஆசிரியர்களையும் உருவாக்க வேண்டும்.

" வாழ்க கலை வளர்க நம் கலைப் பாரம்பரியம்"

**செ.கண்ணன்**

# பத்துத் தலைப் பாம்பு பார்த்தனீங்களா?



அவர்கள் என்னை வழிமறித்து கேட்ட போது சட்டெனக் குழப்பமாகி நின்றேன்.

"என்ன கேட்டீர்கள்? மறுபடியும் சொல்லுங்கள்?"

"உங்கட ஊரில பாம்பாம், 'பத்துத்தலையோடையாம் பார்த்தனீங்களே...?" அவர்கள் எனது பதிலை எதிர்பார்த்து ஆர்வமாக நின்றார்கள். எனக்கோ "பாம்பாம் பத்துத்தலையாம்"என்ற கேள்வியோடு எனக்கிருந்த ஒரே ஒரு தலையும்குழப்பிப் போனது. காலையில் எழும்பி அவசரமாக வேலைக்கு வந்தவுடன். இப்படியான கேள்வியை நான் எதிர்பார்க்கவில்லை.

'ஊரில் எப்படி மழை, வெள்ளம்' 'வேலைக்கு போய் வ்ாறது எப்படி?' 'சம்பளம் ஒழுங்காய் வருகுதோ?' என்ற பாணியில் கேள்விகள் கேட்டால், பக்கம் பக்கமாகப் பதில் சொல்லலாம் இதை விட்டிட்டு 'பா....ம்....பு என்று கேள்வி கேட்டால் எனக்கென்ன தெரியும்?

பெண்களுக்குச் சமஉரிமை கொடுப்பதில் முன்னிற்பவன் என்பதால் நான் ஆண்மகனாக இருந்தாலும் எனது மனைவிக்கு 'முக்கியமான பொறுப்பு'க்களை கொடுத்துள்ளேன். அதில் முக்கியமானது "அழையா விருந்தாளிகளைக் கவனித்து கொள்வது. யாராவது அப்படி வீட்டுக்கு வந்தால் மனைவி "செம்மையாக" பார்த்துக் கொள்வாள்.

சரி அழையா விருந்தாளிகள் யார்?

எல்லாம் "நான்கு கால், எட்டுக்கால் கொண்ட ஊர்வனவும், மற்றும் பூச்சியினங்களும்தான். அவை அத்து மீறி உள்ளே நுழைந்து 'அடையாள அட்டைகளை'க் காட்டினாலும் மனுசி விடமாட்டாள் துவம்சம் செய்து விடுவாள். இந்த முக்கியமான 'பாதுகாப்புப் பொறுப்பை' கலியாணம் முடிந்த நாள் தொடக்கம் மனைவியிடம் ஒப்படைத்து விட்டேன். இன்று வரை அதில் நான் தலையிடுவது இல்லை. இப்போது உங்களுக்கு எனது 'வீரம்' பற்றி நன்கு புரிந்திருக்கும்.

எனவே பாம்பு சம்பந்தமான கேள்வியை எனது மனைவியிடம் கேட்டிருக்க வேண்டும். என்ன செய்வது? நான் 'பாம்பிடம் மாட்டிக் கொண்டவன் போல்' நின்றேன் "என்ன கடுமையாய் யோசிக்கிறியள்? உங்கட ஊரிலதான் நிக்குதெண்டு பேப்பரில் வந்ததாம். படமும் வைச்சுக் கொண்டு திரியுறாங்கள்."

எனக்கு உள்ளுக்குள் கோபமாக இருந்தது.

"பாம்பைப் பற்றிக் கதைச்சு என்ன செய்யப் போயினம்" இது உண்மையா? பொய்யா? மூளையை ஆசுவாசமாக்கி யோசிக்க வேண்டும் நான். கேள்வி கேட்டவர்களை சமாளிக்க வேண்டும். "நானும்... கேள்விப் பட்டனான்... ஆனால் பாம்பை நேரில் பார்த்து காலைவணக்கம் சொல்லேல."

"இஞ்ச பாருங்கோவன் படமும் வைச்சிருக்கிறம்" காட்டினார்கள். படத்தை பார்த்தேன் பத்துத்தலை! எண்ணிப் பார்த்தேன் சரியாக இருந்தது... ஏதோ சொல்ல வேண்டும் போல் இருந்தது, வாயை அடக்கிக் கொண்டேன் எனக்கிருக்கின்ற ஒரு தலையையும் பாதுகாத்துச் சொல்ல வேண்டும்.

"என்ன பார்த்தியளே படத்தை..."

"அட...எனக்கும் ஆச்சரியமாகக் கிடக்கு"

"ஊரில நேரில பார்த்த ஆக்கள் இருப்பினமோ?" "என்னெண்டு தெரியாது. இண்டைக்கு போய் விசாரிச்சுப் பாக்கிறன் எங்கட விதானையாரிட்டக் கேட்டுப் பார்க்கிறன் யாராவது பத்துத்தலை யோட வந்து புதிசாய் 'பமிலி கார்ட்' கேட்டவையோயெண்டு...."

"கண்டிப்பாக எங்கட வீட்டுப் பக்கம் "பாம்பு வந்திருந்தால் மனுசி கண்டிருப்பாள் கண்டிருந்தால்.... பாம்பு தொடர்ந்து ஒரே இடமாக இருக்காது தானே. 'எப்படியும் எங்கட பக்கம் வரத்தானே செய்யும் அடிகிடி படாமப் பாம்பைப் பிடிச்சுப் போட வேணும். நாங்கள் நெடுகப் பாக்கிற பாம்பு "சாரைப் பாம்பு" தானே அதுவும் ஒருதலையோட! பாவம் சாரைப்பாம்புக்கு பயமோ, மரியாதையோ நாங்கள் கொடுக்கிறதில்லை. அது அப் பிராணி மூர்க்கமும், விசமும் கொண்டவைக்குத்தான் நாங்கள் பயத்துடன் மரியாதை கொடுப்பம்.

**தொல்புரம் சி.கதிர்காமநாதன்**

அது எங்கட பரம்பரைப் பழக்கம்." எனக்குள் சிந்தனை இன்னும் நீண்டது.

'என்னெண்டுதான் பாம்பு பத்துத்தலையோட பிறந்தது? என்ன பாம்பாக இருந்தாலும் பத்துத்தலையோட பிறப்பதை நாட்டில் யாரும் தடை செய்யவில்லைத்தானே. அதற்கு உரிமை உண்டு தானே. பத்து தலைகளோடு இராவணன் பிறந்த நாடல்லவா இது'.

"என்ன வேலை முடிஞ்ச கையோட வந்து யோசிந்துக் கொண்டு இருக்கிறியள்?" மனைவியின் கேள்வி சிந்தனையை உலுப்பியது.

நான் என்னை குழப்பிக் கொண்டிருந்த - கேள்விப்பட்ட விசயத்தைச் சொன்னேன்.

"எனக்கு வெக்கமாய் கிடக்கப்பா, உங்க எல்லா இடமும் இதுதான் கதை...ஏனப்பா உம்மோட தன்னும் ஒருத்தரும் கதைக்கேலையே"? என்று கேட்டேன். "கதை கேட்கிற மாதிரியோ நான் இருக்கிறன். நீங்கள் நக்கலடிச்சுக் கொண்டு கதையாதையுங்கோ நாகபூசணி அம்மாளின்ரை குறை பாடோ.... பக்கத்தில் விசாரிச்சு பாப்பம்" மனைவியின் விசாரணைக்குழு அமர்வுகளை அவசரகதியில் ஆரம்பித்தது. நாங்களும் கண்ணால பாக்கேலையக்கா..... கதையளை கேட்டுக் கொண்டுதான் இருக்கிறம்" எங்கையோ ஊரில கன பாம்புகள் வந்திட்டுதாம் எண்டும் கதைக்கினம்....

"வானில் வாற ஆக்களும் பாம்பு எங்கை நிக்குதெண்டு கேட்டுக் கொண்டு போகினம். இப்படித்தான் சாட்சியங்கள் அமைந்தன.

மொத்தத்தில் யாரும் பத்துத் தலையோடு பாம்பைப் பாக்கவில்லை. அதனோடு பேசவுமில்லை. பேட்டியொன்றும் எடுக்கவுமில்லை 'நான் ஏன் மண்டையைப் போட்டு உடைப்பான்.'

"எங்களை எல்லாம் நல்ல சுத்தப் பழகிட்டாங்கள். போய் மற்ற வேலையளைப் பாருங்கோ" என்றாள் மனைவி

"ஓமப்பா....பத்துத்தலையோட பாம்பு பிறக்கிறதெண்டால் எங்கேனும் வெளிநாட்டில் தான் பிறக்கும். பிரச்சினையில்லை இங்கை எங்கட நாட்டில் பிறக்க விரும்பாது. பத்துத்தலைக்குமெல்லோ "அடையாள அட்டை எடுக்க வேணும்" என்றேன். "உதுதான் உங்களுக்குத் தெரியும்" மனைவி முறைத்தாள். அவளது தலை இப்போது பத்தாகத் தெரிந்தது.

★★★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிட்டுக் குருவி ஊர்வலம்



4

யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்தின் எதிரே மருத மரத்தில் தனது கூட்டினுள் சிட்டுக் குருவி நுழையும் போது நேரம் சரியாக மாலை 6 மணி. இருளாகி விட்டது. கூட்டி னுள் இருந்தபடியே சிவன் கோயில் சம்பவத்தை ஒரு முறை மீட்டுப் பார்க்கிறார். அந்த வேப்ப மரத்தின் கீழ் ஒரு குரல்....!

'' ... விக்கிலீக்ஸ்காரனும், சனல் 4ம் ஏட்டிக்குப் போட்டியாக விளாசித்தள்ளுகிறாங்கள். எங்கடை பிரச்சினையை நாங்களே தீர்த்து வைப்போம். அடுத்த வீடு, அயல் வீடு தேவையில்லை என்று சொன்னவையள், இப்ப இதுக்கு என்ன செய்யப்போகினம்? சந்தி சிரிக்கிற அளவுக்குப் பெரும் வெக்கக்கேடான வேலையாப் பேச்சுப்... பாருங்கோ. குளிக்கப் போய்ச் சேறு பூசின மாதிரி விசயம் எல்லாம் எக்கச் சக்கமாய் இறுகி வருகுது...! இதுக்கு நீ என்ன சொல்லுகிறாய்...?'' என்று சந்திரன் கேட்கிறான்.

'' அது மச்சான்... அனேகமாக 1956 இல் இருந்து உள் நாட்டிலை ''ஓவர்மாறி ஓவர்'' இனப்பிரச்சினை என்ற ஒரு பந்தை ஒருவர் மாறி ஒருவர் கிரிக்கட் அடிச்சவை. இப்ப ஒரு ரீம்க்குப் பதினொரு பேர் என்று ரீம் பிறிச்சுப் '' புட்போல்'' அடிக்கினம்...! அதுவும் கோல் சறுக்குது. பந்துக்கும் காத்துப் போற மாதிரிக் கிடக்குது. அடுத்தது என்ன விளையாட்டோ தெரியவில்லை. இப்ப எல்லாமே விளையாட்டுத் தான்டா மச்சான் !'' என்று அவனது நண்பன் பதில் அளித்ததும் அங்கு நின்ற அத்தனை பேரும் ''ஹீ...ஹீ...'' எனச் சிரித்தனர்......!

அதில் ஒருவர் '' நாட்டுப் பிரச்சினை இப்படி என்றால் வீட்டுப் பிரச்சினை என்ன மாதிரி ? '' என்றார். ''வீட்டுப் பிரச்சினையோ...? ஒரு தனி மனிதனிலை இருந்து தானே சமுதாயம் உருவாகுது. ஒன்று வெளிப்படையாக நடக்குது. ஒன்று மறைமுகமாக நடக்குது. பட்டப் பகல்லை றோட்டிலை நடந்து போன பொம்பிளையின்ர சங்கிலியை அறுத்தான்கள். கத்தி, வாள், மற்றதும்.... வெளிக்கிட்டுட்டுது . இனி என்ன.. ஒன்யுவர் மாக், கெற் செற் என்ற மாதிரித் தான்... '' '' அப்ப இன்னும் றெடி சொல்லேல்லையோ? '' என்றான் சந்திரன்.

''குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு இரையாக்கின மாதிரி ஆகிப்போச்சு எங்கட நிலைமை. பருந்துகள் எல்லாம் கொழுத்த மீனைத் தேடி அலையுதுகள்... முந்தியைப் போலை கொலையும் கொள்ளையும் எண்டால் மச்சான், மனுசன் எப்படிச் சீவிக்கிறது? இன்னும் எத்தனை எத்தனை நாகங்கள் வெளிப்படுகுதோ எம் பெருமானுக்குத்தான் தெரியும்'' என்றபடியே அந்த முதியவர் சிவன் கோவில் கோபுரத்தைப் பார்த்துக் கும்பிடுகிறார்.

''பெண்புரசுகள் கழுத்திலை, காதிலை போட்டுக் கொண்டு போகேலாது, இரவிலை நிம்மதியாகப் படுத்து ஒரு கண் நித்திரை கூடக் கொள்ள முடியேல்லை. அடுப்பில பூனை தட்டினால் கூட அடிக்கடி நித்திரைக் குழப்பம்...!

அனேகமாக 1983, 84 ஆம் ஆண்டுக்குப் பின்பு இருந்தது போல் எல்லாருக்கும் இடி விழுந்த மாதிரி ஒரு பயப்பாடு!... அந்த நாள்களில் வீட்டுக்கு வீடு '' ரேண்'' போட்டு ஊர் ஊராகக் காவல் பார்த்தது ஞாபகம் இருக்கே? திரும்பவும் அந்த மாதிரித்தான் வந்திருக்குது'' என்று அவர் தொடர்ந்து கூறியதும்... '' எல்லாற்றை வரலாறுகளும் முன்பக்கமாக நீண்டு போகுது. எங்கடை வரலாறு '' றிவேஸ்'' இலை போகுது '' என்றான் சந்திரன்.

பார்த்தியளே...! எல்லாம் ''றிவேஸிலை'' திடீரெனத் தனது கைக் கடிகாரத்தைப் பார்த்த அவன் ... ''இன்றைக்குக் கன நேரமாக நின்று விட்டு நான் போகிறேன்'' என்று தனது சைக்கிளை மிதித்தான். நேரம் மதியம் 12.39. சிட்டுக் குருவியாரும் அங்கிருந்து கிளம்பி மேற்குத் திசையில் உயரப் பறந்து செல்கிறார்...!

சிறிது தூரம் பறந்ததும் ஒரு வைத்தியசாலை சிட்டுக்குருவியாரது கண்ணுக்குப் புலப்படுகிறது.

அதன் முன் மோட்டார் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அருகே அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்தில் சிலர் பஸ்ஸுக்குக் காத்து நிற்கின்றனர். குருவியாரும் பஸ் தரிப்பிடத்தின் அருகே நின்ற இப்பில் இப்பில் மரத்தில் அமர்கின்றார். கீழே...

''வாத்தியார்..., என்ன தலையைக் குனிஞ்சுகொண்டு போறியள்? இஞ்சை வாருங்கோ... இதிலை இருந்து கதைப்பம்'' ''ஓம் ஓம் நான் அந்த மடத்தடி வரைக்கும் சும்மா நடந்துபோய் நடந்து வாறன்... அங்கை ஒரு செத்த மாடு, அதுக்கு மேலை ரெண்டு காகங்கள்.... கொத்திக் கொத்தித் தின்னுதுகள். உண்ணியையும் தின்னுதுகள். ''செத்த மாட்டிலை உண்ணிகளண்ட மாதிரி'' என்று சொல்லுறது தெரியுந்தானே அதுதான் எல்லாத்தையும் நினைச்சுக் குனிஞ்சுகொண்டு போறன். இப்ப எங்கடை ஆக்கள் எல்லாம் குனிஞ்சு கொண்டுதான் போகினம். வங்கியிலை லொக்கரும் இல்லையாம்... விளங்கிச்சோ கனகு''

''ஓம்... ஓம்... வாத்தியார். இதுக்குத் தான் நான் உங்களைக் கூட்பிட்டது. இப்ப எனக்கு விளங்குது. ஒன்று மாறி ஒன்று, எல்லா வழியாலையும் எங்களுக்குப் பெரும் நெருக்கு வாரமாத் தான் கிடக்குது. இயற்கையும் மாறி நிக்குது. அளவுக்கு அதிகமான மழை பெய்து றோட்டுகள் எல்லாம் சீரழிஞ்சு போய்க்கிடக்கு. அதிலை ஓடினதில அம்புலன்ஸ்க்கையே பிள்ளையும் பிறந்திட்டுது. மழை இப்பிடித் தொடர்ந்து பெய்யும் என்றால் தண்ணீருக்குள்ளை தான் நெல்லு வெட்ட வேண்டிவரும்'' என்று வாத்தியாரின் நீண்ட கால நண்பர்ரான கனகர் கூறுகின்றார்.

''நாங்கள் எல்லாத்துக்கும் கடவுளே கடவுளே என்றால் அவரும் தான் என்ன செய்ய? கள்ளனும் அந்தக் கடவுளைத் தான் கும்பிடுறான்.''

''ஓம் வாத்தியார் பட்டினத்துப் பிள்ளையார் தியானத்திலை இருக்கேக்கை கள்ளன் வந்து-பிள்ளையாருடைய கழுத்திலை முத்து மாலையைப் போட்டுட்டுப் போன மாதிரி எண்டு சொல்லுங்கோவன்..''

''ஓம்... ஓம்... அப் பிடியும் நடக்குது.''

மாலை வேளையானதினால் இனி இங்கிருந்து பிரயோசனமில்லை எனச் சிட்டுக் குருவியாரும் அவ்விடத்தை விட்டுத் தனது கூட்டை நோக்கிப் பயணிக்கின்றார். நேரம் மாலை 5.30 நேரே யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்குள் நுழைந்து பயணிகள் இளைப்பாறும் ஆசனத்தின் எதிர்ச் சுவரின் மேல் இருக்கிறார் சிட்டுக் குருவியார்... ''அவன் டினோஷன் நல்லவன். படிப்பிலையும் கெட்டிக்காரன். எல்லா விளையாட்டிலையும் கெட்டிக்காரன். சம்பியன் எடுத்தவன். என்னவோ சனியன் பிடிச்ச மாதிரி இப்ப அவனைத்தானே கதைக்கினம்..., எல்லாம் இந்தக் கால இளசுகளின்ர துடிப்பால வாற வினையள்''

''கதையோட கதையா ஒரு விஷயம் தெரியுமோ...? கொழும்பு ஆஸ்பத்திரியிலை இருந்து வந்து இங்க வேலை செய்யிற டொக்டரே அதிசயப்பட்டு அறிக்கை விடுகிற அளவுக்கு யாழப்பாணம் வைத்தியசாலைக்குக் கர்ப்பம் அழிக்கிறதுக்கு வாற பாடசாலை மாணவிகள் எண்ணிக்கை அதிகமாக இருக்குதாம்''

'' ஓம் அக்கா ! நானும் கேள்விப்பட்டனான். இதைப் பற்றி மகளிர் நோய்ப் பிரிவுப் பெண் டொக்கரும் சொல்லியிருக்கிறார். என்று பேப்பரிலை கிடக்காம்.

எங்கடையளும் அங்க போறன், இஞ்சை போறன், பள்ளிக்கூடம் போறன், ரியூசனுக்குப் போறன் எண்டு தான் போகுதுகள். என்ன நடக்கு தெண்டு நாங்கள் என்னத்தைக்கண்டம். நாங்கள் இதுக்கு என்னதான் செய்ய. இதுதான் பாஷனாம். அதுகள் கனக்கப் படிச்சுட்டுதுகள். ஒரு பிள்ளையோடையும் ஒண்டும் கதைக்கேலாமல் கிடக்குது. பஸ் வருகுது நான்போறன்'' என்று கூறிக் கிளம்பினார் அந்தப் பெண்.

இனி நேரம் சரி. மழைப் பொழுது இருட்டாகி வருகிறது. கூட்டிற்குப் போவோம் எனச் சிட்டுக்குருவியாரும் அங்கிருந்து நேரே கூடு நோக்கிப் பறக்கின்றார்.

**காரை ஆனந்தன்**

## சர்வதேச எழுத்தாளர் மாநாடு ஜனவரி கொழும்பில் நடத்த ஏற்பாடு

சுன்னாகம்,டிசெ.25

சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தால் நடத்தப்படும் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு ஜனவரி மாதம் 6ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் தினமும் காலை 8.30மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை ஆய்வரங்குகள் இடம்பெறும்.

கணினி வலைப்பதிவு, ஈழத்துத் தமிழ் இலக்கியம், ஆவணப்படுத்தல், சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு, சிற்றிதழ், மகளிர் அரங்கு, செவ்வி தாக்கம், நிகழ்த்து கலைகள் ஆகிய ஆகிய விடயங்கள் தொடர்பாக இவ்வாய்வரங்கு இடம்பெறவுள்ளது.

கலை நிகழ்ச்சிகள் மாலை 5மணியிலிருந்து இரவு 8மணி வரை நடைபெறும். நிறைவு நாள் நிகழ்வுகள் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30மணி முதல் இரவு 8 மணிவரை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த மாநாட்டில் உள்நாட்டிலிருந்தும், புலம் பெயர் நாடுகளிலிருந்தும் பேராளர்கள் பங்குபற்றவுள்ளனர்.

(ம-38)

## நெடுந்தீவு யாகப்பர் ஆலய வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.25

நெடுத்தீவு புனித யாகப்பர் தேவாலய வீதி பலவருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாததால் அந்த வீதி பயணம் செய்ய முடியாத நிலையில் குண்டும், குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் பாதசாரிகளும், ஆலயத்திற்கு வரும் பக்தர்களும் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாகப் பலமுறை உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து குறித்த வீதியைப் புனரமைத்துத் தரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. .

(ற)

## சைக்கிள் திருட்டில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர் கைதானார்



வலி.வடக்கு டிசெ.25

யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் இடம்பெற்ற பல்வேறு சைக்கிள் களவுகளுடனும் தொடர்புடைய நபர் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை சுன்னாகத்தில் சைக்கிள் ஒன்றை விற்பனை செய்ய முற்பட்ட வேளையில் இவர் பொலிஸாரிடம் வசமாகப் பிடிபட்டார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து குறிப்பிட்ட நபரிடம் இருந்து ஆறு சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த சைக்கிள்கள் சுன்னாகம், கோப்பாய், யாழ்ப்பாணம் எனப் பல பகுதிகளிலும் திருடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட நபர் புத்தூரைச் சேர்ந்தவா என விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

(201-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 வருடங்களாக நிரப்பப்படாத மருந்தாளர் வெற்றிடங்கள்

## யாழ். போதனா வைத்தியசாலையில் நெருக்கடி

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்.போதனா வைத்திய சாலையில் மருந்தாளர்களுக் கான வெற்றிடங்கள் கடந்த 25 வருடங்களாக நிரப்பப்படாமல் உள்ளன.

இங்கு 46 பேர் கடமையாற்ற வேண்டிய நிலையில் 19 பேர் மட்டுமே கடமையாற்றி வருகின் றனர் என்று தெரிவிக்கப்படு கின்றது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

யாழ். போதானா வைத்திய சாலையில் நாளாந்தம் 2 ஆயி ரத்துக்கு மேற்பட்ட நோயாளர் கள் சிகிச்சை பெற்று வருகின் றனர். அந்த நோயாளர்கள் மருந்து களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். 1985 ஆம் ஆண் டுக்குப் பின்னர் மருந்தாளர்க ளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப் பட வில்லை என்று தெரிவிக்கப் படுகிறது. மருந்தாளர் பிரிவில் தொடர்ந்தும் ஆளணிப் பற்றாக் குறை நிலவுவதால் நோயாளர் களுக்கு மருந்துகளை விநியோகம் செய்வதில் பெரும் சிரமங் கள் எதிர்கொள்ளப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (ம-9)

# முஸ்லிம் குடும்பங்களுக்கு உணவல்லாத பொருள்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.25

புத்தளத்தில் இருந்து வந்து யாழ். குடாநாட்டில் மீள் குடிய மர்ந்துள்ள 153 முஸ்லிம் குடும் பங்களுக்கு அகதிகளுக்கு ஐ.நா. தூதரகத்தினால் உணவல்லாத பொருள்கள் வழங்கப்பட்டுள் ளன. இவற்றை வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக் கிழமை யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெற்றது.

முகம்மதியா ஜும்மா பள்ளி வாசல் நிர்வாகத்தினரின் கோரிக் கைக்கு அமைய இவை வழங் கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. முகம்மதியா ஜும்மா பள்ளி வாசல் தலைவர் எஸ்.ஏ.சி. முபீன் பொருள்களை மீள் குடியமர்ந்த குடும்பங்களிடம் கைளித்தார். (ம-7)

# ஏழாலையில் பாதீனியம் பரம்பல்

யாழ்ப்பாணம்,டிசெ.25

ஏழலை மத்திப் பகுதியில் பாதீனியச் செடிகளின் பெருக்கம் அதிகரித்துச் செல்வதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

விவசாய நிலங்கள், வீதியோரங்கள் மற்றும் கைவிடப்பட்ட காணிகளில் பாதீனியச் செடிகள் படரத் தொடங்கியுள்ளன. இவை தொடர்ந்து வளரத் தொடங்கினால் விவசாயிகளும் பொதுமக்களும் பல்வேறுபட்ட தீமைகளை எதிர்கொள்ள வேண்டிவரும். இதனால் உரிய வர்கள் பாதீனியச் செடிகளை அழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு அந்தப்பகுதி மக் கள் கோரிக்கை விடுத்துள்ளர். (201-313)

# தொடர்ந்து பெய்துவரும் பருவ மழையால் நல்லெண்ணெய் உற்பத்தியாளர் பாதிப்பு

நவாலி,டிசெ.25

தற்போது பெய்து வரும் தொடர் மழையினால் ஆனைக் கோட்டை மற்றும் இதர பகுதி களிலுள்ள நல்லெண்ணெய் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது பெய்துவரும் மழையால் எள்ளினைக் காய விடமுடியாத நிலை ஏற்பட்டுள் ளது. எனவே செக்குகளில் எண் ணெய் வடிக்க முடியவில்லை என நல்லெண்ணெய் உற்பத்தி யாளர்கள் கூறுகின்றனர். கையி ருப்பில் இருந்த எண்ணெயும் விற்றுத் தீர்ந்துள்ளது. சிலர் கையிருப்பிலுள்ளதை மட்டுப் படுத்தியே விற்று வருகின்றனர். சிலர் தமது கடைகளை தற்கா லிகமாக மூடி பின்னர் திறந்து வருகின்றதையும் காண முடி கிறது. (201-100)

# கிராமிய வங்கிகளின் சமாசத்தால் புதிய கடன் திட்டங்கள் அறிமுகம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் தனது அங்கத்துவ மற்றும் அங்கத்துவமில்லாத சங்கங் களின் நிதிச் சேவையைக் கருத்திற் கொண்டு புதிய கடன் திட்டங்களை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அறி முகப்படுத்தவுள்ளது.

லொறி ஈட்டுக் கடன் 20 லட்சம் உட்பட 12 வீதமும் காணி கட்டட ஈட்டுக்கடன் (மூன்று வருடத்திற்கு உட்பட) 14 வீதமும் குறுகிய கால கட னான, ஒருமாத கால, 3மாதகால கடன், 6 மாதகால கடன் முறையே 13 வீதமும், வாகனக் கொள்வனவுக் கடன் 15 வீத மும், புதிய தொழில் முயற்சிக் கடன் 13 வீதமும், தொழில் விஸ்தரிப்புக் கடன் 13 வீத மும், கூட்டுறவு ஊழியர் நலன் புரிச் சங்க அங்கத்தவர் கடன் 12 வீதமும் வழங்கப்படவுள்ளன.

மேற்படிகடன்கள் அனைத் துக்குமான விண்ணப்பங்கள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் ஊடாக வழங்கப் பட்டால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் சமாசத்தின் பொது முகாமையாளர் செ. கெங்காதரன் இதனை தெரிவித் துள்ளார். (101-311)

# வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் கண்காட்சியும் மாநாடும் அடுத்த மாதம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

வடக்கு மாகாண உள்ளூ ராட்சி அமைச்சின் கண்காட் சியும் - மாநாடும் வவுனியா நகரசபை மைதானத்தில் எதிர் வரும் ஜனவரி 28,29,30 ஆகிய மூன்று நாள்கள் மிகப் பிரமாண்ட மான ஏற்பாடுகளில் இடம் பெற வுள்ளன. மூன்று நாள்களிற்கான மேற்படி கண்காட்சிக்காக 35 மில்லியன் ரூபாவிற்கு மேல் செலவிடப்படுகின்றது.

கண்காட்சியைப் பார்வையிட மூன்று லட்சத்திற்கும் அதிக மான மக்கள் பார்வையிடுவ தற்காக நாடாளாவிய ரீதியில் திரள்வர் என எதிர்பார்க்கப்படு கிறது. இதற்கான சகல ஏற்பாடு களும் பூர்த்தியாகியுள்ளன. இவ் வாறு உள்ளூராட்சி கண்காட்சி மாநாட்டுப் பொறுப்பாளரும் வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளருமான எஸ். அச்சு தன் தெரிவித்தார். வடக்கு மாகாண உள்ளூராட்சி கண்காட்சி தொடர் பான முன்வரைபு தொடர்பான விளக்கமளிக்கும்கூட்டம்வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற செயளர்களுக்கு வவுனியாவில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத் தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக் கையில்:

வடக்குமாகாணத்தில் உள்ளூ ராட்சி தொடர்பான கண்காட்சி -மாநாடு இரண்டாவது தட வையாக இடம்பெறவுள்ளது. இதில் தொழில்நுட்பம்,தகவல் தொடர்பாடல், கல்வி திறனும் - அபிவிருத்தியும்பொழுதுபோக்கு போன்ற நான்கு தலைப்பின் கீழ் நிலைத்த நீடித்த அபிவிருத் திக்கான கண்காட்சியாக இது இடம்பெறும். இந்தக் கண்காட்சி யூடாக வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சிக்கான அபிவி ருத்தி குறிக்கோளை அடிப்படை யாக கொண்டு முன்னகர்த்தப்படும். இதற்காக நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வளங் களும் - தொழி நுட்பங்களும் - இயந் திர சாதனங்களும் கைத் தொழில் சாதனங்களும் முழுமையாகப் பயன் படுத்தப்படும். வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந் திரசிறி இத்திட்டத்தினை முன்ன கர்த்து வதற்கான சகல உந்து தல்க ளையும் அளித்துள்ளார்.

எனவே மூன்று நாள்கள் இடம் பெறும் பொருளாதார அபிவி ருத்திக்கான கண்காட்சியில் வடக்கு மாகாண உள்ளூ ராட்சிச் சபைச் செயலாளர்களின் பூரண ஒத்துழைப்பை நாடி நிற்பதாக உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் எஸ். அச்சுதன் கேட்டுள் ளார். மேற்படி கூட்டத்தில் வடக்கு மாகாணஉள்ளூராட்சி அமைச் சின் செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி, வடக்கு மகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். (120-302)

# சட்ட விரோதமாக மதுபானம் உற்பத்தி செய்தவர்கள் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ். மடம் வீதியில் சட்ட விரோத மதுபான உற்பத்தி யாளர்கள் இருவரை மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர் கள் கையும் களவுமாக பிடித் துள்ளனர்.

பல நாள்களாக சட்ட விரோ தமாக மதுபானம் தயாரித்த வர்கள் என அப்பகுதி மக்க ளால் இவர்கள் இனங் காணப்பட்டதை அடுத்து நேற்று முன்தினம் மதுவரித் திணைக்கள உத்தி யோகத்தர்களும் பொலிஸாரும் மேற்படி நபர்களைக் கைது செய் தார்கள்.

இவர்கள் இருவரும் நீதி மன்றில் ஆஜர் படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட் டுள்ளனர். (201-313-311)




இயற்கைப் பாதுகாப்பு



உதவி: 'சுக வாழ்வுகான பயணம்' நிறுவனம் கோண்டாவில் பொது நூலகத்தில் அந்தப் பகுதி மக்களுக்கு பயன்தரு மரக்கன்றுகளை இலவசமாக வழங்கியது நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத் தர் ரி.கஜீதா பயனாளி ஒருவருக்கு மரக்கன்றை வழங்குகிறார்.

# புதிய மின் கம்பங்கள்

சண்டிலிப்பாய்,டிசெ.25

வலி. தென் மேற்கு சுது மலை வடக்கில் கன்னி தோட்ட வீதியிலுள்ள பழைய மின் கம்பங்களுக்குப் பதிலாக புதிய மின்கம்பங்கள் மாற்றப்பட்டு மின் வலுகூடிய இணைப்பும் வழங்கப் பட்டுள்ளது. மேற்படி வீதி, போக்குவரத்துக்கு வசதியாக அகலமாக்கப்பட்டதைத் தொடர்ந்து பல வருடங் களுக்கு முன் நடப்பட்ட பழைய நிலையிலுள்ள மின் கம்பங் களையும் பொருத்தப்பட்டுள்ள செப்புக் கம்பிகளையும் மாற்றி புதிய மின்கம்பங்களை அமைத்து வலு கூடிய மின்சாரத்தை வழங்குமாறு இப் பகுதி மக்கள் சம்பந் தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர். மின் கம்பி வீதியில் அறுந்து விழுந்திருந்ததால் பாதசாரி ஒருவர் சமீபத்தில் மரணமான சம்பவத்தையும் சுட்டிக்காட்டி யிருந்தனர். இதனைத் தொடர்ந்து மேற்படி வீதியி லுள்ள மின் கம்பங்களுக்குப் பதிலாக புதிய மின் கம்பங் களும் மாற்றப்பட்டு வலுகூடிய மின்சாரமும் மின்சார சபை யினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-115)

# நத்தார் பண்டிகையை முன்னிட்டு சவுக்கு அதிகளவில் விற்பனை

வண்ணை,டிசெ.25

நத்தார் பண்டிகைக்கு வீடுகளை அலங்கரிக்கும் சவுக்குகள் விற்பனை யாழ். குடாநாட்டில் அதி கமாக நடைபெற்று வருகின்றன.

வாகனங்களில் கோப்பாய் மற்றும் வல்லைப் பகுதி களுக்கு சென்று பெருமளவில் வெட்டி வரப்பட்ட சவுக்குகளை மக்கள் கொள்வனவு செய்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

குருநகர் மடம் வீதி, பிர தான வீதி, சின்னக்கடை, பாஷை யூர், நாவாந்துறை பகுதிகளில் சவுக்குகள் சிறியது, பெரியது என்ற அளவுகளில் 50 ரூபா தொடக்கம் 100 ரூபா, 150 ரூபா, 200 ரூபா என்னும் விலை களில் விற்கப்படுகின்றன.

அதேவேளை தென்பகுதி களில் இருந்து எடுத்து வரப்பட் டுள்ள கிறிஸ்மஸ்மரங்கள் மற் றும் பூ வகைகளும் யாழ். நகர புற நகர்ப் பகுதி வீதி ஓரங்க ளில் விற்பனைக்கு வைக்கப்பட் டுள்ளதையும் காண முடிகிறது. (201-180)

# மிருசுவிலில் நத்தார் கரோல் நிகழ்வு 522 ஆவது படைப்பிரிவு ஏற்பாட்டில்

மிருசுவில், சென் நீக்கிளஸ் ஆலய நத்தார் தின கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது. நிகழ்வை 522 ஆவது பிரிக்கேட் படைப் பிரி வினர் ஒழுங்கு செய்திருந்தனர்.

நிகழ்வில் 522ஆவது படைப் பிரிவின் தளபதி அனுர எதிரி சிங்க பிரதான விருந்தினராகக் கலந்து கொண்டார். அருட் தந்தை ... தயாபரன் மிருசுவில் றோ.க.த.க பாடசாலை அதிபர் எடிசன், படைத்தளபதி கேமந்த பண்டார உட்படப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். வரவேற் புரை நடனம் பஜனை தேவாலய மாணவிகளாலும் பாலர் அபிநய நடனம் மிருசுவில் சென். நீக்கி ளாஸ் தேவாலய மாணவி களா லும் நிகழ்த்தப்பட்டன. நடன நிகழ்வு ஒன்று தவசிகுளம் தேவ லாய மாணவிகளால் மேடை யேற்றப்பட்டது. மேலும்கலைநிகழ் வுகள் இடம் பெற்றன. (உ-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/இணுவில் மத்திய கல்லூரி

**பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும்**

தலைவர்: **திரு.அ.சதானந்தன்**
(கல்லூரி முதல்வர்)
காலம்: 09.01.2011 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி
இடம்: கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபம்

சகல அங்கத்தவர்களையும் தவறாது
கலந்து சிறப்பிக்குமாறு
அன்பாக வேண்டுகின்றேன்.

**அ.சதானந்தன்**
அதிபர்.

25.12.2010 (107855)

## தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்துக்குள் இருந்து உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த சத்தியவரதன் லலிதாவதி என்பவரின் 677123508V தேசிய அடையாள அட்டையுடன் கூடிய கைப்பை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்தியாலை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டு இந்த அடையாள அட்டைக்கு உரியவர் தகுந்த ஆதாரத்துடன் போதனா வைத்தியசாலைக்கு வருகைதந்து பெற்றுக் கொள்ள முடியும் என வைத்தியசாலைப் பணிப்பாளர் ச.சிறிபவானந்தராசா தெரிவித்துள்ளார். (ற)

## முதலாமாண்டு நினைவஞ்சலி

மலர்வு
11.01.1943



உதிர்வு
05.01.2010

**வல்லிபுரம் தணிகாசலம்**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)
திதி: சஷ்டி

ஓராண்டு கழிந்தாலும் உங்கள் நினைவுகளோடு நாம்.

மூளாய் வீதி, வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

மனைவி- சுபத்திரா,
மகள் மற்றும் குடும்பத்தினர்.



## கஹவத்தை ஸ்ரீ செல்வவிநாயகர் தேவஸ்தானம்- இரத்தினபுரி

## கண்ணீர் அஞ்சலி

'சிவாகம கலாநிதி', 'பிரதிஷ்டா ரெத்தினம்'
சிவப்பிரம்மஸ்ரீ

### சிவா. நித்தியானந்த

**சிவாச்சாரியாரின்** மறைவு இந்து மக்களுக்குப் பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயர்கொண்டிருக்கும் குடும்பத்தவர்களுக்கும் எங்கும் குருஸ்வாமி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நித்தியானந்த சிவாச்சாரியாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ செல்வவிநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீ M.விஸ்வநாத் குருக்கள்,**
ஆதீனகர்த்தா, ஸ்ரீ செல்வ விநாயகர் தேவஸ்தானம்,
கஹவத்தை- இரத்தினபுரி.

(107737)

## 1ஆம் வருட நினைவஞ்சலி 3ஆம் வருட நினைவஞ்சலி





| கனகசபை சண்முகலிங்கம் | | சண்முகலிங்கம் பரமேஸ்வரி |
|---|---|---|
| 04.02.1944 | தோற்றம் | 30.11.1946 |
| 05.01.2010 | மறைவு | 19.05.2007 |
| 25.12.2010 | திதி | (அபரபக்க பஞ்சமி) |

விழுதுகளை வையகத்தில் வேரூன்றச் செய்துவிட்டு
விருட்சங்கள் விண்ணை அடைந்த மாயமென்ன?

பெரியமாவடி,
கச்சாய் வீதி, சாவகச்சேரி. (107854)

**குடும்பத்தினர்.**

## நினைவஞ்சலி

1ஆம் ஆண்டு நினைவு



திதி:
அமரபட்ச பஞ்சமி
25.12.2010

36ஆம் ஆண்டு நினைவு



திதி:
பூர்வபட்ச நவமி
13.01.2011

**அமரர்**
**கணபதிப்பிள்ளை சபாரத்தினம்**
மண்ணில் : 03.05.1922
விண்ணில் : 05.01.2010

**அமரர்**
**கனகாம்பிகை சபாரத்தினம்**
மண்ணில் : 16.03.1927
விண்ணில் : 22.12.1974

அன்னையே நீங்களின்றி 36 வருடங்கள்!
தந்தையே அன்னையுமாய் எமைத்தாங்கி நின்ற போதும்,
நீங்களும் எமைப் பிரிந்து ஒரு வருடம் ஆனதையா!
வாழ்க்கைப் பாதையில் எங்கள் கரம் இறுகப்பற்றி,
வழி நடத்திய தெய்வமே!
தவமிருந்து பெற்ற மகன் இன்னும் மனம் ஆறவில்லை
திசைக்கொன்றாய் நாமிருந்து தவிப்பதும் மாறவில்லை.
இறையடியில் நிம்மதியாய் இணைந்துவிட்ட
எங்களுயிர் பப்பாவே! அன்பான் அம்மாவே!
பெயர் சொல்ல வந்துதித்த பேரப் பிள்ளைகளுடன்
உற்றவர் அருகிருக்க உளமாரத்தினம் நினைப்போம்.
காலம் துயர் மாற்றட்டும், சாந்தி என்றும் நிலைக்கட்டும்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

"திலக் வாசம்",
தபாலக வீதி,
சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

இல.05,
கல்லடி வீதி,
சாவகச்சேரி.


## Your Future Starts Here




- Visa பெற்றுக்கொள்ளமுன் எதுவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
- வெளிநாட்டில் கல்விகற்கவுள்ள மாணவர்களுக்கு Bank Financial Sponsor மிகக்குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும்.
- UK இற்கு ஜனவரி 24இற்குள் பயணம்.

**இடம்: SEC (Pvt) Ltd.**
620, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
(நாச்சிமார் கோவிலுக்கு எதிரில்) தொ.பே. 0212220555

**Hotline:0777887181** e-mail: info@immitechlk.com
www.immitechlk.com

**Head office:- No.06, 1st Floor, 37th Lane, Wellawatte, Colombo- 06, Sri Lanka.
Tel/Fax: 0112363739**


## மரண அறிவித்தல்

**செல்வி செல்லையா இராசநிதி**
**(சாவகச்சேரி ப.நோ.கூ.ச.எழுதுநர்)**

தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசநிதி 24.12.2010 நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் இராசமலர், கிளி, நாகபூசணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விக்கினராசா, சற்குணராசா (லண்டன்), குலேந்திரராசா, மைசிதா, சுதர்சினி (சுவிற்சலாந்து) ஆகியோரின் பாசமிகு சிறியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் 24.12.2010 நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் சாவகச்சேரி இந்து மயானத்தில் தனகம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தபால்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
தொ.பே.: 0776146611. (107881)

தகவல்:
த.விக்கினராஜா (பெறாமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை மாவட்ட வைத்தியசாலையின் குறைபாடுகள் குறித்து மக்கள் முறையீடு

திருகோணமலை, டிசெ.25

திருகோணமலை மாவட்டத்தில் மிகவும் முக்கியமான வைத்தியசாலையாக விளங்கும் திருகோணமலை பொது வைத்தியசாலை பல குறைபாடுகளுடன் இயங்கி வருகிறது எனப் பொதுமக்கள் முறையிடுகின்றனர்.

சில வைத்தியர்கள் நேரகாலத்தோடு கடமைக்கு வருவதில்லை. நோயாளர்களுடன் தாதியர்களும் சிற்றூழியர்களும் அன்பாக நடந்துகொள்வதில்லை. ஏனோதானோ என இவர்கள் கடமையில் ஈடுபடுகின்றனர் என்றும் இவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

சில தாதிமார்கள் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்கின்றனர் எனப் பாதிக்கப்பட்ட நோயாளர்களில் சிலர் மனவேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, தனியார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருக்கும் காவலாளர்கள் வரும் நோயாளர்களைத் தாங்கள் இராணுவத்தினர் என்ற நினைப்புடன் அணுகுகின்றனர். அத்துடன் நோயாளர்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் இடங்களுக்கு முன்னால் உள்ள வாயில் காவலில் இவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இவர்களில் சிலர் தங்கள் கடமையை மறந்து நோயாளர்களைப் பார்வையிட வரும் இளம் பெண்களிடம் கையடக்கத் தொலை பேசி இலக்கத்தை ஏதோ ஒரு சாட்டுச் சொல்லிப் பெற்றுக்கொண்டு குடும்பத்தில் பிளவுகளை ஏற்படுத்துகின்றனர் என்றும் பலர் முறையிடுகிறார்கள்.

வைத்தியசாலையில் கடுமையான நோயாளர்களுக்கு அருகில் நிற்பதற்காக அனுமதி அட்டை பெறவேண்டியுள்ளது. அந்த அனுமதி அட்டையைத் தனியார் பாதுகாப்புக் காவலர்கள் வழங்கி வருகின்றனர். அனுமதி அட்டை எடுக்கச் செல்லும் வேளையில் பல கேள்விகளைக் கேட்டு அசௌகரியங்களுக்கு உள்ளாக்குகின்றனர் என்றும் கவலை தெரிவிக்கிறார்கள்.

எனவே அனுமதி அட்டை வழங்கும் திட்டத்தை வைத்திய சாலை அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் தெரிவிக்கின்றனர். (ளி)




# சட்டவிரோதமாக மின் பாவித்த 115 பேர் மட்டக்களப்பில் கைது

மட்டக்களப்பு, டிசெ.25

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 115 பேர் இலங்கை மின்சாரசபைக் காரியாலய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த மூன்று தினங்களாக மட்டக்களப்பு மாவட்டப் பொலிஸாரும் மாவட்ட மின்சார சபையினரும் ஒன்றிணைந்து நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே சட்டவிரோத மின்பாவனையாளர்கள் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஏறாவூர், வவுணதீவு, கொக்கட்டிச்சோலை, களுவாஞ்சிக்குடி ஆகிய பகுதிகளில் இந்த சுற்றிவளைப்புத் தேடுதல் இடம்பெற்றது என இலங்கை மின்சாரசபையின் மட்டக்களப்பு மாவட்டக் காரியாலயம் அறிவித்துள்ளது. (ளி)

# மட்டக்களப்பு மாவட்ட விதவைகளுக்கு உதவி

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள விதவைகள் மற்றும் சுகயீனமுற்றோரின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக மண்முனை மேற்கு, மட்டக்களப்பு வடக்கு, காத்தான்குடி, ஆரையம்பதிப்பற்று ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட 59 பேரின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ் வினால் இவர்களுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு திங்கள்கிழமை மாலை காத்தான்குடிப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எஸ்.எச்.எம்.முஸம்மில் தலைமையில் நடைபெற்றது. (ளி)

# மட்டக்களப்பில் நிலக்கடலை இம்முறை அமோக விளைச்சல்

வெல்லாவெளி, டிசெ.25

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை நிலக்கடலை அமோக விளைச்சலைத் தந்துள்ளது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இருப்பினும் விளைச்சலில் கிடைத்த நிலக்கடலையைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி, வவுணதீவு, வாகரை, தொப்பிகலை ஆகிய பகுதிகளிலேயே நிலக்கடலை அதிகமாகச் செய்கை பண்ணப்பட்டுள்ளன.

தொப்பிகலை போன்ற நகரப்புறங்களிலிருந்து மிகவும் தூரத்திலுள்ள பகுதிகளில் செய்கை பண்ணப்படும் நிலக்கடலையைச் சந்தைப்படுத்த முடியாத பிரச்சினையை விவசாயிகள் எதிர்நோக்கியுள்ளனர்.

செய்கை பண்ணப்படும் இடங்களில் ஒரு மரைக்கால் (36சுண்டுகள்) 100 ரூபாவுக்கே வியாபாரிகள் கொள்வனவு செய்கின்றனர். நகரப் பகுதிகளில் ஒரு மரைக்கால் நிலக்கடலை 250 ரூபா முதல் 300 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

உற்பத்தி செய்யப்படும் நிலக்கடலையை உரிய விலைக்குக் கொள்வனவு செய்ய அரசு முன்வரவேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

# கல்முனை மாநகரசபை உறுப்பினரை கைது செய்தமை சிறப்புரிமை மீறும் செயல்

அம்பாறை, டிசெ.25

கல்முனை மாநகர சபை உறுப்பினரான ஏ.றியாஸ், பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட விவகாரம் அவரது சிறப்புரிமையை மீறும் செயலாகும் என்று சபை அமர்வில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த சபை அமர்வு முதல்வர் எஸ்.இஸட்.எம். மசூர் மௌலானா தலைமையில் புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போதே உறுப்பினர் றியாஸ் கைது விவகாரம் முக்கிய இடம் பிடித்தது.

கல்முனை தனியார் பஸ் நிலையத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த சட்ட விரோத வியாபார நிலையத்தை அகற்றும் முயற்சியில் ஈடுபட்ட உறுப்பினர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டமை மிகப் பெரும் தவறாகும் என்று சகல கட்சிகளினதும் உறுப்பினர்கள் அனைவரும் ஏகோபித்த கருத்தை வெளியிட்டனர்.

"பொது இடங்கள், குறிப்பாக நடை பாதைகளில் வியாபாரத் தளங்களை அமைப்பது சட்ட விரோதமாகும். அதனை எமது மாநகர சபை தடுத்துள்ளது. ஏற்கனவே, அமைக்கப்பட்ட சட்ட விரோத வர்த்தக நிலையங்களை அகற்றும் பணியில் மாநகர சபை ஈடுபட்டுள்ளது" என முதல்வர் மசூர் மௌலானா தெரிவித்தார்.

"இந்நிலையில் சிலர் புதிதாக நடைபாதை வியாபார நிலையங்களை நிறுவ முற்படுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இந்தச் சர்ச்சை தொடர்பில் எமது உறுப்பினர் றியாஸ் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டமை பிழையான நடவடிக்கையாகும். அத்தோடு இதன் மூலம் அவரது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. அவரது கௌரவம் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் எமது சபை கருதுகிறது" என்றும் அவர் கூறினார். (ளி)

# வலப்பனை பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் தோல்வி

கொழும்பு, டிசெ.25

வலப்பனைப் பிரதேசசபையின் 2011 ஆம் வருடத்திற்கான வரவு - செலவுத்திட்ட அறிக்கை தோல்வியைத் தழுவியுள்ளது என வலப்பனைப் பிரதேச சபை உறுப்பினர்களான பி.சண்முகம், எஸ்.பன்னீர்ச்செல்வம் ஆகியோர் தெரிவித்தனர்.

22 உறுப்பினர்களைக்கொண்ட வலப்பனைப் பிரதேசசபையில் கடந்த செவ்வாய்க்கிழமை வரவு - செலவுத் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் சபை அமர்வுக்குத் தலைவர் உட்பட 13 உறுப்பினர்கள் வருகை தந்திருந்தனர். இதன்போது வரவு- செலவுத்திட்டம் வாக்களிப்புக்கு விடப்பட்ட போது எதிராக 7 பேரும், ஆதரவாக 5 பேரும் வாக்களித்தனர்.

வரவு- செலவுத்திட்டம் தோல்வியைத் தழுவியதையடுத்து சபைத் தலைவர் சபை அமர்வை ஒத்திவைப்பதாக அறிவித்தனர்.

இந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மூவரும் ஜே.வி.பி.யைச் சேர்ந்த ஒருவரும், தமிழ்ப் பிரதேசங்களுக்கு உரிய நிதியொதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்று சுட்டிக்காட்டி எதிர்ப்புத் தெரிவித்தனர். பி.சண்முகம், எஸ்.ஜெய சீலன், எஸ்.பன்னீர்ச்செல்வம் ஆகிய உறுப்பினர்கள் மூவரும் எதிர்த்து வாக்களித்துள்ளனர்.

அரச தரப்பு உறுப்பினர்கள் மூவர் வரவு - செலவுத்திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர். எதிர்க்கட்சியிலிருந்த இருவர் ஆதரவாக வாக்களித்தனர்.

இவ்வாறான நிலையில் பிரதேச சபையின் இந்த வரவு - செலவுத்திட்ட அறிக்கை நேற்று மீள் வாக்கெடுப்புக்கு விடப்பட இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ளி)

# பொலிஸ் பொறுப்பதிகாரி வீட்டில் தங்க நகை, பணம் கொள்ளை

மாத்தளை, டிசெ.25

மாத்தளை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுப் பிரிவுப் பொறுப்பதிகாரியின் வீட்டில் சுமார் 16 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் 20,000 ரூபா ரொக்கப்பணம் கொள்ளையிடப்பட்டுள்ளன என மாத்தளை குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி லலித் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வீட்டில் யாரும் இல்லாத வேளையில் ஜன்னல்களை உடைத்து வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாத சிலரே நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என அவர் தெரிவித்தார்.




கொள்ளைச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கென நான்கு பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (ளி)

# சடலத்தை பலவந்தமாக கொண்டு சென்ற வைத்தியருக்கு பொலிஸார் வலை வீச்சு

கொழும்பு,டிசெ. 25

கம்பளை வைத்தியசாலை சவச்சாலையில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தனது உறவினரின் சடலத்தைப் பலவந்தமாகக் கொண்டு சென்ற வைத்தியர் ஒருவரை கம்பளைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

கம்பளை அத்தாலைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை குடும்பஸ்தரொருவர் மரத்தில் இருந்து விழுந்து இறந்தார். இவரின் சடலம் கம்பளை வைத்திய சாலைக்கு கொண்டு வரப்பட்டது.

புதன்கிழமை காலை பிரேதப் பரிசோதனை நடத்தப்படும் என மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

ஆனால், இறந்தவரின் உறவினரான வைத்தியர், மரண விசாரணையை உடனடியாக நடத்த வேண்டும் என்று வாக்கு வாதப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் வைத்தியர் பிரேத அறை ஊழியர்களுடன் முரண்பட்ட நிலையில் சடலத்தைப் பலவந்தமாக எடுத்துச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகக் கம்பளை பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து கம்பளைப் பொலிஸார் மேற்படி வைத்தியரைத் தேடி வருகின்றனர். (ளி)

# பதுளையில் நிலவும் கடும் பனியால் தேயிலை உற்பத்தி பெரும் வீழ்ச்சி

பதுளை, டிசெ.25

இப்போது பதுளை மாவட்டத்தில் நிலவி வரும் கடும்பனியால் தேயிலைக் கொழுந்துகள் முற்றாகக் கருகிப் போகின்றன. இதனால் தேயிலை உற்பத்தி பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக இம் மாவட்டத்திலுள்ள ஏராளமான சிறு தோட்ட உரிமையாளர்கள் தாம் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றனர் எனக் கூறுகின்றனர். ''காலையில் சூரியஒளிபடுவதற்குத் தாமதம் ஏற்படுகிறது. முழு நாளும் நிலவும் மூடுபனியால் பலத்த அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன.

சிறுதேயிலைத் தோட்டங்களைப் பராமரிக்க பெரும் செலவுகள் ஏற்படுகின்றன. எனினும் எதிர்பார்த்த அறுவடை இல்லாதபடியால் பராமரிப்புப் பணிகளையும் மேற்கொள்ள முடியாதுள்ளது.'' - என்று அவர்கள் கூறினர்.

பதுளை மாவட்டத்திலுள்ள ஏராளமான மரக்கறித் தோட்ட விவசாயிகள் மரக்கறி செய்கையை விடுத்து கூடுதல் ஆதாயம் தேடி தேயிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். சீரற்ற கால நிலை காரணமாக [illegible] இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

[illegible] இந்தக் கால நிலையில் மாற்றம் ஏற்படாவிட்டால் தேயிலைச் செடிகள் நோய்வாய்ப்பட இடமுண்டு எனச் சிறு தோட்ட உரிமையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாடு பிடிப்போம் நாடு ஆள்வோம்

(தொடர்ச்சி)

ஜல்லிக் கட்டில் கலந்துகொண்டு நாட்டைப் பெறுவது என்று தீர்மானமாகிவிட்டது. ''சீடர்களே, அற்புதமான யோசனைகள்! அருமையான எதிர்காலம்! வெற்றி நமக்கே! விடாதீர்கள்... ஓடுங்கள்...'' என்று ஆவேசமாய்க் கூச்சலிட்டார் பரமார்த்தர்.

''குருவுக்கு ஜே'' என்றபடி எல்லோரும் ஜல்லிக்கட்டு நடக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

ஒரு வீதியில் குருவும் சீடர்களும் எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது.

''ஐயா! அந்த மாட்டைப் பிடியுங்கள்'' என்று கூச்சலிட்டுக் கொண்டு ஒரு தடித்த அம்மாள் பரங்கிக்காய் போன்ற தன் உடலை தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு நடந்து வந்தாள்.

இலேசாகக் காற்று வீசினால் கூட மூன்று முறை குட்டிக்கரணம் போட்டு உருளும் அளவுக்கு ஒரு பசுமாடு வாயில் நுரை வழிய நொண்டி நொண்டித் தள்ளாடி நடந்து வந்தது. அது அவளுக்குப் போக்கு காட்டிக் கொண்டிருந்தது. அதன் விலாவில் வரிவரியாக எலும்புகள் துருத்திக் கொண்டிருந்தன. மாட்டுப் பொங்கல் என்பதால் கொம்புகளுக்கு வண்ணம் பூசி, பூவும் சுற்றப்பட்டு இருந்தது.

பொங்கல் தயாரித்த பின் அதைத் தன் அருமையான பசுமாட்டுக்கு ஊட்டுவதற்காக ஒரு பெரிய கிண்ணத்தில் அவள் வைத்திருந்தாள். அந்தக் கிண்ணம் அடிக்கடி பசுமாட்டுக்கு மருந்து கரைத்து ஊட்டுவதற்குப் பயன்படுத்தப்படுவது. எனவே ஏதோ மருந்து ஊட்ட வருகிறாள் என்று நினைத்துப் பசு தள்ளாடித் தடுக்கி ஓட்டம் பிடிக்கத் தொடங்கியிருந்தது.

இதற்கிடையே தாடி மீசையும், சுருட்டும் புகையுமாக பரமார்த்த குருவும், அலங்கோல விசித்திரங்களாக அவரது சீடர்களும் எதிரே வரவே அவர்களைக் கண்டு மாடு மிரண்டது.

''இதோ ஒரு ஜல்லிக்கட்டுக் காளை! மைதானத்திலிருந்து தப்பி வந்திருக்கிறது!'' என்று சீடர்கள் அதைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''விடாதே! விடாதே! வாலைப்பிடி! இதை அடக்கி மன்னரிடம் பரிசு வாங்கி விடலாம்!'' என்று குரு கட்டளையிட எல்லாச் சீடர்களும் ஒரே நேரத்தில் மாட்டின் வாலைப் பிடித்து இழுத்தார்கள். வால் பாதியாக அறுந்தது.

வேதனை தாங்காமல் குரல் எழுப்பிய மாடு தன்னிடமிருந்த கொஞ்ச நஞ்ச சக்தியையும் திரட்டி, கழுதைபோல் ஒரு உதை விட்டது. இதில் மட்டிக்கும் மடையனுக்கும் மூக்குப் பிய்ந்தது. இருவரும் கதறிக் கொண்டு தூரப்போய் விழுந்தார்கள்.

''இது மாடா? அல்லது கழுதையா?'' என்று திகைத்த குரு, கொம்பு இருப்பதைப் பார்த்து பொல்லாத மாடாக இருக்கிறதே! கொம்பைப் பிடியுங்கள்! அப்போதுதான் அடங்கும்!'' என்று பதறியவாறே சொன்னார்.

முட்டாளும் மூடனும் மண்டுவும், மாட்டின் மீது போய் விழுந்தார்கள். இவர்கள் பாய்ந்த வேகத்தில் இரண்டு கொம்புகளும் பிய்ந்து கையோடு வந்து விட்டன. பசு கால்களை விரித்துப் படுத்தே விட்டது.

''ஆ..! மாடு அடங்கி விட்டது! அடங்கி விட்டது!'' என்று குருவும் சீடர்களும் குதித்தார்கள்.

''ஐயோ! என் கண்ணு! என் செல்லம்.. போச்சே! தினமும் நாலுபடி பால் கறக்கும் அருமைப் பசுவைக் கொன்று விட்டீர்களே!'' என்று குண்டுக் கிழவி கண்ணீர் விட்டு ஒப்பாரி வைக்கத் தொடங்கி விட்டாள்.

''கவலைப்படாதே பாட்டி! மாட்டை அடக்கிய வீரச் செயலை மன்னரிடம் சொல்லி, கிடைக்கும் பரிசுப் பணத்தில் உனக்கு நஷ்ட ஈடு கொடுத்து விடுகிறோம்!'' என்று கூறி அவளைச் சீடர்கள் சமாதானப்படுத்தினார்கள். குற்றுயிராகக் கிடந்த பசு மாட்டை ஒரு கட்டை வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டு ஜல்லிக்கட்டு மைதானத்துக்குப் போனார்கள். போய் சேருவதற்குள் மாடு இறந்து விட்டது.

ஜல்லிக் கட்டுக் காளையை அடக்குவதாக நினைத்து நோஞ்சான் பசு மாட்டின் உயிரையும் போக்கிய குருவையும் சீடர்களையும் கண்டு மைதானத்தில் திரண்டிருந்த மக்கள் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்கள்.

ஆனால், ஒரு பசுவைக் கொன்ற குற்றத்திற்காகக் குருவுக்கும் சீடர்களுக்கும் சாட்டையடிகள் வழங்கப்பட்டன. (முற்றும்)



# காக்கை

காக்கை ஒன்று மரத்திலே
முட்டையிட்டுக் காத்தது
பார்த்துப் பாம்பு ஒன்று வந்து
கொத்திக் குடித்துச் சென்றது.

வேளை தோறும் நடக்கும் இந்த
வேதனையைக் காக்கையார்
மூளை கொண்டு தடுத்திட
முயன்று வெற்றி கொண்டது.

அந்த நாட்டு மன்னனின்
அருமை மனைவி குளிக்கையில்
நல்ல தருணம் பார்த்துக் காகம்
நகையைக் கௌவிச் சென்றது.

அரசி நகையைக் காக்கையார்
அந்தப் பொந்தில் போட்டது.
விரைந்து வந்த வீரர்கள்
மரத்தைக்குறித்து வீழ்த்தினர்.

பொந்தில் இருந்த பாம்புகள்
பொங்கி எழுந்து சீறின
அந்த வேளை வீரர்கள்
அரிந்து பாம்பைக் கொன்றனர்.

புத்தியாலே காகம் இந்தப்
புதுமைதனைச் செய்தது
சித்தி கொள்ள நாமுமந்த
சிந்தனையைப் போற்றுவோம்.

- பிருந்தா -




# குழந்தையும் வாழ்வும்

* குழந்தையின் சிரிப்பில் பூலோகம் அழகு பெறுகிறது.
* குழந்தைகள் இல்லையென்றால், உலகம் துன்பம் நிறைந்ததாகும்.
* வயோதிபர்கள் இல்லையென்றால், உலகம் மனித இயல்பற்றதாகும்.
* குழந்தைகளைத் திருத்த நல்ல வழி அவர்களைப் பாராட்டுவதுதான்.
* குழந்தையைக் கொஞ்சும்போது தெய்வத்திடம் பேசுவதுபோல இருக்கிறது.
* குழந்தையைத் தூக்கி வைத்துக்கொள்ள கை நோகிறது. அதைக் கீழே இறக்கினால் மனம் நோகிறது.
* இயற்கை அளிக்கும் எல்லாவற்றிலும் பார்க்க குழந்தையைப் பராமரிப்பதே சிறந்த இன்பம் ஆகும்.
* குழந்தைகளை ஆர்வமுடன் அணையுங்கள்; இதய நோய் குறையும்.
* குழந்தையைக் கொஞ்ச நேரமின்றிச் சம்பாதிப்பவன் இறைவனின் அருகில் போக முடியாது.
* நீங்கள் கொடுக்கும் வெகுமதிகளைவிட, உங்களுடன் சேர்ந்து இருப்பதைத்தான் உங்களுடைய குழந்தைகள் விரும்புகின்றனர்.
* பல குழந்தைகள் இருந்தால் பல கவலைகள். ஒரு குழந்தையும் இல்லாவிட்டால் ஒரு இன்பமும் இல்லை.
* குழந்தைகளின் கண்களை மட்டும் காணுங்கள். அவை பல கதைகள் சொல்லும், காட்சிகள் காட்டும்.

- துஜிஷன் -

# பொது அறிவு

ஒரு நிமிடத்தில் மனித இதயம் எத்தனை போத்தல் குருதியை உடலினுள் செலுத்துகின்றது?
*7.5 போத்தல்*

உணவுக்கு உதவும் பாசி வகை எது?
*ஸ்பிருலீனா*

நவீன விண்வெளி யுகத்தின் தந்தை யார் ?
*சியோஸ் கோவ்கி*

இலங்கையில் தேசியக் கல்வி ஆராய்ச்சி நிலையம் எங்குள்ளது?
*மஹரகம*

குளிர்சாதனப் பெட்டியில் இருக்கும் வாயு எது?
*அமோனியம்*

ச.காவியா,
தரம் 8,
யா/இந்து மகளிர் கல்லூரி.

# எல்லாள மன்னன்

இலங்கைக்கு வடக்கே உள்ள தேசம் இந்தியா. மகாத்மா காந்தி வாழ்ந்த இடமும் இதுவேயாகும். அவர் வட இந்தியாவிலே பிறந்தார். பழைய காலத்தில் தென்னிந்தியாவில் மூன்று பெரிய தமிழ் இராச்சியங்கள் இருந்தன. அவை சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மன்னர்களால் ஆளப்பட்டன.

சோழ நாட்டில் எல்லாளன் என்ற அரசன் இருந்தான். அவன் இலங்கைக்கு ஒரு படையுடன் வந்தான். அப்போது அசேலன் எனும் சிங்கள மன்னன் இலங்கையின் அனுராதபுரத்தை ஆட்சி செய்து கொண்டிருந்தான்.

எல்லாளன் அசேலனை வென்று இலங்கைக்கு அரசன் ஆனான். எல்லாளன் ஒரு தமிழ் அரசன். சைவ சமயத்தைச் சேர்ந்தவன். ஆனால் சிங்களவரை அன்பாகவும் நீதியாகவும் நடத்தினான். அவர்களுடைய சமயமாகிய புத்தசமயத்தையும் வளர்த்த அவன், 44 வருடங்களாக நல்லாட்சி செய்தான். அவனுடைய நீதியான ஆட்சியைப் பற்றி நிறையக் கதைகள் உண்டு. அவ்வரசனுடைய படுக்கை அறையில் ஓர் மணி கட்டப்பட்டிருந்தது. அதன் கயிறு அரண்மனை வாசலில் தொங்கவிடப்பட்டிருக்கும். அரசனிடம் தம் குறைகளை முறையிட விரும்புபவர்கள் கயிற்றை இழுத்து மணி அடிப்பார்கள். உடனே அரசன் வந்து குறைகளை விசாரிப்பான்.

ச.சுகாசன் - தரம் 6A,
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.

## பெரியோரைத் துதிப்போம்...



மகிழ்வு: இந்து கலாசாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாவலர் குருபூசைதின விழாவில் நடைபெற்ற 'நாவலர்' நாடகத்தின் ஒரு காட்சியையும், அறநெறிப் பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்ச்சியையும் காணலாம். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூத்துக்குடி - கொழும்பு இடையேயான கப்பல் சேவை ஜனவரியில் ஆரம்பம்

## கேள்விப்பத்திரம் வெளியீடு; அடுத்தவாரம் அதிகாரிகள் குழு கொழும்புக்கு!

டில்லி, டிசெ.25

மத்திய அரசு நிறுவனமான ஷிப்பிங் கோர்ப்பரேஷன் ஒவ் இந்தியா (எஸ்.சி.ஐ.) நிறுவனம் இந்திய - இலங்கை இடையே கப்பல் போக்குவரத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

இதற்கான கேள்விப் பத்திரங்களை அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. வரும் ஜனவரி முதல் இரு நாடுகளிடையே கப்பல் போக்குவரத்து தொடங்க உள்ளது. சுற்றுலாவை மேம்படுத்தும் முயற்சியில் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் விடுதலைப் புலிகள் முற்றிலுமாக ஒழிக்கப்பட்ட நிலையில் இரு நாடுகளிடையே சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக இந்தச் சேவை தொடங்கப்படுகிறது. இதன்படி தூத்துக்குடித் துறைமுகத்திலிருந்து கொழும்புக்கு கப்பல் சேவையை நடத்த விரும்பும் நிறுவனங்களிடமிருந்து விண்



ணப்பங்களைக் கோரியுள்ளன.

இரு நாடுகளிடையே கப்பல் போக்குவரத்து நடத்த பல நிறுவனங்கள் முன்வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பயணிகள் கப்பல் சேவைக்கு இம்மாத தொடக்கத்தில்தான் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இரு நாடுகளிடையிலான பயணிகள் போக்குவரத்து குறித்து இந்திய - இலங்கை இடையே வெகு விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. இதற்காக கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் இணைச் செயலர் ராஜீவ் குப்தா, இலங்கைக் கப்பல் போக்குவரத்து அமைச்சகச் செயலர் ஆகியோர் இணைந்து ஒப்பந்த வழிமுறைகளை ஆராய்வர். இதுதொடர்பாக அதிகாரிகள் குழு இம்மாத இறுதியில் இலங்கை செல்லவுள்ளது.

இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கும் இதே போன்று கப்பல் சேவை தொடங்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது. பயணிகள் கப்பல் போக்குவரத்துக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை இலங்கை துறைமுகத்தில் மேற்கொள்ள வேண்டும். இந்தப் பணிகள் ஜூன் மாதம் முடிவடையும் என்று தெரிகிறது.

தூத்துக்குடி - கொழும்பு இடையிலான சேவை தொடங்கப்பட்டு ஆறு மாத இடைவெளியில் இராமேஸ்வரம்- தலைமன்னார் இடையிலான சேவை தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தூத்துக்குடி - கொழும்பு இடையிலான கப்பல் பயண நேரம் 10 மணி நேரமாகும். இராமேஸ்வரம்-தலைமன்னார் இடையிலான கப்பல் பயணம் 3 மணி நேரமாகும்.

# '2-ஜி' ஊழல் விசாரணைக்காக சி.பி.ஐ. முன்பு ஆஜரானார் ராசா



டில்லி, டிசெ. 25

ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபா 2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டு முறைகேடு தொடர்பாக முன்னாள் மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசா சி.பி.ஐ. முன்பு நேற்று ஆஜரானார்.

குற்றவியல் சட்டப்பிரிவு 160 இன் கீழ் வழக்குப் பதிவுசெய்து ராசாவுக்கு, சி.பி.ஐ. நோட்டீஸ் அனுப்பியது.

இதற்கான அறிவிப்பு ராசாவின் டில்லி வீட்டில் ஒட்டப்பட்டது. இந்தக் குற்றப்பிரிவின் கீழ் நோட்டீஸ் பெற்றவர்கள், சி.பி.ஐ. அதிகாரிகள் கேட்கும் கேள்விகளுக்கு நேரில் ஆஜராகிப் பதிலளிப்பது கட்டாயமாகும்.

செப்டம்பர் 2007 முதல் ஜனவரி 2008 வரை 2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு பெற்ற நிறுவனங்களுக்காக, ராசாவின் உறவினர்கள் சிலரது நிறுவனங்கள் செயற்பட்டன. அலைக்கற்றை ஒதுக்கீட்டை ஒருநாள் முன்னதாகவே முடித்துக் கொண்டது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக சி.பி.ஐ. அதிகாரிகள் அவரிடம் கேள்வி எழுப்பினர் என்று தெரிகிறது.

முன்னதாக இந்த வழக்கு விசாரணையை இழுத்தடிப்பதாக சி.பி.ஐக்கு உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது. வழக்கு விசாரணை எந்த அளவுக்கு முடிந்துள்ளது என்பது தொடர்பான அறிக்கையை பெப்ரவரி 10 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டுமென சி.பி.ஐக்கும், அமுலாக்கப் பிரிவுக்கும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து விசாரணையை சி.பி.ஐ. வேகப்படுத்தியுள்ளது. ராசா, அவரது உறவினர்கள், நெருக்கமானவர்களின் வீடுகள், நீரா ராடியாவின் வீடுகள், அலுவலகங்களில் சி.பி.ஐ. அதிகாரிகள் சமீபத்தில் சோதனைகளை மேற்கொண்டனர்.

# கறுப்புக்கொடி, பலூன் பறக்கவிட்டு ராகுலுக்கு பா.ஜ.கட்சியினர் எதிர்ப்பு

## 89 பேர் பொலிஸாரால் கைது

திருப்பூர், டிசெ.25

திருப்பூருக்கு நேற்றுமுன்தினம் வந்த ராகுல் காந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்புக் கொடி கட்டிய பலூன்களை பா.ஜ.கவினர் பறக்கவிட்டனர்; இதைக் கண்டித்து காங்கிரஸார் வீதிமறியலில் ஈடுபட்டனர்.

இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், திருப்பூர் செயின்ட் ஜோசப் மெட்ரிக் கல்லூரி வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது; அதில் அகில இந்தியப் பொதுச் செயலர் ராகுல் பங்கேற்றார். அவரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ராக்கியாபாளையம் பிரிவில் கறுப்புக்கொடி கட்டி பலூன்களை பா.ஜ.கவினர் பறக்க விட்டனர். கறுப்புக்கொடி கட்டி பலூன்களும், கறுப்பு பலூன்களும் வானில் பறந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து அங்கு சென்ற ரூரல் பொலிஸார், பா.ஜ.கவின் மாவட்டத் தலைவர் மணி உட்பட கறுப்புக் கொடிகளுடன் காணப்பட்ட பா.ஜ.கவைச் சார்ந்த 89 பேரை கைதுசெய்தனர்.

கறுப்புக்கொடி, பலூன் பறக்க விட்டதை கண்டித்து காங்கிரஸார் வீதிமறியலில் ஈடுபட்டனர், பா.ஜ.கவைக் கண்டித்து கோஷம் எழுப்பினர். மறியல் 20 நிமிடங்கள் நீடித்ததால் போக்குவரத்து ஸ்தம்பித்தது.




# பிரபாகரன் மரணித்து விட்டாரா? உங்களுக்கு எப்படித் தெரியும்

## பொறுத்திருங்கள்; காலம் பதில் சொல்லும் என்கிறார் சீமான்

சென்னை,டிசெ.25

பிரபாகரன் மரணமடைந்து விட்டார் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? இப்போது எது சொன்னாலும் அது வரலாற்றுப்பிழையாகிவிடும். அதனால் பொறுத்திருங்கள். யார் சொல்லுவதையும் நம்பாதீர்கள். காலம் பதில் சொல்லும் - என்று அக்கினிப் புயல் சீமான் சீறினார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியின் போதே அவர் மேற்கண்டவாறு ஆவேசமாகக் கூறினார்.

பேட்டியின் விவரம் வருமாறு

கே - பிரபாகரன் மரணமடைந்ததற்கு யார் காரணம் என்று குறிப்பிடுகிறீர்கள்?

ப - பிரபாகரன் மரணமடைந்துவிட்டார் என்பது உங்களுக்கு எப்படி தெரியும். பிரபாகரன் இறந்துவிட்டார் என்பதற்கு சிங்களவர்கள் 20 கதைகள் சொல்லுகிறார்கள். அதை எல்லாம் நம்பாதீர்கள்.

கே - ஈழத்துடன் நெருங்கிய தொடர்பு உள்ள நீங்கள் சொல்லுங்கள். பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா?

ப - ஈழ விடுதலைக்காக இவ்வளவு தூரம் போராடிய என் அண்ணன் அவ்வளவு சீக்கிரம் அந்தப் போராட்டத்தை விட்டு போகமாட்டார் என்று நம்புகிறேன். அந்த நம்பிக்கையில் தான் நாங்கள் வேகமாக இயங்குகிறோம். என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. அதனால் எல்லோரும் அமைதியாகத்தான் இருக்க வேண்டும்.

இறுதிக்கட்டப் போரில் என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. கூட நின்ற தம்பிகளுக்குக் கூடத் தெரியாது. அப்படியிருக்க யாரும் அது பற்றி சொல்லுவது சரியல்ல.

என் அண்ணன் இருப்பதாக ஏன் நினைக்கிறேன் என்றால், எனக்கு என் அண்ணன் இறந்து விட்டார் என்று நம்பகமான இடத்தில் இருந்து தகவல் வரவில்லை. அதனால் நம்புகிறேன். இப்போது எது சொன்னாலும் அது வரலாற்றுப்பிழையாகிவிடும். அதனால் பொறுத்திருங்கள். யார் சொல்லுவதையும் நம்பாதீர்கள். காலம் பதில் சொல்லும்.

மூன்று மணி நேர சினிமாவில் ஆரம்பக் காட்சியில் தந்தையைக் கொன்ற வில்லனை கடைசியில் கொல்லும்போது கைதட்டுகிறீர்கள். ஓர் இனத்தையே அழித்ததை எப்படி மறந்துவிட முடியும். ஈழ மக்களுக்காக எந்நாளும் போராடுவோம் - என்றார்.

# தமிழகத்தில் ஆட்சி மாற்றம் வரும்

## இளைஞர் காங். முனைப்புக் காட்ட வேண்டும் என்கிறார் ராகுல்

திருப்பூர், டிசெ.25

தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்க இளைஞர் சக்தி அதிகரிக்கப்பட வேண்டும். அதன் மூலமே ஆட்சி மாற்றமும், அரசியல் மாற்றமும் வரும். தற்போது தமிழகத்தில் காங்கிரஸ் இரண்டாம் நிலையில் உள்ளதை விரும்பவில்லை - என்று அகில இந்தியக் காங்கிரஸ் பொதுச்செயலர் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள்கள் பயணமாக தமிழகம் வந்த ராகுல், திருநெல்வேலி, திருச்சி, திருப்பூர் ஆகிய இடங்களில் இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகளுடன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கலந்துரையாடினார்.

அப்போது அவர் பேசியவை வருமாறு -

125 ஆண்டுகள் வரலாறு கொண்டுள்ள காங்கிரஸ் கட்சி கடந்த 40 ஆண்டுகள் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இல்லை. தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்க இளைஞர் சக்தி அதிகரிக்கப்பட வேண்டும்.

அதன்மூலமே ஆட்சிமாற்றமும், அரசியல் மாற்றமும் வரும். இப்போது தமிழகத்தில் காங்கிரஸ் இரண்டாம் நிலையில் உள்ளதை விரும்பவில்லை. காங்கிரஸ் தலைமையில் ஆட்சியை ஏற்படுத்தி முதல்வர் பொறுப்புக்கு வரவேண்டும்.

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியினர் சட்டப்பேரவை, மக்களவை உறுப்பினர்களாகியுள்ளனர். ஆனால், உள்ளூராட்சித் தலைவர் பதவிகளைத் தவறவிட்டுவிட்டோம். எல்லா இடங்களிலும் காங்கிரஸை முன்னிலைப்படுத்தும்போதுதான் ஆட்சியைப் பிடிக்க முடியும். அதற்குக் கிராமப்புற ஏழை மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப் போராட வேண்டும். அதைச் செய்யாமல் ஆட்சியைப் பிடிக்க முடியாது.

சட்டப்பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமின்றி முதல்வர் பதவியையும் கொடுப்பது எனது வேலை.

காங்கிரஸ் கட்சியிலிருந்த காந்தி, காமராஜர், கக்கன் போன்ற தலைவர்கள் எளிமையாக வாழ்ந்து மக்களுக்காகப் பாடு பட்டனர். அத்தலைவர்களைப்போல் இங்கு பல இளைஞர்கள் உள்ளனர்.



கக்கனின் சிலைக்கு மாலை அணிவிக்கிறார் ராகுல் காந்தி

தமிழக அரசியலில் மாற்றம் வர அத்தகையோர் முன்வர வேண்டும். தமிழகத்தில் உள்ளூராட்சித் தலைவர், வார்டு உறுப்பினர் பதவிகளைக் கைப் பற்றினால் முதல்வர் பதவி தானாக வரும்.

கூட்டத்தில் மிகக் குறைந்த அளவிலேயே பெண்கள் இருந்ததைக் கவனித்த ராகுல், இளைஞர் காங்கிரஸ் இயக்கத்தை வலுப்படுத்த இளம் பெண்களை அதிகளவில் சேர்க்க வேண்டும். பெண்கள் சக்தி இல்லாமல் எந்தவொரு இயக்கமும் வலுப்பெறாது.

இளைஞர் காங்கிரஸ் முனைப்புடன் செயற்பட்டால், முதுபெரும் தலைவர்களைப் பின்னுக்குத் தள்ள முடியும். அதற்கு நாம் அடிப்படையில் பலமாக வேண்டும். அத்திவாரம் பலமாக இருந்தால்தான், ஒரு கட்டடம் பலமானதாக இருக்க முடியும். எனவே நாம் முதலில் கட்சியின் அடிமட்டத்தைப் பலப்படுத்த வேண்டும்.

தமிழகத்தில் பிற கட்சிகளின் கொள்கைகளை நாம் மக்களிடம் எடுத்துச் சென்று கொண்டிருக்கிறோம். அது தவறு. நமது கட்சிக் கொள்கையை மட்டுமே மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 710 திகதி 23-12-2010

வெற்றி எண்கள்

**14 17 26 51 F**

ஜக்பொட் பரிசு ரூ. 18,484,690/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 18,484,690/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 21 | 2,000/= | 42,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 397 | 1,000/= | 397,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 603 | 1,000/= | 603,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15596 | 60/= | 935,760/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7395 | 40/= | 295,800/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 183949 | 20/= | 3,678,980/= |
| | | மொத்தம் ரூ. 6,752,540/- | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| காலி | 700654813-6-06 |
| புத்தளம் | 700651058-5-35 |
| கம்பஹா | 700654267-0-20 |
| திருகோணமலை | 700648402-2-12 |
| பொலன்னறுவை | 700646305-3-33 |
| அம்பாறை | 700649753-4-24 |
| அம்பாந்தோட்டை | 700642283-9-39 |
| அநுராதபுரம் | 700652166-8-18 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,152,540/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 18,983,050/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 டிசம்பர் 27 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


CDB Citizens Development Your Friend

## CDBயுடன் இணைவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் க.பொ.த. உயர்தரத்தை நிறைவு செய்தவராக இருப்பின் எமது சந்தைப்படுத்தல் துறையில் இணைய ஆர்வம் உள்ளவராயின் ஆண், பெண் இருபாலாரும் உங்கள் சுயவிவரக்கோவையை 05.01.2011 இற்கு முன்னராக எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :
முகாமையாளர்,
CDB, 208, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 222 1585/86,
0773469226,
0777480810.

(சி 574061)


## மனமார்ந்த ஆசீர்வாதங்கள்



அண்மையில் கலாபூஷணம் விருது பெற்ற V.K.பஞ்சமூர்த்தி அவர்கள் பாரம்பரிய கர்நாடக இசையில் மேலும் வளர்ச்சி பெற்று தீர்க்க ஆயுளுடன் இன்னும் பல விருதுகள் பெற்று சிறக்க வேண்டி நீர்வேலி வாய்க்கால்தரவை மூத்தவிநாயகரை பிரார்த்தித்து நல்லாசிகள் வழங்குகின்றோம்.



இவ்வண்ணம்:
வாய்க்கால்தரவை மூத்தவிநாயக தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள், நீர்வேலி.

# வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 849 திகதி: 23.12.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| M | 12 | 13 | 22 | 59 | 33 |

| கூட்டு | | | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|---|
| சுப்பர் | பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 10,620,822.00 | - |
| 1ம் | பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் | பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 07 |
| 3ம் | பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 308 |
| 4ம் | பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14820 |
| 5ம் | பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 207247 |
| 6ம் | பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 30997 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 8,562,880.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 10,890,050.50

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை

## அச்சுவேலி மத்திய கல்லூரியில் புதிய தண்ணீர்த் தாங்கி

அச்சுவேலி,டிசெ.25

அச்சுவேலி மத்திய கல்லூரியில் யுனிசெவ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் 7 லட்சம் ரூபா செலவில் புதிய தண்ணீர்த் தாங்கி நிர்மாணிக்கப்படவுள்ளது.

அச்சுவேலி மத்தியகல்லூரியில் இதுவரை பாவனையில் இருந்து வரும் தண்ணீர்த் தாங்கி 75 வருடங்களுக்கு மேற்பட்டது.

மாணவர்களின் பாவனைக்கு நாளாந்தம் இரண்டு தடவைகளுக்குக் குறையாமல் நீர் நிரப்ப வேண்டி இருந்ததோடு, மாணவர்கள் குடி தண்ணீர் வசதியை உரிய முறையில் நிவர்த்தி செய்ய முடியாமல் இருந்து வந்துள்ளது.

இந்நிலையில் யாழ். கல்வி வலய பொறியியளாளரின் வழிப்படுத்தலுடன் புதிய தண்ணீர்த் தாங்கி அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-11)

## ஆலய வளாகத்தில் மதுப்பிரியர்களின் அட்டகாசம்

யாழ்ப்பாணம், டிசெ.25

ஆலடி, உடுவில் கிராமத்திலுள்ள ஞானவைரவர் ஆலயமொன்றில் மதுப்பிரியர்கள் செய்யும் அட்டகாசத்தால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வைரவர் ஆலயத்தின் ஆலமரத்திற்குப் பின்னால் இருந்து மதுபானம் அருந்துவதும் ஆலய வாசலில் இருந்து சீட்டாடுவது என இவர்களது தொல்லைகள் அதிகரித்த வண்ணமே செல்கின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளால் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் ஆலயம் சென்று வழிபாடுகளை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள். (204-313)

## பாம்பு கடித்து சிறுவன் காயம்

சாவகச்சேரி,டிசெ.25

மீளக்குடியமர்வுக்காக சாவகச்சேரி, தன்ங்கிளப்பு பகுதியில் காணி துப்புரவாக்கிக் கொண்டிருந்த வேளையில் அருகில் விளையாடிக்கொண்டிருந்த தயாபரன் கனுஷன் (வயது-7) என்ற சிறுவன் பாம்புக் கடிக்கு இலக்காகி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (15-207)

## வீதி சேதம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

மல்லாகம் சந்தி பஸ்தரிப்பு நிலையம் முன்பாக அமைந்துள்ள வீதி மிகவும் சேதமடைந்து காணப்படுவதால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குண்டும் குழியுமாகக் காணப்படும் இந்த வீதியில் அமைந்துள்ள பஸ்தரிப்பிடத்தில் நின்று பஸ்ஸில் ஏறும் பயணிகள் நீண்ட தூரம் நடந்து சென்று பஸ் ஏற வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இந்த வீதியில் வாகனங்கள் விலத்த முடியாமல் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்களும் ஏற்படுகின்றன.

பாதசாரிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே பொது மக்களின் நன்மை கருதி இவ் வீதியைப் புனரமைப்பு செய்து தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (204-313)

## பொதுக்கூட்டம்

கோப்பாய்,டிசெ.25

வலி.கிழக்கு ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் மருத்துவர் வ.அனவரதன் தலைமையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் ஆயுள்வேத பாதுகாப்பு சபையின் போஷகரான வலி.கிழக்கு பிரதேச செயலர் ம. பிரதீபன் சபையின் செயற்பாடுகள் பற்றிய கருத்துக்களை முன் வைப்பார். (ம-72)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் சக ஆசிரியை
திருமதி உ. புஸ்பராசாவின்
அன்புத் தந்தையார்
பண்டிதர் கனகர் நாகலிங்கம்
அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

ஆசிரியர் கழகம்,
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.

# ஜனஜய லொத்தர்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வாரம் 188 — சீட்டிழுப்புத் திகதி 23.12.2010

| வெற்றி இலக்கங்கள் | | | | சுப்பர் இலக்கம் |
|---|---|---|---|---|
| 04 | 51 | 54 | 64 | 01 |

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 10,877,990/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 59437 | ரூ. 20/= | ரூ. 1,188,740/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 5372 | ரூ. 40/= | ரூ. 214,880/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 4508 | ரூ. 100/= | ரூ. 450,800/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 390 | ரூ. 200/= | ரூ. 78,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 87 | ரூ. 1,500/= | ரூ. 130,500/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 16 | ரூ. 3,000/= | ரூ. 48,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 10,877,990/= | |
| மொத்த எண்ணிக்கை | 69811 | | ரூ. 3,110,920/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,059,730/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk

இன்று (25.12.2010)

## மணிவிழா காணும் பூமாதேவி

(களனை, பன்னாலை, தெல்லிப்பழையை முன்னைய முகவரியாகவும் தற்போது கல்லூரி ஒழுங்கை, கந்தரோடை, சுன்னாகத்தில் வாழ்ந்து வருபவர்)



மணிவிழாக் காணும் அப்பம்மா
மங்களமே உருவம் அப்பம்மா
பணிவோடு வாழ்த்துகின்றோம்- நாங்கள்
பல்லாண்டு வாழ்க என நீங்கள்

எங்களது குடும்ப ஒளியாம் அப்பம்மா
எங்களது அப்பம்மா அரிமா
எங்களுக்கு ஏற்றவை நீர்- தந்தீர்
இருக்கின்றோம் சபையில்
இங்கும்- முந்தி

மணியம் என்ற எங்களது பாட்டன்
மணியான பொன்னுப்பிள்ளைப்
பாட்டி
தணியாத தவப்பயனாய் பெற்றார்
தளராது முயன்று உயர்வு பெற்றீர்

எங்கும் எவர்க்கும் உதவ- மகாதேவர்
இணைந்து கரம் கொடுக்க- பூமாதேவி
பொங்கும் நல் பேர் புகழைக் கொண்டீர்
பொழுதெல்லாம் நல் வாழ்வு கொள்வீர்

பல்லாண்டு காலம் சுகநலத்தோடு
வாழ்கவென வாழ்த்தும்:
மகன்- பிருந்தாபன்,
மருமகள்- சிவனேஸ்வரி,
பேர்த்தி- சர்விகா,
பேரன்- கோவரசன்.

122, MATLOCK CRESENT,
NORTH CHEAM,
SURREY, SM39SZ, U.K.

(C/57068)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு ஐ.எஸ்.ஐ. தலைவரை நிர்ப்பந்திக்க முடியாது

## பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ராசா கிலானி



இஸ்லாமாபாத், டிச.25

அமெரிக்க நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு ஐ.எஸ்.ஐ. தலைவரை யாரும் நிர்ப்பந்திக்க முடியாது என்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ராசா கிலானி கூறினார்.

2008-இல் மும்பையில் நடந்த பயங்கரவாதிகள் தாக்குதல் தொடர்பாக அமெரிக்க நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2 பேர் தொடர்ந்துள்ள வழக்கில் ஐ.எஸ்.ஐ. தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் அகமது சுஜா பாஷா நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியிருக்கும் என்று நியூயோர்க்கிலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுதொடர்பாக பாகிஸ்தான் பிரதமர் கிலானி பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் கூறியதாவது: -

ஐ.எஸ்.ஐ. அமைப்பு எங்கள் நாட்டுக்கு மிக முக்கியமான உளவு அமைப்பாகும். நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்கு அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லையென்றால் அவர்களை யாரும் நிர்ப்பந்திக்க முடியாது. நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டும் என்று எந்த சக்தியும் ஐ.எஸ்.ஐ. தலைவரை நிர்ப்பந்திக்க முடியாது:

அவையில் இப்பிரச்சினையை எழுப்பிய உறுப்பினர்களுக்கு இதை தெளிவாகத் தெரிவிக்கிறேன் என்றார் அவர்.

கிலானி மேலும் பேசியதாவது: -

வடக்கு வஜிரிஸ்தான் மீது இராணுவத் தாக்குதல் நடத்தவேண்டும் என்ற வெளிநாடுகளின் வற்புறுத்தலுக்கு பாகிஸ்தான் பணிந்துவிடாது. இந்த விடயத்தில் யாரும் எங்களுக்கு உத்தரவிட முடியாது. எங்கு எப்போது தாக்குதல் நடத்தவேண்டும் என்று யாரும் எங்களுக்கு சொல்லத் தேவையில்லை என்றார் அவர்.

வடக்கு வஜிரிஸ்தான் பகுதியில் பதுங்கியுள்ள பயங்கரவாதிகளை அழிப்பதற்காக அங்கு தாக்குதல் நடத்தப்படவேண்டும் என்று நீண்ட நாள்களாக அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. அதற்கு பதிலளிக்கும் விதமாக நாடாளுமன்றத்தில் கிலானி சூசகமாக பதில் அளித்துள்ளார். (த)

## குடும்பத்துடன் ஒபாமா ஹவாய் பயணம்

அமெரிக்க அதிபர் ஒபாமா ஒரு வார கால விடுமுறையை, ஹவாய் தீவில் குடும்பத்துடன் கொண்டாட உள்ளார். அமெரிக்க நாடாளுமன்றக் கூட்டம் நேற்று நிறைவடைந்தது. கூட்டம் முடிந்ததும், அதிபர் ஒபாமா வழக்கமான விமானப்படை விமானத்தை தவிர்த்து, சிறிய விமானத்தில் தன் மனைவி மிச்சேல் மற்றும் மகள்கள் சாஷா, மாலியா மற்றும் செல்ல நாய்களுடன் புறப்பட்டார். நேற்று ஹவாய் விடுமுறையை முடித்து வரும் முதலாம் திகதி, அவர் வாஷிங்டன் திரும்ப உள்ளார்.




# இந்தியா - அமெரிக்கா இடையேயான உறவு விக்கிலீக்ஸ் செய்தியால் பாதிப்படையாது

வாஷிங்ரன், டிசெ.25

விக்கிலீக்ஸ் வெளியிட்ட ரகசிய செய்தியால் இந்தியா-அமெரிக்கா இடையேயான உறவு எந்த வகையிலும் பாதிக்காது என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விக்கிலீக்ஸ் இணையத்தளம் ஆப்கான் போர் விவரம், அமெரிக்காவின் பாதுகாப்பு இரகசியங்கள் உட்பட பல்வேறு இரகசிய தகவல்களை வெளியிட்டது. அந்தச் செய்தியால் உலகம் முழுவதும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து இந்திய அதிகாரிகள் அமெரிக்க தூதரிடம் பேசிய சில தகவல்களை அண்மையில் விக்கிலீக்ஸ் வெளியிட்டது. அதனால் இரு நாடுகளின் உறவு பாதிக்கப்படலாம் என்ற அச்சம் நிலவியது. இந் நிலையில், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன், இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடன் தொலைபேசியில் பேசினார். சுமார் 15 நிமிடங்கள் நடந்த உரையாடலில் விக்கிலீக்ஸ் வெளியிட்ட செய்தி மற்றும் தீவிரவாதத்துக்கு எதிராக கூட்டாகச் செயற்படுவது குறித்து இருவரும் பேசியதாக வெளியுறவு செய்தித் தொடர்பாளர் க்ரவ்லே தெரிவித்தார். (த)

## ஆன்மீகத் தலைவர் பாகிஸ்தானில் கடத்தல்

பலூசிஸ்தான் மாகாணத்தின் கலாட் மாவட்டம் சுரப் என்ற இடத்தில், இந்து ஆன்மீகத் தலைவர் சந்த் கார்ஜி(வயது82), இவரது சீடர்கள் சஜ்ஜன்தாஸ், ராம்சந்த், பாபுலால், வினோத்குமார் ஆகியோர் கடந்த 21ஆம் திகதி இரவு திருமண நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக சென்ற போது, ஆயுதங்களுடன் வந்த ஐந்து பேர் இவர்களை கடத்திச் சென்றனர். இவர்களில் மூன்று பேரை பாலைவனப் பகுதியில் கண்ணையும், கையையும் கட்டி இறக்கிவிட்டனர். இந்த மூன்று பேரும் தப்பி ஊர் போய் சேர்ந்துவிட்டனர். ஆன்மீகத் தலைவர் கார்ஜியும், வர்த்தகரின் மகன் வினோத்குமாரையும் கடத்தல்காரர்கள் இன்னும் விடுவிக்கவில்லை; அவர்கள் இருப்பிடமும் தெரியவில்லை. இதனால் கொதிப்படைந்த குவெட்டா வாழ் இந்துக்கள், தேசிய நெடுஞ்சாலையில் அமர்ந்து சாலை மறியல் போராட்டம் செய்தனர். இன்னும் பல இடங்களில் போராட்டம் நடத்தி வருகின்றனர். கார்ஜியையும், அவரது சீடரையும் பாதுகாப்பாக மீட்க நடவடிக்கை எடுக்கும்படி பலூசிஸ்தான் முதல்வர் நவாப் அஸ்லாம் ரெய்சானி, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

## பிரான்ஸில் கடும் பனிப்பொழிவு

பரிஸ்,டிசெ.25


பிரான்ஸில் நிலவி வரும் கடும் பனிப்பொழிவு மற்றும் சில்லிடும் வானிலையால், விமானப் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, போக்குவரத்துத்துறை அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

பாதிக்கும் மேற்பட்ட விமானங்களின் சேவைகள் அடியோடு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர், விமான நிலையத்திலேயே தஞ்சம் புகுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது, விரைவில் நிலைமை சீராகும் என்று நம்பப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (த)

# தலாய்லாமாவை மிகக் கடுமையாக வெறுக்கும் சீன நாட்டின் அதிபர்

## விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவல்



பேர்லின்,டிசெ.25

சீனாவில் எப்படி இருப்பினும் அங்கு, அரசை நிர்வகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உண்மையான ஜனநாயகம் நிலவுவதாக கூறியுள்ள விக்கிலீக்ஸ், அனைத்து விவகாரங்களையும் இந்த மத்திய குழுதான் தீர்மானிக்கிறது. அதேசமயம், திபெத் மற்றும் தலாய் லாமா குறித்த விவகாரத்தை முழுமையாகக் கையாளுவது அதிபர் ஹூ ஜின்டாவோதான் என்றும் விக்கிலீக்ஸ் தகவல் தெரிவித்துள்ளது.

இது குறித்து சீனாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அனுப்பி வைத்த ரகசிய கடிதத்தை 'விக்கிலீக்ஸ்' வெளியிட்டுள்ளது. சீனாவில் ஜனநாயகம் இருக்கிறதோ இல்லையோ. இந்த மத்திய குழுவில் முழுமையான ஜனநாயகம் விளங்குகிறது. மிக முக்கியப் பிரச்சினைகள் மத்திய குழுவில் வைத்துதான் முடிவெடுக்கப்படுகிறது. அனைத்து உறுப்பினர்களும் சம்மதித்தால்தான் எந்த ஒரு பிரச்சினைக்கும் ஒப்புதல் தரப்படுகிறது.

அனைத்துப் பிரச்சினைகளையும் மத்திய குழு கவனித்தாலும் கூட திபெத் மற்றும் தலாய்லாமா குறித்த பிரச்சினையை அதிபர் ஹூ மட்டுமே கவனிக்கிறார். தலாய் லாமாவை மிகக் கடுமையாக வெறுப்பவர் ஹூ. அவரை ஒரு துரோகியாக ஹூ கருதுகிறார். ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் யாரேனும் தலாய்லாமா குறித்து பரிதாபப்பட்டாலும் கூட அவர்களுக்கு வேலை காலியாகி விடும். அந்த அளவுக்கு தலாய்லாமாவை கடுமையாக வெறுப்பவர் ஹூ என்று அந்த தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# 150 கோடி ரூபா செலவில் அபுதாபியில் கிறிஸ்மஸ் மரம்

அபுதாபி,டிசெ.25

அபுதாபியில் பிரபல ஆடம்பர ஹோட்டலில் 150 கோடி ரூபா மதிப்பில் தங்கம், இரத்தினக் கற்களால் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்மஸ் மரம் சர்ச்சையை கிளப்பியுள்ளது. அபுதாபியில் உள்ள ஹோட்டல்களில் கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி மரபு ரீதியாக கிறிஸ்மஸ் மரம் வைப்பது வழக்கம். மேலும் அவ்வாறு வைக்கப்படும் மரத்தை மின் விளக்கு போன்ற அலங்காரப் பொருள்களால் அலங்கரிப்பதில்லை.

ஆனால், அங்குள்ள ஆடம்பர ஹோட்டல் ஒன்றில் வைக்கப்பட்டு இருந்த கிறிஸ்மஸ் மரம் தங்கம், வைரம், பல்வேறு நவரத்தினக் கற்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

வழக்கத்துக்கு மாறாக அதிகப்படியான ஆபரணப் பொருள்கள் ஆக்கிரமித்து அந்த மரமே தெரியாத அளவிற்கு மூடப்பட்டு இருந்தது. மரபை மீறி ஆடம்பரத்தை பரதிபலிப்பதாக இருப்பதுடன் பார்வையாளர்களை கவர்வதற்காக உருவாக்கப்பட்டது போல் உள்ளது.

மேலும் இது தவறான ரசனையை வெளிப்படுத்துவதாக கூறி சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதையடுத்து ஹோட்டல் நிர்வாகி ஒருவர் கூறுகையில், கிறிஸ்மஸ் மரம் தங்கம், வைரம் உட்பட நவரத்தினக் கற்களால் அலங்கரிக்கப்பட்டு ஹோட்டலின் மையப்பகுதியில் வைக்கப்பட்டு உள்ளது. பண்டிகையை முன்னிட்டு ஹோட்டலில் வைக்கப்பட்டுள்ள கிறிஸ்மஸ் மரம் மரபை மீறியதாக இருந்தால் அதற்காக வருந்துகிறோம் என்று அவர் தெரிவித்தார். (த)

## இந்த ஆண்டில் மட்டும் 800 ஆப்கன் இராணுவம் பலி

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிரான போரில் இந்தாண்டு மட்டும் 800 ஆப்கன் இராணுவத்தினர் பலியாகியுள்ளதாக அந்நாட்டு இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டிலிருந்து தான் தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் பல்வேறு வகைகளில் தற்கொலை படைதாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஆப்கானிஸ்தான் இராணுவ செய்தி தொடர்பாளர் ஜாகீர் ஆஷ்மீ செய்தியாளர்களுக்கு கூறியதாவது:-

ஆப்கானில் நேட்டோ படையுடன் இணைந்து இராணுவத்தினர் தலிபான்களை ஒடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் இந்தாண்டு 800 ஆப்கன் இராணுவ ஜவான்கள் பலியாகியுள்ளனர். (த)

## எப்படியிருக்கு...



குதூகலம் : பாங்கொக் வட பிராந்தியத்தின் அயுத்தயா நகரில் அமைந்துள்ள பாடசாலையொன்றில் மிகவும் வித்தியாசமான முறையில் கிறிஸ்மஸ் கொண்டாடப்பட்டுள்ளது. யானைகளுக்கு கிறிஸ்மஸ் தாத்தாவின் ஆடைகளை அணிவித்து அவற்றுடன் இணைந்து ஆடிப்பாடி மகிழ்ந்துள்ளனர் அந்தப் பாடசாலையின் மாணவர்கள். அவர்களது இந்த வித்தியாசமான கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் போது எடுக்கப்பட்டபடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணி மீண்டும் எழுச்சி பெறும்



தென்னாபிரிக்காவுக்கு எதிராக செஞ்சூரியன் பார்க் மைதானத்தில் நடந்த முதல் டெஸ்டில் இந்தியா மோசமான தோல்வியை தழுவியது. இன்னிங்ஸ் மற்றும் 25 ஓட்டங்களால் தோற்றதால் 'நம்பர் 1' அணியான இந்தியாவுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் போட்டி வருகிற நாளை ஞாயிற்றுக்கிழமை டர்பனில் தொடங்குகிறது. இந்த டெஸ்டில் இந்திய அணி மீண்டும் எழுச்சி பெறும் என்று கப்டன் டோனி நம்பிக்கை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

முதல் டெஸ்டில் நாங்கள் உண்மையிலேயே சிறப்பாக விளையாடவில்லை. வெளி நாட்டில் இந்திய அணி முதல் போட்டியில் விளையாடும்போது தோல்வி ஏற்பட்டு இருக்கிறது. கடந்த கால போட்டிகளை பார்த்தால் இது நமக்கு தெரியவரும்.

பின்னர் அணி சிறப்பாக விளையாடி இருக்கிறது.

இதேபோலவே இந்திய அணி இனிவரும் 2 டெஸ்டிலும் எழுச்சி பெறும். வீரர்கள் சிறப்பாக ஆடுவார்கள்.

தென்னாபிரிக்கா துடுப்பாட்டக் காரரைக் கட்டுப்படுத்த பந்து வீச்சாளர்கள் மேற்கொண்ட திட்டம் தோல்வி அடைந்தது.

அதே நேரத்தில் ஆடுகளம் பந்து வீச்சுக்கு ஏற்றதாக அமையவில்லை. ஜாகீர்கான் ஆடி இருந்தால் விக்கெட் கைப்பற்றி இருக்கலாம். அவர் அனுபவம் வாய்ந்த பந்து வீச்சாளர் என்றார் டோனி நம்பிக்கை சற்றும் தளராமல்.

# மொர்டசாவுக்கு மீண்டும் காயம்

பங்களாதேஷ் வீரர் மொர்டசாவுக்கு மீண்டும் காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் இவர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷ் அணியின் வேகப்பந்துவீச்சாளர் மொர்டசா. கடந்த ஆண்டு மேற்கிந்தியத்தீவுகள் சுற்றுப்பயணத்தின் போது காயமடைந்த இவர், நீண்ட நாள்களாக ஓய்வில் இருந்தார். கடந்த ஒக்ரோபரில் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் களமிறங்கிய போதும், ஒரே ஒரு போட்டியில் மட்டும் பங்கேற்றார். பின்னர் சிம்பாப்வேக்கு எதிராக சமீபத்தில் நடந்த ஒருநாள் தொடரில் மீண்டும் இடம்பிடித்தார்.

சமீபத்தில் வெளியிடப்பட்ட உலகக் கிண்ணக் கோப்பை தொடருக்கான 30 பேர் கொண்ட உத்தேச அணியில் இடம் பிடித்திருந்த இவர், உள்ளூர் போட்டியின் போது வலது முழங்காலில் காயம் அடைந்தார். இதனால் இவர் அடுத்த ஆண்டு இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் நாடுகள் இணைந்து நடத்தும் உலக கிண்ணத் தொடரில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் இவருக்கு 10 நாள்கள் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. அதன்பின் இவரது காயத்தின் தன்மை குறித்து ஆய்வு செய்து, உலகக் கிண்ணத் தொடரில் சேர்ப்பது குறித்து முடிவு செய்யப்படும் என, வங்கதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

# இந்திய அணி சம்பியன்

தெற்காசிய உதைபந்தாட்டத் தொடரில் இந்திய அணி சம்பியன் பட்டம் வென்றது.

பெண்களுக்கான முதலாவது தெற்காசிய உதைபந்தாட்டத் தொடர் பங்களாதேஷில் நடந்தது. இதன் லீக் சுற்றில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின. முதல் அரையிறுதியில் இந்திய அணி 8:0 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வீழ்த்தியது. 2ஆவது அரையிறுதியில் நேபாளம் அணி 3:0 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷத்தை வீழ்த்தியது.

நேற்று நடந்த இறுதியாட்டத்தில் இந்தியா, நேபாளம் அணிகள் மோதின. விறுவிறுப்பான இறுதியாட்டத்தில் முதல் பாதியில் இரு அணியினரும் கோல் அடிக்க முடியாமல் திணறினர். பின்னர் 2ஆவது பாதியில் எழுச்சி கண்ட இந்திய அணிக்கு, ஆட்டத்தின் 65ஆவது நிமிடத்தில் சஸ்மிதா மாலிக், ஒரு கோலை அடித்து கைகொடுத்தார். ஆட்டநேர முடிவில் இந்திய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான அரையிறுதியில் 'ஹாட்ரிக்' கோல் அடித்த இந்தியாவின் பாலா தேவி, இத்தொடரின் சிறந்த வீராங்கனைக்கான விருது பெற்றார்.

# மேற்கிந்திய அணியில் ரெய்லர் நீக்கம்



அடுத்த ஆண்டு நடைபெற உள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியின் வீரர் ஜொரோம் ரெய்லர் நீக்கப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு பெப்ரவரி 19- ஆம் திகதி முதல் ஏப்ரல் 2 ஆம் திகதி வரை இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், ஆகிய நாடுகளில் நடைபெற உள்ளது.

இந்தப் போட்டிக்கான 30 பேர் கொண்ட மேற்கிந்திய தீவுகள் உத்தேச அணி அறிவிக்கப்பட்டுள்ளது. வேகப்பந்து வீரர்கள் எட் வர்ட்ஸ், ஜெரோம் ரெய்லர் ஆகியோர் அணியில் இடம் பெறவில்லை



உலக செஸ் சம்பியன் விஸ்வநாதன் ஆனந்துக்கு வாழ் நாள் சாதனையாளர் விருதினை டில்லி முதல் வர் ஷீலா தீட்சித் வழங்குகிறார்.

## சாதிக்க உதவிய துடுப்பு

சச்சின் தனது பழைய துடுப்பு மூலம் தான், டெஸ்டில் 50ஆவது சதம் அடித்து சாதித்துள்ளார். இந்த துடுப்பு 14 சதங்கள் அடிக்க உதவியுள்ளதாம். இது குறித்து துடுப்பு தயாரிக்கும் 'வாம்பயர்' நிறுவனத்தின் சோமி கோஹ்லி கூறுகையில், சச்சின் தனது ராசியான துடுப்பைத் தான் முக்கிய போட்டிகளில் பயன்படுத்துவார். இதன் முனைகள் எல்லாம் சேதமடைந்திருந்தன. இவற்றை சரி செய்து அவரிடம் கொடுத்தோம். செஞ்சுரியன் டெஸ்டில் சதம் அடித்து சாதனை படைத்தார். இதே துடுப்பு மூலம், இவர் உலக கோப்பை பைனலில் சதம் அடிக்க வேண்டும், என்றார்.

# சாதகமான ஆடுகளம்

இந்தியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டிக்கு துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு ஆகியவற்றுக்கு ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளது என டர்பன் கிங்ஸ் மிட் மைதானத்தின் பராமரிப்பாளர் வில்சன் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி, 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இதில், முதல் டெஸ்ட் போட்டி நடந்த செஞ்சுரியன் ஆடுகளம் வேகபந்துவீச்சுக்கு முழுமையாக ஒத்துழைத்தது. இதனால் திணறிப்போன இந்திய அணி, இன்னிங்ஸ் மற்றும் 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இரண்டாவது டெஸ்ட் நாளை டர்பனில் உள்ள கிங்ஸ்மிட் மைதானத்தில் தொடங்குகிறது. இதற்கான ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு ஒத்துழைக்கும் என்பதால், இந்திய வீரர்கள் நிம்மதி அடையலாம்.

இது குறித்து கிங்ஸ்மிட் மைதான பராமரிப்பாளர் வில்சன் கூறுகையில், இரண்டாவது டெஸ்ட் போட்டியில், துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சுக்கு ஒத்துழைக்கும் வகையில் ஆடுகளம் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்கத் தவறினால், அதற்கு ஆடுகளம் காரணமாக இருக்காது என நினைக்கிறேன் - என்றார்.

# என்னை முதன் முதலில் அம்மா என்று அழைத்த சச்சின்

## லதா மங்கேஷ்கர் உருக்கம்

என்னை அம்மாவாக கருதுகிறார் சச்சின். அவர், என்னை முதன் முதலில் அம்மா என்று அழைத்த அந்த நாளை மறக்க முடியாது என பிரபல பாடகி லதா மங்கேஷ்கர் உருக்கத்துடன் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் 'மாஸ்டர் பேட்ஸ்மேன்' சச்சின். கிரிக்கெட் அரங்கில் எண்ணற்ற சாதனைகள் படைத்துள்ளார். இவரை போலவே லதா மங்கேஷ்கரும் அதிக பாடல்களை பாடி 'கின்னஸ்' சாதனை நிகழ்த்தியுள்ளார். இருவரும் மும்பையை சேர்ந்தவர்கள் என்பதால் பாசம் அதிகம். தற்போது 81 வயதான லதா மங்கேஷ்கரை தனது அம்மாவுக்கு நிகராக சச்சின் மதிக்கிறார். இவரது பாடல்கள் மன அழுத்தத்தை போக்குவதாக அமைந்துள்ளன என அடிக்கடி சொல்வார்.

சமீபத்தில் டெஸ்ட் அரங்கில் 50 சதம் அடித்து உலக சாதனை படைத்த சச்சினுக்கு நாட்டின் மிக உயர்ந்த 'பாரத ரத்னா' விருது வழங்க வேண்டுமென பல்வேறு தரப்பிலும் இருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு லதா மங்கேஷ்கரும் ஆதரவு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியவை:

டெஸ்டில் 50ஆவது சதம் அடித்த சச்சினுக்கு எனது வாழ்த்துக்கள். எனது ஆசீர்வாதங்கள் எப்போதுமே அவருக்கு உண்டு. என்னை அம்மா ஸ்தானத்தில் வைத்துள்ளார். ஓர் அம்மாவாக அவருக்காக பிரார்த்திக்கிறேன். முதன் முதலில் அவர், என்னை அம்மா என்று அழைத்த அந்த நாளை மறக்க முடியாது. இதனை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவரது அன்பு வார்த்தைகள் இன்ப அதிர்ச்சியாக இருந்தன. அவரை போன்ற மகன் கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஒரு முறை சச்சினிடம் நிருபர்கள், என்னைப் பற்றி கேட்டுள்ளனர். அதற்கு, அம்மாவை பற்றி ஒருவர் என்ன நினைக்க முடியும்?, என பதில் அளித்துள்ளார்.

எனக்கும் சச்சினுக்கு நிறைய ஒற்றுமைகள் உண்டு. அவருக்கு இசை பிடிக்கும்; எனக்கு கிரிக்கெட் பிடிக்கும். எதிலும் குறை இல்லாமல் முழு நிறைவாக செய்ய விரும்புவார். தனது பணியில் அர்ப்பணிப்பு உணர்வு அதிகம். கடவுளுக்கு பயப்படுவார். ஒவ்வொரு சாதனை நிகழ்த்தும் போதும், மறைந்த தனது தந்தைக்கு நன்றி சொல்லத் தவறமாட்டார். இதே குணங்கள் என்னிடமும் உண்டு. சச்சின் தனது பிறந்த நாளை ஏப்ரல் 24 ஆம் திகதி கொண்டாடுவார். அன்றைய தினம்தான் எனது தந்தை தினானாத் மங்கேஷ்கரின் நினைவு தினம். எனவே, அந்த நாளில் இருவரும் சந்தித்துக் கொள்ள முடிவதில்லை.

'பாரத ரத்னா' விருதுக்கு சச்சின் மிகவும் தகுதியானவர். என்னைப் பொறுத்தவரை




அவர் தான் உண்மையான 'பாரத ரத்னா'. நாட்டுக்காக அதிக சேவை செய்துள்ளார். நிறைய கிரிக்கெட் வீரர்களை இந்தியா உருவாக்கியுள்ளது. அதில், சச்சின் மட்டும் சச்சின் தான். இந்தத் தலைமுறையில் அவருக்கு நிகரான வீரர் யாருமில்லை - என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சல்மான் பட்டுக்கு 7 ஆண்டுகள் தடை; ஐ.சி.சி. வட்டாரங்களிலிருந்து தகவல்

## ஆஸிப்-ஆமீர் ஆகியோரின் நிலையும் சிக்கலில்



கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின்பேரில் விசாரணைக்குள்ளாகியிருக்கும் பாகிஸ்தான் வீரரான சல்மான் பட்டுக்கு 7 ஆண்டுகாலத் தடை விதிக்கப்படும் சாத்தியக் கூறுகள் அதிகமாகக் காணப்படுகின்றன என ஐ.சி.சி. வட்டாரங்களிலிருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

அதேவேளை, சூதாட்டத்துடன் சம்பந்தப்பட்டிருக்கும் மொகமட் ஆஸிப், மொகமட் ஆமீர் ஆகியோருக்கு இரண்டு ஆண்டுகாலத் தடை விதிக்கப்படும் எனவும் தெரியவருகிறது.

டோகாவில் அமைந்துள்ள ஐ.சி.சியின் ஊழல் தடுப்பு நிலையத்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள விசாரணைகளின்போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சல்மான் பட் அடிக்கடி வழக்கறிஞர்களை மாற்றிக்கொள்வதாலும், ஐ.சி.சியுடன் தொடர்ந்து முரண்பட்டுக்கொண்டிருப்பதாலும் அவருக்கு 7 ஆண்டு காலத் தடை விதிக்கப்படுவது உறுதி எனவும், ஆமீர், ஆஸிப் ஆகியோர் அணித்தலைவர் சல்மான் பட் சொன்னதற்கிணங்கவே சூதாட்டத்திற்கு இணங்கியதாலும், அவர்கள் ஐ.சி.சியின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிவருவதாலும் அவர்களுக்கு இரண்டு ஆண்டுகாலத் தடை விதிக்கப்படலாம் அல்லது விளையாட அனுமதிக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை, ஸ்கொட்லாந்துப் பொலிஸார் இந்த விடயங்களை மேலும் சிக்கலாக்கும் முகமாக குறித்த வீரர்களுக்கு எதிரான சாட்சியங்களைத் திரட்டி வருகிறது எனவும் தெரியவருகிறது.

# பாக். சரியான முறையில் செயற்படாதமையால் ஐ.பி.எல். தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் இல்லை

''ஐ.பி.எல். போட்டிகளில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்பது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சரியான முறையில் செயற்படவில்லை.''

- இப்படி பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரரான வசிம் அக்ரம் குற்றஞ்சாட்டியுள்ளார்.



4ஆவது ஐ.பி.எல். போட்டி 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்குகிறது.

இந்தப் போட்டி குறித்துக் கருத்துக் கூறும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஐ.பி.எல். போட்டிக்கான வீரர்கள் ஏலத்தில் பாகிஸ்தான் வீரர்கள் எவரும் இடம்பெறாதமை வருத்தமளிக்கிறது.

'இருபது-20' போட்டியில் பாகிஸ்தான் வீரர்கள் தற்போது மிகவும் சிறப்பான நிலையில் உள்ளனர். அவர்கள் அடுத்தவருடம் நடைபெறவுள்ள ஐ.பி.எல். போட்டியிலிருந்து புறக்கணிக்கப்பட்டமை ஐ.பி.எல். போட்டிக்குத்தான் இழப்பாகும்.

இந்தப் பிரச்சினையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திறமையாகச் செயல்படவில்லை''

- இவ்வாறு அக்ரம் தெரிவித்துள்ளார்.

# இரு முக்கிய மோதல்கள் நாளை வெவ்வேறு களங்களில் ஆரம்பம்

நாளையதினம் இரு முக்கிய மோதல்கள் ஆரம்பமாகின்றன. மெல்போர்ணில் அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆஷஸ் தொடரின் நான்காவது போட்டி ஆரம்பமாகவுள்ளது. அதேவேளை, டர்பனில் இந்தியா - தென்னாபிரிக்க அணிகள் மோதவுள்ளன.

ஆஷஸ் தொடரின் நான்காவது போட்டி நாளை ஆரம்பமாகிறது. இத்தொடரில் ஏற்கனவே முடிந்த போட்டிகளின் அடிப்படையில் 1-1 என்ற கணக்கில் சமனிலை நிலவுகிறது.

இத்தொடரின் முக்கியமான போட்டியாக நாளைய போட்டி கருதப்படுகிறது. ஆதலால், மெல்போர்ண் களம் நாளை முதல் 5 தினங்களுக்கு பரபரப்பு நிலையில் காணப்படும்.

அதேவேளை, இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவது போட்டி நாளை ஆரம்பமாகிறது.

3 போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில், ஏற்கனவே நடந்து முடிந்த முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றுள்ளமையால், நாளை ஆரம்பமாகும் இந்தப் போட்டியும் மிக முக்கியமான ஆட்டமாகக் காணப்படுகிறது.

அந்த வகையில் டர்பன் களத்திலும் நாளை முதல் 5 தினங்களுக்கு சூடுபிடித்த ஆட்டத்தைக் காணக்கூடியதாக இருக்கும்.



சூரிச்சில் நடந்த கண்காட்சி ரெனிஸ் போட்டியில் உற்சாகமாகப் பங்கேற்ற சுவிற்சர்லாந்தின் நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர் (வலது), 'நம்பர் - 1' வீரர் நடால் (ஸ்பெயின்)



# ஒலிம்பிக்கில் மீண்டும் ஒரு தங்கம்!

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் தங்கம் வென்றது எனது வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வு. இதேபோல 2012இல் லண்டனிலும் நடக்கும் என எதிர்பார்க்கிறேன்.

-இவ்வாறு பெல்ஜியம்ரெனிஸ் வீராங்கனையான ஜஸ்டின் ஹெனின் தெரிவித்துள்ளார்.

2002ஆம் ஆண்டு ரெனிஸ் அரங்கில் காலடி வைத்த பெல்ஜியம் வீராங்கனையான ஜஸ்டின் ஹெனின், இதுவரை 7 தடவைகள் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார். 2004 இல் நடந்த ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்று சாதித்தார்.

பின்னர், 2008இல் ரெனிஸ் போட்டிகளிலிருந்து ஓய்வை அறிவித்த ஹெனின், 2010இல் மீண்டும் களமிறங்கினார்.

சிறப்பாக விளையாடி அவுஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் தொடரின் இறுதிப்போட்டி வரை முன்னேறினார். எனினும், அமெரிக்காவின் செரீனாவிடம் தோல்வியடைந்து 2ஆவது இடத்தையே பிடிக்க முடிந்தது.

அடுத்து நடந்த விம்பிள்டன் தொடரின் 4ஆவது சுற்றில் சக நாட்டு வீராங்கனையான கிளைஸ்டர்ஸிடம் தோல்வியடைந்தார். இப்போட்டியின் போது இவரது முழங்கையில் காயம் ஏற்பட்டதால் அடுத்து நடந்த தொடர்களிலிருந்து விலகினார்.

இந்நிலையில், அடுத்த 2011 இல் நடக்கவுள்ள ஹொப்மேன் கிண்ண ரெனிஸ் தொடரில் பங்கேற்கவுள்ளார். அத்துடன், ஒலிம்பிக் போட்டியில் மீண்டும் தங்கம் வெல்ல வேண்டும் என்ற ஆசையும் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து ஹெனின் கூறியவை வருமாறு:-

தற்போது முழங்கைக் காயத்திலிருந்து குணமடைந்து வரும் நான், அடுத்த ஆண்டு நடக்கவுள்ள ஹொப்மேன் கிண்ண ரெனிஸ் தொடரில் பங்கேற்கவுள்ளேன்.

இத்தொடர், கிராண்ட்ஸ்லாம் தொடர்களுக்குச் சிறந்த பயிற்சியாக இருக்கும் என நினைக்கிறேன். விம்பிள்டன் தொடரின் இறுதிப் போட்டிக்கு இரண்டு தடவைகள் முன்னேறியபோதும், கிண்ணத்தை வெல்லத் தவறியமை கவலையளிக்கிறது.

அடுத்த ஆண்டு நடக்கவுள்ள விம்பிள்டனில் பட்டம் வென்று சாதிக்கும் பட்சத்தில், 2012இல் நடக்கவுள்ள லண்டன் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்ல அதிக வாய்ப்புள்ளது. ஏனெனில், இரண்டு தொடர்களும் ஒரே இடத்தில் நடப்பது சாதகமான விடயம்.

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் தங்கம் வென்றது எனது வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வு. இதேபோல 2012இல் லண்டனிலும் நடக்கும் என எதிர்பார்க்கிறேன். இதற்காக கடுமையான பயிற்சியில் ஈடுபட்டு வருகிறேன்.

- இவ்வாறு ஹெனின் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி கந்தசாமி



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வீமன்காமம், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்பொழுது ஜேர்மனியில் வசித்து வருபவருமாகிய சின்னத்தம்பி கந்தசாமி நேற்று (24.12.2010) வெள்ளிக் கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம் பிள்ளை - பிள்ளைஅம்மா தம்பதியரின் மருமகனும் இராசாத்தியம்மாவின் அன்புக் கணவரும் அருந்தவச்செல்வியின் அன்புத் தந்தையும் பூபாலசிங்கத்தின் (சிறி) மாமனும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, தங்கம்மா, பார்வதம் மற்றும் பாக்கியம், தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரனும் கீர்த்திகா, கிரிசாந், கஜிதன், கபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐயன்னா வீதி,*
*அம்பனை,*
*சுன்னாகம்.*
*004928711187154*
*(ஜேர்மனி).*

தகவல் :
அ.தவச்செல்வம் (சகலன்),
மகிந்தன், தாரணி.

(107910)

## திருமதி தர்மலிங்கம் சின்னம்மா

சரவணை கிழக்கு



சரவணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சின்னம்மா நேற்றுமுன்தினம் (23.12.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - பொன்னாச்சி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், சின்னத்துரை ஆகியோரின் சகோதரியும் புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, தம்பிப்பிள்ளை, நாகம்மா, ராசம்மா ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான பாலபோசினி, கந்தையா, முத்துலிங்கம் ஆகியோரின் சகலியும் கமலாதேவி, தட்சணாமூர்த்தி (மூர்த்தி), பத்மாவதி, ஜெயதேவி, பேரின்பநாயகி (இன்பம்), மோகனதாஸ் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற செல்வராசா, மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் கடம்பவனநாதன், விஜயபாலன், ஹேமா ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற சாந்தலிங்கம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.12.2010) சனிக்கிழமை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் 2 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 60/5, ரட்ணம் வீதி,*
*கொழும்பு - 13.*
*தொ.பே : 0114587359*

(வி/574078)

தகவல் :
மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## செல்வி விஜிதா சுப்பிரமணியம்



நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி விஜிதா சுப்பிரமணியம் அவர்கள் 23.12.2010 காலமாகி விட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று 24.12.2010 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1032, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
பொ.சுப்பிரமணியம்
(பெரிய பாலு- தந்தை), பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

## தா.சு.பேரின்பநாதன்



*(முன்னாள் தலைவர், யாழ். இந்துக் கல்லூரி லண்டன் பழைய மாணவர் சங்கம்)*

கேசாவில் வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சுப்பிரமணியம் பேரின்பநாதன் லண்டனில் நேற்று (24.12.2010) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நவமணி தம்பதியரின் அன்பு மகனும், திருநெல்வேலி காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் கோமேஸ்வரி (லண்டன்), தம்பதியரின் அன்பு மருமகனும், யோகமலரின் (லண்டன்) அன்புக் கணவரும், நிரூபன் (லண்டன்), Dr. ரூபினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தா.சு. லோகநாதன் (J/P, ஓய்வூதியர், யாழ் மாநகர சபை), திருமதி. கனகேஸ்வரி, ஏகாம்பரநாதன், திருமதி ருக்குமணிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்), திருமதி நாகேஸ்வரி (கனடா), குகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*41, கேசாவில் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

T.P. 021 222 2684,
021 300 7213,
0044 2086590505

(107909)

தகவல்:
குடும்பத்தினர்.

## G.C.E (A/L) - 2011

CHEMISTRY, BIOLOGY BACK - UP வகுப்புக்கள் மீட்டல் மற்றும் புகுமுக (1ST TIME) மாணவருக்கு வீடு வந்து கற்பித்தல்.
அழையுங்கள். வித்யா சுழற்றுங்கள்
0777730838 / (021) 226 4814 (இரவு)

## விற்பனைக்கு

கட்டட கட்டுமானப் பணிகளுக்கு பயன்படுத்தும் நல்ல நிலையில் உள்ள இரும்பு முக்குகள் (Props / G.I Jack), இரும்புக் குழாய்கள் (G.I Pipe) and இரும்புக் கம்பிகள் (Steel) விற்பனைக்கு உண்டு.
Hot line: 0777279205.

## கலந்துரையாடல்

எமது முன்பள்ளிக்கு விண்ணப்பித்த, விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் ஞாயிறு (26.12.2010) அன்று மாலை 4 மணிக்கு நடை பெறவுள்ளது.
மதுரம் கிட்ஸ்
3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கட்டைப்பிராய்.

## காணி விற்பனை

தாவடி தெற்கு பத்தானை வீதியில் 4½ பரப்புடைய ஒரு காணியும் வீட்டுடன் 4½ பரப்புடைய மற்றுமொரு காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0777667136, 0112503415, 0213007003

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA NO-1 புறொயிலர் குஞ்சுகள் 29.12.2010 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
ராஜீவ், நாவலி வீதி, ஆனைக்கோட்டை
T.P. 0776090926, 021 222 2867

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். கூடுதல் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
விஜயகுமார், குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் மெமோறியல் வீதியில் இரண்டு வீடுகள் அல்லது கடைகள் கட்டக் கூடிய புதிய கிணற்றுடன் அமைந்த காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0774638037, 0776077129

## SHAMROCK

ஈச்சமோட்டை, யாழ்.
★ A/L கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளுக்கான
ENGLISH, GIT
A/L-DAY CLASS-2011
B.St. - B.S பசில் B.BA.
ACC. - S.தவா B.Com. (Hons) (Acc.Spl.)
Econ - V.ஞானவேல் B.B.A
அரசியல்
S.S.செந்தூரன் B.A (Hons) (Pol.Sc.Spl.)
புதிய கல்வி ஆண்டு - 2011
★ Gr.1 முதல் O/L வரை
★ ENGLISH MED.6 To 11
★ புலமைப் பரிசில் Gr.5

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 16-09-1928
மறைவு 11-11-2010

அமரர் **கந்தவனம் நடராசா**

கடந்த 11.11.2010 இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக் கிருத்தியக்கிரியைகள் இன்று (25.12.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

*ந.கந்தவனச்செல்வன் (மகன்),*
*58, லோட்டஸ் வீதி,*
*வண்ணார்பண்ணை.*

(107927)

குடும்பத்தினர்.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**வேலாயுதம் பாராளன்**
(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

மலர்வு 08.06.1964
உதிர்வு 05.01.2010
திதி: பஞ்சமி (25.12.2010)



அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் பொக்கிசமாய்
எங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் இருந்து
மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திச் சென்ற எங்கள் அப்பாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டென்ன
ஒரு யுகம் சென்றாலும் உங்கள்
அன்பு உள்ளத்தை மறக்க முடியவில்லை!

உங்கள் பிரிவால் துயருறும்.....
மனைவி, பிள்ளைகள்.

"சிவகிரி", இராஜு வீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

(107898)

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்துரை கண்மணி



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, சிவப்பிரகாசம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கண்மணி (22.12.2010) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐ.சின்னத்துரை (பிரபல வர்த்தகர், ஐ. சின்னத்துரை அன் சன்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், மன்மதராசன் (கோண்டாவில்), சற்குணராசன் (பிரான்ஸ்), வேந்தராசன் (லண்டன்), கிருஷ்ணராசன் (லண்டன்), கோமதி (கொழும்பு), துரைராசன் (பிரான்ஸ்), நகுலராசன் (லண்டன்), சசிகலா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வமலர், பத்மினி, ரட்ணாதேவி, காலஞ்சென்ற பிரேம்குமார் (பொறியியலாளர்) மற்றும் நிசாந்தினி, திருயாழினி, சற்குருநாதன் ஆகியோரின் மாமியாரும், விமல்ராஜ், பிரகாஷ்ராஜ், வேதிகா, தர்சிகா, சாரங்கன், சிந்துயா, சுமதியா, யோகிதா, ஜயந்தா, ரஷிதா, டிலுஷனா, தர்ஷா, யதுர்ஷா ஆகியோரின் பேர்த்தியும். காலஞ்சென்றவர் களான இராசையா, கனகம்மா, கோபாலபிள்ளை மற்றும் அன்னலட்சுமி (செட்டிகுளம்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், சின்னம்மா, சின்னையா, ரட்ணசிங்கம், சிவபாதம், தெய்வானை மற்றும், சேமசுந்தரம், கனகேஸ்வரி, சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26.12.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல. 79, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(107919)

தகவல்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா நமசிவாயம்



(ஓய்வுபெற்ற உதவி அத்தியட்சகர், விஞ்ஞான தொழில்நுட்ப பிரிவு, கைத்தொழில் விஞ்ஞான அலுவல் அமைச்சு)

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும், 83, கம்டன் ஒழுங்கை, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நமசிவாயம் 23.12.2010 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி தாமோதரி பொன்னையா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பிரபல வர்தகர் திரு. திருமதி K.K.கந்தையாபிள் ளை (K.K.K) தம் பதியரின் மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், Dr.தியாகலிங்கம், Dr.சத்தியலிங்கள், Dr.பொன்மலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், வாசுகி, ராஜேந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், அகிலன், ஈசானி, மயிலோன், சுருதி, சுரபி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (27.12.2010) திங்கட்கிழமை மு.ப.9.00 மணியளவில் நடை பெற்று பூதவுடல் மு.ப.10.00 மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.83, கம்டன் லேன்,
வெள்ளவத்தை, கொழும்பு- 06.
T.P: 258 7021

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(107908)

### செல்வி பொன்னம்மா செல்லையா



(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/மத்திய கல்லூரி)

நல்லூர், யமுனா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பொன்னம்மா செல்லையா நேற்று (24.12.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் செல்லையா - சின்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் (அரச பிரதம கணக்காளர்), சரஸ்வதி (ஆசிரியை) மற்றும் கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் இராசலெட்சுமி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.12.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. இரகுமார் [பொதுச் சுகாதாரப் பரிசோதகர்],
மா. சுகுமார் [ஓய்வுபெற்ற ஆசிரியர்]
(பெறாமக்கள்)

124/3, செல்லர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## நத்தார் தின விழா

சங்கானை, டிசெ.25

சித்தன்கேணி ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தின் நத்தார் தினவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலையத்தில் நடைபெறும். நிலையத்தலைவர் சு. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவுக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சங்கீத ஆசிரியர் வணபிதா தேவமித்திரனும், வடபிராந்திய சத்திய சாயி சேவா நிலையங்களின் இணைப்புக்குழுத் தலைவர் ஸ்ரீ ஆர். வசந்தசேனனும் கலந்துகொள்வார்கள். (ற-29)

## 'சாந்திகம்' ஒன்றுகூடல்

வலி.வடக்கு, டிசெ.25

சாந்திகம் உளவள நிலையத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நாளை ஞாயிறு முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும். (ஒ-86)

## வீடு வாடகைக்கு

கந்தர்மடத்தில், நல்ல சூழலில் அமைந்த பெரிய வீடு வாடகைக்கு உண்டு. நான்கு பெரிய அறைகள், இணைந்த குளியலறை, இணைந்த கழிவறைகள் இரண்டு வாகனங்கள் விடக்கூடிய பெரிய போட்டிக்கோ (Portico) ஆகியவற்றை உள்ளடக்கி, சர்வகலாசாலை, இந்து மகளிர்க் கல்லூரி ஆகியவற்றுக்கு அண்மையில் வீடு அமைந்திருக்கிறது.

தரகர்கள் தேவையில்லை.

தொடர்புகள்: 0773265237, 021 222 0430

## தவறிவிட்டது

மண்கும்பான், 4ஆம் வட்டாரம் என்னும் முகவரியுடைய ரவீந்திரன் தினேஸ்வரன் (913323238 V) என்னும் இலக்கமுடைய தே.அ. அட்டை, பாடசாலை அடையாள அட்டை என்பன கறுப்பு நிற பேர்ஸ் உடன் பெருமாள் கோயில் வீதிக்கும் யாழ்ப்பாணத்துக்கு மிடையில் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும்.

சரவணா நகைமாடம்
205/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0750408926, 0776349237.

## விவேகம் - 1

வித்தியாகீர்த்தி சந்திரகுமாரின் புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் விடையுடன் பிரபல புத்தகசாலைகளில் சொற்ப பிரதிகளை விரைவில் வாங்குங்கள்.

மொத்தமாக வினாத்தாள் பெற
0779122918

## கண்ணீர்க் காணிக்கை



செட்டிச் சோலை, அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் எமது கல்லூரி அதிபரின் பாசமிகு தந்தையுமாகிய

**அமரர் பண்டிதர் கனகர் நாகலிங்கம்**

தமிழ் வளர்த்த தந்தையே
அளவெட்டியூர் ஈன்றெடுத்த வேந்தனே!
அழகான தமிழில் அன்பாக வழிநடத்திய ஆசானே
பாசத்தின் பிறப்பிடமாய்ப் பண்பின் இருப்பிடமாய்
கடமையில் கண்ணியமாய் காலத்தின்
கண்ணாடியாய் விளங்கிநீரே!
பல்துறைசார் அறிவுடய பண்டித ஐயா
அரசியலில் ஆழ்ந்த ஞானமும்
ஆத்மீகத்தில் அளவு கடந்த பக்தியும்
வழி நடத்தலில் நல் ஆசானாகவும்
குடும்பத்தில் குல விளக்காகவும்
எல்லோர் இதயத்திலும் இருப்பிடத்தைத் தக்க வைத்தீர்
நும் பிரிவுத் துயரால் துன்புறுகின்றனர்
குவலயத்து மக்கள்

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ அருணோதயாக் கல்லூரி,
அளவெட்டி.
(107926)

## கண்ணீர் அஞ்சலி



எமது தெல்லிப்பழைப் பிரதேச செயலக முன்னாள் பிரதேச செயலர் திரு. வேதநாயகன் அவர்களின் அன்புத் தந்தை

**பண்டிதர் கனகர் நாகலிங்கம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் பிரிவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
கிராம அலுவலர்கள்,
அளவெட்டி.
(சி/574082)

## மரண அறிவித்தல்



### பண்டிதர் க.நாகலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், அருணோதயாக் கல்லூரி)

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதர் க.நாகலிங்கம் நேற்று (24.12.2010) காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், தவராணி, உஷாதேவி (ஆசிரியை, கொக்குவில் இந்துக்கல்லூரி), வேதநாயகன் (அரசாங்க அதிபர், முல்லைத்தீவு), கேதீஸ்வரன் (அதிபர், அருணோதயாக்கல்லூரி), மனோகரி (ஆசிரியை, மகாஜனக்கல்லூரி), திவாகரி, தயாநிதி, Dr.கலாமதி (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.மருத்துவபீடம்), ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமானந்தம் (இயக்குநர், சிகிரி வீவிங் மில்ஸ் லிமிடெட்), புஷ்பராஜா (அதிபர், கோப்பாய் மகாவித்தியாலயம்), பிரதீபா, கலாலோஜினி, முருகமூர்த்தி (ஆசிரியர், மகாஜனக் கல்லூரி), திலககுமார் (கணக்காளர், பொட்ஸ்வானா), பத்மநாதன் (முகாமையாளர், வனிகா மெடிக்கல்ஸ்), Dr.முருகானந்தன் (விரிவுரையாளர்,யாழ்.மருத்துவபீடம்) ஆகியோரின் மாமனாரும், வைஷ்ணவி, சாம்பவி, சௌமியன், துவாரகா, வரஜீவி, கோலமுகி, கௌசிகன், கவுணியன், குந்தவி, தர்ஷனா, கிருஷன், ஹரிகரன், விசாகன், கௌதமன், நிவேதனா, வியாசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் சகோதரரும், காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் மயில்வாகனம், பண்டிதர் இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2010) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு செட்டிச்சோலை அளவெட்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி வடக்கு கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டிச்சோலை,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்
தொ.பே: 021 321 4343, 071 833 4566


## உங்களுக்காக யாழ் மண்ணில் காலடிவைத்துள்ளது

THAS PIZZA PIZZA





கொழும்பில் பணியாற்றிய அனுபவமிக்க சமையல் நிபுணர்களின் கைவண்ணத்தில் தயாரிக்கப்பட்ட உயர்தர உணவு வகைகளான



பீசா (Pizza) புரியாணி (Buriyani)
பிறைறைஸ் (Friedrice) நூடில்ஸ் (Noodles)
டெவில்ஸ் (Devilled's) சூப் வகைகள் (Soups)

போன்றவற்றை உங்கள் வீட்டு வாசலிலேயே பெற எங்களை அழையுங்கள்




தொலைபேசி:
021 222 0456
நேரடி:
077 84 24 015

இல.118, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெரும் எண்ணிக்கையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனதில் வைத்தே இத்திட்டம் முன்வைக்கப்பட்டது, திட்டமிடப்பட்டது. கிழக்கு மற்றும் மத்திய மகாணங்களைச் சேர்ந்த மக்களின் தேவைகளையும் இது ஓரளவு உள்ளடக்குகிறது.

தளநிலைமையைக் கருத்திற்கொண்டு பெரும் எண்ணிக்கையான வீடு களைப் புதிதாக நிர்மாணித்துக் கொடுக்க முடிவு செய்யப்பட்டது. எனினும் தமது வீடுகளைப் புனரமைக்க விரும்பும் குறைந்த எண்ணிக்கையினருக்கும் உதவி வழங்கப்படும்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் நேற்று விடுத்த பத்திரிகை அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் விவரிக்கப்பட்டிருப்பதாவது:-

இடம்பெயர்ந்த மக்களின் தேவையை உணர்ந்து, வீடுகளை இழந்த மக்களுக்கு இந்திய அரசு ஐம்பதினாயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் திட்டத்தை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வருட முற்பகுதியில் இந்தியா சென்றிருந்த வேளை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்திருந்தார்.

அந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளை ஹிஸ்துஸ்தான் பிறிபா(f)ப் (Pre fab) என்ற இந்திய நிறுவனம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் கட்டடப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

முதற்கட்டப் பணிகளின் அனுபவத்தை அடிப்படையாக வைத்து இரண்டாவது கட்டப் பணிகள் விஸ்தரிக்கப்படும். அந்த வேலைகளும் விரைவில் தொடங்கப்படும்.

இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான இருப்பிடங்களைக் கட்டிக்கொடுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் சம்பந்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவுவதும் இந்திய அரசின் விரும்பமாகும். அதன் பொருட்டு நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான பொருள்கள், வேலை, நிபுணத்துவம் என்பன இங்கு கிடைக்கும் பட்சத்தில் அவற்றைப் பயன்படுத்தி அந்த மாவட்டங்களில் வேலைவாய்ப்பை வழங்குவதும் இந்திய அரசின் நோக்கமாகும் என்று - தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 24ஆம் திகதி புதன்கிழமை உதயனின் முதலாம் பக்கத்தில் வெளியான செய்தியில் ஐயாயிரம் வீடுகள் மட்டுமே புதிதாக அமைக்கப்படும் என்றும் ஏனையவை புனரமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கான விளக்கமாக இந்தியத் தூதரகம் விடுத்த பத்திரிகை அறிக்கையைக் கருத இடமுண்டு.

(அ)

## நத்தார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர் தெரிவித்துள்ளார். (ஒ)

## அனைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிட்டு வெளியிட்டுள்ள தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த காலங்களில் இனங்களுக்கு இடையில் சகோதரத்துவத்தை உறுதிப்படுத்த நாம் செய்த அர்ப்பணிப்புகள், 'அயலவர்களிடம் அன்பு செலுத்துதல்' என்ற இயேசு கிறிஸ்து செய்த அர்ப்பணிப்பை முன்னிலைப்படுத்தியே செய்தோம். இலங்கை மக்களை வறுமையினின்று மீட்பதற்காக நாங்கள் மேற்கொண்ட அர்ப்பணிப்புகளும், பாடுகளும் அனைத்து கிறிஸ்தவர்கள் மத்தியிலும் வரவேற்பைப் பெற்றன.

''எனது நாமத்தினாலே குழந்தையை ஏற்றுக் கொள்வேன். என்னை ஏற்றுக் கொண்டது போன்று'' என்று இயேசு கிறிஸ்து போதித்துள்ளார். இயேசு கிறிஸ்து இம் மண்ணுலகிற்கு வந்துதித்த தருணத்தில் இராஜாக்கள் அவரைத் தேடி வருவதற்கு நட்சத்திரம் வழிகாட்டியதாக வரலாறு கூறுகின்றது.

இந்நாளில் மகிழ்வாக நத்தாரைக் கொண்டாடும் வேளை, குழந்தைகளின் மனதிலும் இடம்பிடிக்க வேண்டும். அவ்வாறு நாம் செய்தால், இயேசு கிறிஸ்துவின் கருணை, சமாதானம் என்பவற்றை நாம் பெறமுடியும்.''- இவ்வாறு அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ-சி)

## ஐ.நா.நிபுணர்..

'இன்னர் சிற்றி பிரஸ்' செய்தியாளரின் கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே பர்ஹான் ஹக் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை குறித்த ஐ.நாவின் நிபுணர் குழுவின் செயற்பாடு நல்லிணக்க ஆணைக்குழுவைச் சந்திப்பதுடன் மட்டுமன்றி, அதற்கு அப்பாலும் பல தரப்புகளுடன் இடம்பெறும் என்றும் பர்ஹான் ஹக் கூறினார்.

இலங்கைக்கு நிபுணர் குழு விஜயம் செய்யுமா என்ற கேள்விக்குப் பதில் அளிக்க அவர் மறுத்துவிட்டார்.

ஜனவரி மாதத்தின் பின்பே அது குறித்து அறிவிக்கப்படும் என்றார் ஹக்.

ஐ.நா. நிபுணர் குழு நல்லிணக்க குழுவைச் சந்திக்கும் என்று கடந்த 17ஆம் திகதி ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் அறிவித்திருந்தார்.

ஆனால் அந்த அறிவிப்பில் திகதி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இதேவேளை -

ஐ.நா. நிபுணர் குழு நல்லிணக்க ஆணைக்குழுவை மட்டுமா சந்திக்கும்? போர்க் குற்றத்தில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் ஜெனரல் சரத் பொன்சேகா போன்றவர்களை சந்திக்குமா? என்பது குறித்து கருத்துக் கூற பர்ஹான் ஹக் மறுத்துவிட் டததாக 'இன்னர் சிற்றி பிரஸ்' சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

Diploma Courses... புதிய பிரிவுகள் ஆரம்பம்
*MS Office *Accounting *Graphics 3D *Printing & Typing, Kids Programs
*Web Development *Multimedia *AutoCAD *VB.net, *LINUX, *ICT
International Courses...
Software Engineering - USA, CCNA, BCS
Java(Oracle Campus), Linux, CIMA - UK, Toefl / IELTS
Government Schol.
Rs.800 Upwards
MCS
Supported By UNDP/JRRP
Free ICDL, BCS, Hardware, English
SMS your name & course to 0772 395 895 & get Schol.
324, Palaly Road, Parameswara Junction
Degree Course BIT University of Colombo
Closing Date 26.12.2010

THE COLLEGE OF CHEMISTRY
பௌதீகவியல் - A/L - 2013
ஆரம்பம் : 27.12.2010 திங்கட்கிழமை ஒரு மணி
32, பழம் றோட்,
கந்தர்மடம். N.காபிலன்

Personal class (கணினி)
* Ms Office 2007, Desk top Publishing, Internet and e-mail, Web Design, Graphic Design ஆகிய கற்கை நெறிகள், உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
* பயிற்சியின் பின் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* குறிப்பு:- கணினி இல்லாதவர்களுக்கு எனது Lap top மூலமாக பயிற்சியளிக்கப்படும்.
ஆசிரியர் KRC T.P.:779672038

இறைச்சிக்கோழி விற்பனை
நிறைகூடிய புறொயிலர், கல்போட்ஸ், சேவல் என்பன வேண்டிய நிறையில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும்.
தொடர்பு: மல்றி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி.
T.P : 0217912783

MyWay English ஆங்கில பயிற்சி
ஆரம்பம் : 26.12.2010 சனி, ஞாயிறு 3 மாதம்
ஒருசில இடங்களுக்கே அனுமதி உண்டு
இலக்கண கற்றல், எழுத்துப்பயிற்சி இன்றி ஒரு ஆங்கில சொல்கூட தெரியாதவர்களும் 3 மாதத்தில் ஆங்கிலத்தில் பேச முடியும்
MyWay 077 33 63 456
182, Stanley Rd, Jaffna

CHEMISTRY
Mr.M.A.Nirojan B.Sc. (Hons)
SHAMROCK ACADAMY
ஈச்சமோட்டை
(A/L-2011,2012)
நிறைவான வகுப்புகள் இடம் பெறுகின்றன
BRILLIANT Tuition Center
சுதுமலை அம்மன் கோயில் அருகில்
DAY CLASS ஆரம்பம்
Wed, Fri - 5.15 P.m

PHYSICS
★ மீள்பரீட்சார்த்திகளுக்கு (A/L-2011)
★ சடமும் கதிர்ப்பும்
ஆரம்பம் : 26.12.2010 ஞாயிறு 1.00 - 2.00 (சனி, ஞாயி)
★ வினா - விடை (Paper Class)
ஆரம்பம் : 27.12.2010 திங்கள் 1.30 - 2.30 (திங், புத, வெள்)
A/L - 2011
★ துரித மீட்டல் (DAY CLASS)
பொறியியலில் இருந்து முழுப்பாடத்திட்டமும் கற்பிக்கப்படும்
ஆரம்பம் : 26.12.2010 ஞாயிறு 9.00 - 10.00
★ NEW SCIENCE CENTER
Jaffna Town, (மணிக்கூட்டு வீதி)
(Becon)
திரு.ம.ஸ்பெல்மன் (B.Sc.)

வயல் காணி விற்பனைக்கு
கரடிப்போக்கு, பூநகரி பிரதான வீதியில் 3ஆம் மைல் கல் அருகில் உள்ள பெரிய பரந்தன்காடு என்னும் நெற்பயிர் செய்யும் உறுதியுடன் கூடிய 15 ஏக்கர் வயல் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0774394337
அல்லது 0775212541

IIS ன் இனிய நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 01: 14.01.2011
பிரிவு 02: 23.10.2011
பிரிவு 03: 30.01.2011
பிரிவு 04: 31.01.2011
காலை 10.00 மணி
IIS Computer Courses
Certificate Courses
Office Solution Development
Hardware Technology
Eng.Drawing & AutoCAD
Database Management System
Computerized Accounting
Desktop Publishing
Web Designing
Networking
Multimedia
Java Programming
Visual Programming
Diploma Courses
Software Development
Computer Hardware & Networking Eng.
Business Information System
"IIS உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தின் வழிகாட்டி"
INSTITUTE OF INFORMATICS STUDIES
#100, Clock Tower Road, Jaffna.
T.P.No : 021 222 2831 E.Mail : iis@iis.edu.lk

ஆரம்பமாகிறது
A/L -2013
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
ஜனவரி 01 (சனி) 1.00 மணி
ACA இணுவில்

2013 - A/L கணித, உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம் : 01.01.2011 சனி 3.00 P.m
குறிப்பு : ஜனவரி மாதக் கட்டணம் FREE
NEW EDUCATION WORLD
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி (102920)

THE COLLEGE OF CHEMISTRY
The Specific Centre for Chemistry
2013 A/L
DIAS B.sc (Hons) Spl.in.Chem
தமிழ் மொழி மூலம் ஆரம்பம்
27.12.2010 Mon- 12.00pm
ENGLISH MEDIUM
Commenced on 27.12.2010 Mon- 12.45pm
Parents should accompany for admission
32, Pazham Rd, Kandarmadam.

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs.2000.00
உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
10-01-2011
Batch 9 : 09.00 AM - 01.00 PM
Batch 10 : 01.30 PM - 05.30 PM
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/ 0714299935

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ் Merry Christmas! நத்தார் சிறப்பு மலர் 2010

## கிறிஸ்துவின் பிறப்பு, வறுமை, எளிமை, துயரம் மத்தியில் தான்!




மனிதனை விடுவிக்க, வாழ்வில் ஒளியேற்றிப் புதுப்பிக்க வரலாற்றில் ஆண்டவர் இயேசு பாலகனாகப் பிறந்ததை மீண்டுமொரு முறை நத்தார் தினமாகக் கொண்டாடுகிறோம். கொடிய போரின் சத்தங்கள் ஓய்ந்து அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் தமது இல்லிடங்களுக்கும், கிராமங்களுக்கும் போய்க்கொண்டிருக்கும் இவ்வேளை, இயேசு பாலகனின் பிறப்பு, இவர்களின் எளிமை, துயரம் மத்தியில் தான் நிகழ்ந்தது. உலகில் ஒரு சாரார் எல்லா சுகபோகங்களையும் அனுபவிக்க, பெரும்பாலானோர் வறுமையிலும், வசதியற்ற நிலையிலும் தான் காலத்தைச் செலவிடுகின்றனர். நத்தார் திருவிழா எமது சூழலைச் சிந்திக் வைத்து, அன்பு, பகிர்தல், இரக்கம் போன்ற விழுமியங்களை உறுதியுடன் வாழ அழைக்கிறது. நத்தார் பெருவிழா - குடும்ப விழா- குழந்தைகள் விழா நல்மனம் கொண்ட அனைவரின் விழா.

எனவே ஆண்டவர் இயேசுவின் ஆசிகளை மக்கள் அனைவருக்கும் வழங்கி, என் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

பேரருட்திரு.இ.தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ்.ஆயர்.

## புதிய நம்பிக்கையுடனான எதிர்பார்ப்புடன் கிறிஸ்மஸ்



கிறிஸ்து பிறப்பின் இனிய நாளில் உதயன் வாசகர்களை வாழ்த்துவதில் அகமகிழ்கின்றேன். 2010 ஆம் ஆண்டின் இறுதியில் அனேக சமூக அரசியல் பொருளாதார மாற்றங்களுக்குள் பிரவேசித்திருக்கும் எமது தேசத்திற்கு கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி ஒரு புதிய நம்பிக்கையுடனான எதிர்பார்ப்பைக் கொடுக்க இறைவனை வேண்டுகின்றேன்.

உரோமானிய பலம் பொருந்திய உரோமையர் ஏகாதிபத்திய ஆட்சிக்குள் யூத மத வைராக்கிய அரசியல் சூழ்நிலைக்குள் பெத்லகேம் என்னும் சிற்றூரில் இறைமைந்தன் சிறு பாலகனாக மாட்டுக் குடிலில் பிறந்தார். பலமற்ற பலவீனமான இப் பாலகன் இடம் பெயர்ந்த குடும்ப சூழ்நிலையில் பிறந்து எல்லா மனிதர்க்கும் மகிழ்ச்சி உண்டாக்கும் நற்செய்தியை அறிவித்தார். மாறிவரும் எமது சேதத்தின் அரசியல் சூழ்நிலைகள், பொருளாதார நெருக்கடிகள், எதிர்காலத்தின் கேள்விக் குறிகள் பாகுபாடுகள் பிரிவினைகள் இவற்றின் மத்தியில் கிறிஸ்து பாலகன் தரும் நற்செய்தி வாழ்வதற்கும் மனிதகுலத்தின் நல் விழுமியங்களுக்குமான நற்செய்தி ஓர் புதிய நம்பிக்கையைத் தர இறைவனை வேண்டுகின்றேன்.

இறைவன் தன் ஒரே மைந்தனை எம்முடன் வாழ பகிர்ந்து கொண்ட இன்னாளில் நாமும் பலமிழந்த வலுக்குன்றிய இயலாமையில் வாழும் மக்களிடத்தில் கரிசனையுடன் அன்பைப் பகிர்ந்து கொள்ள முன்வருவதே இச் சிறப்பான தினத்தில் எம் யாபேருக்கும் கொடுக்கப்படும் சிறப்பான அழைப்பாகும்.

கிறிஸ்து பாலகனின் ஆசீர் இன் நன்னாளில் உங்கள் யாவர் மேலும் இருக்கட்டும்.

வண.செ.பி.நேசகுமார்.
யாழ். குரு முதல்வர், இலங்கைத் திருச்சபை.

## தேடி வந்த தெய்வம்

ஒவ்வொரு மனிதனும் தனது ஆன்மீக ஈடேற்றத்திற்காக பல்வேறு வழிகளில் தமது தெய்வத்தை தேடிச் செல்வது இயற்கை.



பக்தி, வழிபாடுகள், ஆலயப் பிரார்த்தனைகள், உண்ணா நோன்புகள், தானம், தருமம், புனித யாத்திரைகள் போன்ற பல்வேறு முயற்சிகளில் மனிதன் இறைவனை தேடிக்கொண்டு இருக்கிறான். மனிதனது நிறை வாழ்விற்கு இறை நம்பிக்கை இன்றியமையாதது. இதனை வளர்த்துக்கொள்ள தேடல் அவசியமாகின்றது.

இன்றைய மனிதனின் அன்றாட வாழ்விற்கு, அவன் எதிர் கொள்ளும் எத்தனையோ சவால்கள், சோதனை, துன்பம், பிரச்சினை இவற்றிலிருந்து எதிர் நீச்சல் போடத் தெய்வத்தைத் தேடுவது பலனாகிறது.

தெய்வத்தைக் தேடிக் கொண்டிருக்கும் பயணம் அன்று முதல் இன்றுவரை தொடர்கதையாகிறது.

மனிதன் இறைவனைத் தேடும் அதே வேளையில் இறைவன் இயேசுவாக, பாலகனாக, மண்ணிலே மனிதனானார். எம்மைத் தேடி வந்தார். மரியின் மடியில், ஏழையின் உருவில், உலகில் உதயமானார்.

மனிதனின் வாழ்வை புனிதப்படுத்த அவன் உருவில், அவன் வழியில், அவனியில் அவதரித்தார். மாட்டுத்தொழுவமும், மேய்ப்பர்களும் அடையாளச் சின்னங்காளக ஆதவனுக்கு அன்று கிடைத்தது.

மனிதனாய் மண்ணிலே மனுவான செய்தியே- நற்செய்தி- கிறிஸ்துவின் பிறப்பின் செய்தி- ''கிறிஸ்மஸ்''.

இனி நாம் அவரை பெரிதாய் தேட தேவையில்லை. ஏழையின் உருவில், தேவையோடிருக்கும் அயலவனில், சமாதானம் செய்யும் கருவிகளாய், உறவுகளை உருவாக்கும் பாலங்களாய், உணர்வுகளை மதிக்கும் மனிதராய், இறைவனை அடையாளம் காண்போம். அங்கே அவரை சந்திப்போம். மனித நேயத்திற்காக எம்மை தயார் செய்வோம். எம்மை அர்ப்பணிப்போம்.

இறைமகன் இயேசு மனிதனாய் பிறந்து, வாழ்ந்து, வழிகாட்டி, மரித்து, மீண்டும் உயிர்த்தார் என்பது வரலாற்று நிகழ்வு.

தேடி வந்த தெய்வம் எம்மோடு, எமக்குள், எம்மவராய், உறவுகளை புதுப்பிக்க, உணர்வுகளை மதித்து வாழ அமைதியின் அரசன் உங்கள் வாழ்வில் பிறக்கட்டும்.

''சமாதானம்- சாந்தி- சத்தியம்'' என்றும் மலரட்டும். இறைமகன் இயேசுவின் இனிய நாமத்தில் எமது நல்லாசிகள்.

அருட்திரு எஸ்.எஸ். ஞானராஜா
மெதடிஸ்த திருச்சபை, யாழ்.சேகரம்.

## குதூகலத்தைப் பகிர்ந்து கொள்ளும் நத்தார்

இயேசு பிரான் பூவுலகத்திற்கு வந்த



குதூகலத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் காலம் நத்தார்.

இன்று பணத்தையும் பதவியையும் நாடி தமிழ்ச் சமுதாயம் அலைகின்றது என்பது தெளிவு. இந்த அவசரத்தில் எமது விழுமியங்களையும் மரபுகளையும் மறந்துவிடலாமா?

இயேசுபிரான் பிறப்பதற்கு அறுநூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்த தீர்க்கதரிசிகள் இயேசு பிரான் எப்படியிருப்பார் என்று மக்களுக்கு எடுத்துக் கூறினார்கள். கி.மு 6 ஆம் நூற்றாண்டு, இஸ்ரவேல் மக்கள் மத்தியில் திகிலும் அந்தகாரமும் பிறநாட்டுப்படையெடுப்புப் பற்றிய பீதியும் நிறைந்த காலமாகும். மக்கள் பிறநாட்டுப் படையெடுப்பால் தமது சமய நம்பிக்கைகளையும், விழுமியங்களையும் இழந்து விடப்போகின்றனர் எனது தீர்க்கதரிசிகள் ஏங்கினர். கி.மு 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஏசாயாவின் தலையாய சிந்தனை புனித மீந்திருப்பு என்பதாகும்.

இஸ்ரவேல் மக்கள் பலர் தமது வழிகளை விட்டு விலகிப்போவார்கள். பிறநாட்டவரின் செல்வாக்கு நன்கு வளர்ச்சியடையும், ஆசாரங்களையும் நம்பிக்கைகளையும் பேணிப் பாதுகாக்கும் ஒரு சிறிய மக்கட் கூட்டம் வாழ்ந்கொண்டேயிருக்கும். இந்தப் புனித மீந்திருப்புத்தான் இஸ்ரவேலரின் பெருமையை மீண்டும் துலங்கச் செய்யும் என்று எசாயா தீர்க்கதரிசி எடுத்துரைத்தார் புனித மீந்திருப்பைச் சேர்ந்த சிமியோனும், அன்னாளும், மற்றைய பக்தர்களும் குழந்தை இயேசுவைக் கையிலேந்தி மகழ்சி ஆரவாரம் செய்தனர்.

''புனித மீந்திருப்பு''

இது தான் இன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் தேவை. நம்பிக்கையோடு நமது கலாசாரத்தையும் விழுமியங்களையும் காத்துக்கொள்வோம். புனிதத்தைக் கட்டிக் காப்பதே நமது தலையாய கடமை. இயேசுபிரான் இந்தப் புனித மீந்திருப்புடனே தான் தனது பணியை ஆரம்பித்தார்.

பேராயர்.எஸ். ஜெபநேசன்
இளைப்பாறிய பேராயர்,
தென்னிந்தியத் திருச்சபை.

# பாலகன் யேசுவின் பிறப்பின் மகிழ்ச்சியை எம் உள்ளங்களில் கொண்டாடுவோம்

ஆண்டு தோறும் கிறிஸ்து பிறப்பு விழா அல்லது கிறிஸ்மஸ் என்றதும் எமக்கு பெரிய மகிழ்ச்சியும், கொண்டாட்டமும் தான். எந்தளவுக்கு எம்மால் கொண்டாட முடியுமோ அந்தளவுக்கு நாம் இந்த விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவோம். வீடுகள் தொடங்கி வர்த்தக நிலையங்கள் வரை கண்கவர் மின் விளக்குகள், சோடனைகள், அலங்காரங்கள், புத்தாடைகள், அன்பளிப்புகள், தேவாலயமெங்கும் புதிய வடிவங்களில் பாலன் கொட்டில்கள், கிறிஸ்மஸ் மரங்கள் என எமது ஆயத்தங்களும், ஆரவாரங்களும் அப்பப்பா.... சொல்லவும் வேண்டுமோ?....

இவ்வாறு ஒவ்வொரு வருடமும் ஆலயங்களிலும், வீடுகளிலும் உள்ள பாலன் கொட்டில்களை மட்டுமே அலங்கரித்து அங்கே யேசு பாலன் பிறப்பை கொண்டாட ஆயத்தப்படுத்தும் நாம் ஒருமுறை யாவது எம் உள்ளங்களில் பாலன் பிறப்பை கொண்டாட ஆயத்தம் செய்திருக்கிறோமா?.. உண்மையிலேயே யேசு விரும்புவது எமது உள்ளங்களைத் தான் என்பதை ஏன் நாம் இன்னும் உணராமல் இருக்கின்றோம்? ஏனெனில், கிறிஸ்து பிறப்பு விழா திருச்சபைக்கு மட்டுமல்ல ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அது விழா, உள்ளத்தில் கொண்டாடி மகிழ வேண்டிய உன்னதமான ஒரு பெருவிழா. இவ்வளவு காலமும் ஆலயங்களையும், வீடுகளையும் அலங்கரித்ததுபோதும், இந்த முறை உள்ளங்களை அலங்கரிப்போம். அங்கே யேசு பாலனை பிறக்கச் செய்வோம். நத்தாரின் மகிழ்ச்சியை உள்ளங்களில் கொண்டாடுவோம். அப்போது தான் கிறிஸ்து பிறப்பு விழாவுக்கும் ஒரு அர்த்தம் கிடைக்கும்.

உள்ளங்களை அலங்கரிப்பது என்று கூறும் போது நமக்கு யோசனை வரும், உள்ளத்தில் எப்படி பட் டாசு கொளுத்துவது?... எங்கே பலூன் கட்டுவது?..எந்தப் பக் கம் பாலன் குடில் அமைப்பது?... என்று ஆம், எம்மில் பலர் தமக்கு திருமணமாகி குழந்தை கிடைக்க இருக்கும் நேரங்களில் நிறைய நேர்த்திகள் வைப்பார்கள். இந்தக் குழந்தை நல்லபடியாக பிறந்தால் இனி நான் மதுவை தொடமாட்டேன், சிகரட் பிடிக்க மாட்டேன், பொய் சொல்ல மாட்டேன், களவெடுக்க மாட்டேன், தினமும் குடும்பச் செபமாலை செபிப்பேன். வெள்ளிக்கிழமைகளில் மாமிசம் சாப்பிடமாட்டேன்... இப்படி ஏராளம். எமது [illegible] ஒரு புதிய உ[illegible]



கரவை தர்ஷிக்கா

செய்வோமானால், அகிலத்திற் குள்வரும் ஆண்டவன் யேசுவுக்காய் நாம் எவ்வளவு செய்யவேண்டும்-... யேசு எமக்காக பிறந்தவர், எம்மை பாவ அடிமைத்தனங்களிலிருந்து மீட்கப் பிறந்தவர் இன்னும் சிறப்பாக சொல்வோமேயானால், நாம் வாழ தன் வாழ்வை அர்ப்பணிக்கப் பிறந்தவர். அவ்வாறானால் நாம் எந்தள வுக்கு எம் உள்ளங்களை ஆயத்தப்படுத்த வேண்டும் என்று சிந்திக்கவேண்டும்.

இன்று, உலகில் எல்லாமே மிகவேகமாக நவீனமாயமாகிக் கொண்டிருக்கும் இந்தக் காலப்பகுதியில் வாழும் நாமும் அந்த இயந்திர மயமான சூழலுக்கு ஏற்ப மாறி அதற்குள் எம்மைப் பழக்கப்படுத்திக் கொள்கின்றோம். இது காலத்தின் கட்டாயம் தான், இருந்தாலும் அங்கே மனித நேயங்கள் மறக்கப்படுவதுதான் வேதனைக்குரியது.

(V ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் Merry Christmas! நத்தார் சிறப்பு மலர் 2010

# துன்புறும் மக்களுக்கு ஆறுதல் ஆண்டவர் இயேசு!



இறைதந்தையின் திட்டத்தினாலும், இறைவாக்கினரின் முன்னறிவிப்பினாலும் மெசியா பற்றிய ஆழமான நம்பிக்கை இஸ்ராயேல் மக்கள் மத்தியில் வலுவாகப் பேசப்பட்டது. காலத்துக்கு காலம் பல்வேறு நாடுகளின் அடிமைத்தனங்களாலும், துன்புறுத்தல்களாலும் தங்களையே இழந்து, மாற்றானின் வழிசெல்ல நிர்ப்பந்திக்கப்பட்ட மக்கள், இறைவன் தங்களை மீட்டு விடுதலை வாழ்வை மீண்டும் தருவார் என்ற நம்பிக்கையை கைவிடவில்லை. மெசியா பற்றிய அவர்களது எதிர்பார்ப்பு வேறு கோணத்தில் இருக்க மெசியாவாகிய இயேசுவின் பிறப்பு வேறு கோணத்தில் அமைந்தது. இந்த உலகத்தில் தனது பெற்றோரை தேர்ந்தெடுக்கும் உரிமை எந்தவொரு மனிதனுக்கும் இல்லை. ஆனால் கடவுள் தன் மகனுக்கான மண்ணகப் பெற்றோரைத் தேர்ந்தெடுக்கிறார். அக்காலத்தில் அதிகார வர்க்கத்தினரும், சமூகத்தில் அந்தஸ்து மிக்க பெரியவர்களும் இருந்த போதிலும், இறைவன் ஏழைப்பெற்றோர்களையே தெரிந்தெடுக்கிறார். மெசியாவை அரசனாகவும், பெரிய வீரனாகவும் எதிர் பார்த்த இஸ்ராயேல் மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக ஆனால் திருச்சட்டத்திற்கும், இறைவாக்கினரின் முன்னறிவிப்புக்கும் உட்பட்டதாக தாவீதின் ஊராகிய பெத்தலகேமில் இயேசு ஏழையாக பிறந்தார்.

ஆனால் உலகம் அவரின் ஏழ்மையை உணர்ந்ததா? அவரது பிறப்பின் அர்த்தத்தைதானும் அறிந்ததா? ஏன் இறைவன் மனிதனானார் என புரிந்ததா? ஏன் இறைவன் மனிதனானார் என புரிந்து கொண்டதா?... உலகம் இயேசுவின் போதனையை ஒதுக்கியது. தன்னுடைய மாயை நாடகத்தை ஆரம்பித்தது. அவரது போதனைகளை தூக்கி எறிந்தது.பேதமையால் அழிவை நோக்கி நகர்ந்தது. விளைவு..?

இன்றைய சமுதாயத்தை ஆழமாக ஊடுருவி நோக்கும்போது ஒரு மாபெரும் உண்மையை நாம் உணர முடியும். யாதெனில் ஒரு புறம் மக்கள் வாழ்வுக்காக ஏங்குகின்றனர். வாழ்வை முழுமையாகப் பெறுவதற்காகப் போராடுகின்றனர். மறுபுறம் மனிதர் அழிவை நோக்கிப் பயணமாகின்றனர். வாழ்வுக்கும், எழிச்சிக்கும் வீழ்ச்சிக்கும் இடையே மனித சமுதாயம் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. உலகத் தொடக்கத்திலே மனிதனோடு கூடிப் பிறந்தவன் முறை மனித வரலாற்றில் தொடர்ந்து அவனைக் காயப்படுத்திச் செல்வது வரலாறு தரும் பாடம் மட்டுமல்ல இன்றைய யதார்த்த உலகிலும் நாம் அனுபவிப்பது வெளிப்படையுண்மை. மனித மாண்பை சிதைத்து, மனித உரிமையை நசுக்கும் எல்லா செயற்பாடுகளும் வன்முறையின் வெளிப்பாடுகளே. அகதி வாழ்வு, காரணமின்றிய சிறைவைப்பு, உரிமைகள் மறுக்கப் படல், பாலியல் துஷ்பிரயோகம், சீதனக் கொடுமைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், முதியோர் புறக்கணிப்பு, வறுமை, வேலையில்லாமை, சமூக சீர்கேடுகள், கலாச்சார அழிவுகள், ஆன்மீக வரட்சி என்பன தான் வன்முறை மனிதனுக்கு அளித்த வெகுமதிகள்.

இன்றைய உலகில் துன்புறும் ஏழைகளுக்கு ஆறுதல் நம் ஆண்டவர். இயேசுக் கிறிஸ்துவே. 'ஏழைகளே நீங்கள். பேறுபெற்றோர் ஏனெனில் இறையாட்சி உங்களுக்குரியதே' (லூக் 6:20) இந்த உலகத்திலே எங்களை ஏற்றுக்கொள்ள யாருமில்லையே, என்று வேதனையோடும் எல்லாவற்றையும் இழந்து வறுமையில் வாழும் எம்மக்களுக்கு ஆறுதல் தருவது இயேசுவின் ஏழைக் கோலம்தான். இன்று வாழ்வுக்காக போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு, இயேசுவின் பிறப்புச் செய்தி ஒரு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கும் என்றால் மிகையாகாது. இந்த ஏழைகளை தன்னுள் உள்வாங்க, தன் அன்பை அவர்களுக்கு கொடுத்து அவர்களை ஆறுதல்படுத்த அவர் மீண்டும் பிறப்பது துன்புறும் எம் மக்களின் தற்கால இல்லக்குடிசைகளிலும் உள்ளக் குடிசைகளிலுமே.

கிறிஸ்து பிறப்பு விழா கடவுளின் பேரன்பை எமக்கு வெளிப்படுத்தும் ஒரு மகத்தான பெருவிழா. ஆகவே இயேசு துன்புறும் எங்கள் உள்ளக் குடிசையில் வந்து பிறக்க எங்களை தயார் செய்து அமைதியின் தேவனை எங்களில் ஏற்று உலகில் அமைதியை காண புறப்படுவோம்.

அருட் சகோ. றமேஸ்.(அ.ம.தி.)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் நத்தார் சிறப்பு மலர் 2010



செ.மேரி பற்றிமா,
புனித யாகப்பர் பங்கு, குருநகர்.

# இயேசுவின் பிறப்புத் தரும் செய்தி என்ன?

அன்று யேசு மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார். இன்று என்னில் எனது வாழ்வில் பிறக்க வேண்டும். அதைத் தான் கிறிஸ்து பிறப்பு விழா என்னிடம் கேட்கிறது. ''புனிதம் ஒன்று மனிதம் ஆனது கடவுளின் மகன் யேசு காலத்திற்கு உட்பட்டவராக தம்மை அளிக்கிறார். யேசு என்ற மனிதத்தன்மை நமக்குக் கூறுவது என்ன? நான் உன்னுடைய வாழ்வில் பிறக்க வேண்டும். எளிமையான குடிசையில் நீ தான். ஒளிமிக்க பிரகாசம் உன்னில் வீசவேண்டும். இந்த உலகில் நீ எனக்கு உயிர் உள்ள சாட்சியாக வாழ உன்னைப் பிறப்பித்துள்ளேன். இது தான் எனது பிறந்த நாளில் நான் உனக்குத் தரும் செய்தி. நல்லதை நினை, நல்லதைச் செய், நல்லதைப் பேசு, நல்லதைப்பார்

என்னுடைய பிறப்பானது உன்னை மீட்புப் பணிக்கு அழைக்கிறது.

நமது குடும்பவாழ்வு இறைவனை சந்திக்கும் கொண்டாட்டம். எங்கே இருவர் மூவர் ஒன்றாக இருக்கிறார்களோ அங்கே யான் இருப்பேன்'' கிறிஸ்துவின் பிறப்பு எமது குடும்பவாழ்வில் எதைக் கேட்கின்றது. நீங்கள் இருக்கும் நிலையில் நிறைவாக இருங்கள். எனது பிறப்பு வெறுமையான பகட்டற்ற நிலையைக் காட்டவில்லையா? கடவுளாக இருந்த நான் இந்த வெறுமையான வாழ்வைத் தெரிந்தேன். எனது தந்தையின் திட்டம் எனது வாழ்வு.

எனது பிறப்பு இன்று உங்கள் வாழ்வில் எதைக் கேட்கிறது. அன்பிய குடும்பங்களாக அன்பில் வாழும் அனுபவிக்கும், அமைதியின் இல்லங்களாக மாற வேண்டும். கணவன் மனைவி உறவு, பெற்றோர் பிள்ளைகள் உறவு வாழப்பட வேண்டும்.

இதுதான் கிறிஸ்து பிறந்த நாள் செய்தி. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறாயா? சற்று கண்களை ஏறெடுத்துப் பார்த்து, நமது சமுதாயத்தை நோக்குவோம். கிறிஸ்துவின் பிறப்பை ஒட்டி பல விதமான செயல்பாடுகள் கிறிஸ்மஸ் ஆரவாரங்கள் ஏழைகள் இல்லாமையில் கண்ணீர் கலந்த பெருமூச்சு இருப்பதற்கு இல்லிடமில்லை என்ற கூக்குரல் கேட்கிறதா? வயோதிப தாய் தந்தையர்கள் கைவிடப்பட்டு அனாதைகளாய் திரிகின்றனர். எம் கண்களில் தெரிகின்றதா? நமது சமுதாயத்தில் சமத்துவம், சகோதரத்துவம் நிலவுகிறதா? வாழப்படுகிறதா? பகிரதல் எங்கே? ஏழைகளை அன்பு செய் ஏழையின் சிரிப்பில் யேசுவைக் கண்டுகொள்.

சமுதாயத்தில் வாசனை வீசும் மலராக மற்றவர்களுக்கு உதவும் கரமாக உன்னிடம் உள்ளதை பகிர்ந்து கொடுக்கும் தாராள மனிதனாக மற்றவர்களின் துன்பங்களில் கலந்து கொள்ளும் கருணை உள்ளம் கொண்டவனாக இருக்க கேட்கிறது இந்த விழா. இதுதான் யேசுவின் பிறப்பை கொண்டாட இருக்கும் நமக்கு யேசு தரும் செய்தி.




அன்பர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்

திருமண கோட் சூட் வகைகள்,புதிய மொடல் ஜீன்ஸ் வகைகள், சேட், ரீசேட் வகைகள், சேட்டிங், சூட்டிங், தொப்பி, பெலிற், பேர்ஸ் வகைகள் மற்றும் புதிய மொடல் கோட் வகைகளும் தலைப்பாகை வகைகளையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் தலைப்பாகை கோட் சூட்களையும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

Juki, Hara, Over Lock Machines மெசின், மெசின் உதிரிப்பாகங்கள், தையல் உபகரணங்கள், நூல் வகைகள் அனைத்தையும் கொழும்பு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



சிற்றிசன்
போய்ஸ் செலக்சன் &ரெயிலறிங்
இல.01, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை: இல.302, பலாலி வீதி,
ஆலடிச் சந்தி, திருநெல்வேலி.
தொ.பே: 0776143301




அன்பர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்

விசேட விலையில் சர்வதேச நாடுகளுக்கான
விமான பயணச்
சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள

மேலதிகத் தொடர்புக்கு:
Metro Travels & Tours (Pvt) Ltd.
62/33, Stanley Link Road, Jaffna.
Tel: 021 5673555 / 021 5673666 Fax: 0212220404
e-mail : info@metrotravels.lk

Midea Electro Mart
LG Authorized Dealer For Abans Ltd.

அன்பர்கள், நண்பர்கள்
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் நத்தார்
புதுவருட வாழ்த்துக்கள்


| COMPACQ CQ3014 DESKTOP.PC | |
|---|---|
| PROCESSOR | Intel gore 2 Due 2.8Ghz E7400 |
| MEMORY | 2GB DDR2 |
| HARD DISK | 310GB 30Gb/s Hard Disk |
| DISK DRIVE | DVD Writer |
| MONITOR | 19" L.G.LCD |
| UPS | Toyostar. 650 VA |
| SPEAKER | 900W |
| MOUSE | Compacq |
| KEYBOARD | Compacq |
| | 75,900 |

D.Link Router 7900
Logitech webcam 2490
PRINTER
HP 1005 Laserjet - 16500
HP deskjet 3920 - 6500
SCANNER
CANON LIDE 100 - 6900
HP G2410 - 9900

| LAPTOPS | COMPACQ 420 | PROLING MINI |
|---|---|---|
| PROCESSOR | Intel Core 2 Duo 2.2Ghz E7400 | Atom Intel 1.6Ghz |
| MEMORY | 2GB DDR2 | IGB |
| HARD DISK | 500GB HDD | 160GB |
| DISK DRIVE | DVD Writer | Nill |
| CAMERA | Web Camera | WebCamera |
| MONITOR | 14.6' | 9" |
| OTHERS | WIFI Blue Tooth | WIFI Blue Tooth |
| | 72,900 | 46,900 |

| PERSONAL PC SYSTEM | INTEL ATOMPC SYSTEM | INTEL DUAI CORE PC SYSTEM | INTEL CORE 2 DUO PC SYSTEM |
|---|---|---|---|
| PROCESSOR | Intel Atom 1.6 GHZ | Intel Dual core 2.7 GHZ | Intel core 2 Duo 2.93 GHZ |
| MOTHER BOARD | Intel 945 GNL Main Board | Intel Chipset G31 Main Board | Intel Chipset G31 Main Board |
| MEMORY | IGB DDR - II, 800MHZ | IGB DDR - II, 800MHZ | IGB DDR - II, 800MHZ |
| HARD DISK | 250GB SATA - 7200RPM | 250GB SATA - 7200RPM | 250GB SATA - 7200RPM |
| DISK DRIVE | LG DVD Writer | LG DVD Writer | LG DVD Writer |
| CASING | ATX 500W Ccivo | ATX 500W Ccivo | ATX 500W Ccivo |
| MONITOR | 16" LCD AOC 40,900 | 16"LG LCD 45,900 | 19" LG LCD 54,900 |
| KEYBOARD | Multimedia ps/2 | Multimedia ps/2 | Multimedia ps/2 |
| MOUSE | Optical USB/Ps2 | Optical USB/Ps2 | Optical USB/ps2 |
| SPEAKER | Genius Multimedia 900W | Genius Multimedia 900W | Genius Multimedia 900W |
| UPS | Toyostar 650 VA | Toyostar 650 VA | Toyostar 650 VA |

Abans உத்தரவாதத்துடன் இலவச விநியோகத்தைப் பெற்றிடலாம்.
* Computers - Three Years Warranty
* Fridge and washing machine - Five Years Warranty
No: 1-I, 1-H, STANLEY ROAD, JAFFNA, SRILANKA.
TEL: 021 222 4566, FAX: 021 222 1646,
E.mail: midea21@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் சிறப்பு மலர் 2010

## மீண்டும் ஏன் பிறந்திட்டாய்! மீட்சியைக் காட்டிடவா!!

ஆண்டுகள் ஓடி மறைந்திட
ஆதவன் ஒளி நிறைந்திட
ஆடுகளாய் அலையும் மாந்தர்க்கு
ஆயனாக உதித்தீரோ இயேசு பாலா
ஆட்சியின் அன்னனாய் பிறந்தீரோ!

அன்னைமரி கருவினில் அவதரித்து
அன்பின் வார்த்தைக்கு இலக்கணமாகி
உண்மையை வாழ்வில் உரிமையாக்கி
உத்தமனாய் உதித்தீரோ இயேசுபாலா
உலகோரும் உண்மையில் வாழ்ந்திடாரோ!

உறவிழந்து உயிரிழந்து அலறுகின்றோம்
உடைபட்ட உறுப்புடனே உலவுகின்றோம்
உறைவிடங்கள் இன்றியே உறங்குகின்றோம்
உண்டிட உணவின்றி கலங்குகின்றோம்
ஊமூட்டும் வார்த்தையாய் வந்திடாயோ!

களவு பொய் காமம் கொலை மலிகிறதே
காரிருள் கலாசாரம் தலை விரித்தாடுகிறதே
கறைபடிந்த உள்ளங்களில் கருணையின் நிலை
கடுகளவேனும் கனிந்திடச் செய்திடாயோ
கடவுளின் மகனே கரத்தினை நீட்டிடாயோ!

போரின் அலறல்கள் ஓய்ந்திட்ட போதும்
பாரீர் அமைதி இன்னும் அகத்தினில் இல்லை
பேச்சுக்களிலே நிரந்தர முடிவுமில்லை
வீச்சுமிக்க வார்த்தைகள் தான் சொந்தமோ எம்மவர்க்கு
வியத்தகு ஆலோசகனாய் விரைந்திடாயோ!

விடிவிழந்து, விடிழந்து வாழ்வோர்க்கும்
விடுதலைப் பட்டியலில் பெயரிழந்தோர்க்கும்
முடிவின்றித் தொடரும் முகாம் வாழ்விற்கும்
படியேறித் தவிக்கும் பரிதாப நிலைக்கும்
விடிவெள்ளியாய் விண்ணவனே வந்திடாயோ!

அந்தரிக்கும் உள்ளங்கள் ஆறுதல் பெற்றிட
அகிலத்தில் அடக்குமுறைகள் அறவே அழிந்திட
ஆட்சியின் கரங்களில் நீதி துலங்கிட
கட்சி பேதங்கள் கருவினிலே ஒழிந்திட
மீட்சியின் வேந்தனாய் மீண்டும் பிறந்திடாயோ!
'மாட்சிமிகு அமைதியில்
மலரட்டும் கிறிஸ்மஸ்'

திராட்சையூர்,
இ.கொமில்ரன்.'

## வந்துதித்தார் பாலனே!

மார்கழி மாதத்திலே
மாட்டுத் தொழுவத்திலே
கார்குளிர் காலையிலே
காத்திடக் கத்தர்வந்தார்!

அன்னை - மரியாள் அணைத்திருக்க
அன்பாய்த்தாதை அருகிருக்க
வாணதூதர் வாழ்த்திசைக்க
வந்துதித்தார் பாலனே!

பாலனாய் வந்துதித்து
பாவங்களைத் தீர்த்து
சீலராய்ச் சிந்தையள்ளும்
சீர்த்திதமைக் கொள்வோம்!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்.

## அருள்தனைத் தாராயோ


குடிலினில் அவதரித்த
குழந்தையே கோமகனே-இக்
குவலயத்து மக்களெல்லாம்
அன்புறவு கொண்டாடவும்
பண்போடு பகிர்ந்திடவும்
ஆசி தனைத்தாராயோ
ஏழ்மை கொண்டிங்கு
வந்துதித்து சூசை மகனே
உலகமது உயர்வு பெற
உன் அருதனைத் தாராயோ
தடைகள் அனைத்தும் அகன்று
ஆனந்தமாய் வாழ்வதற்கு
அருள் மாரி பொழிவாயோ

ச.பகீரதன்
4 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.


கர்த்தரே தெய்வம்
துன்பங்கள் நீங்கி இன்பமாக வாழ எமது
இனிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்

மேசியா
நகை மாடம்
தங்க நகை வியாபாரம்

237, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8460



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார்-புதுவருட வாழ்த்துக்கள்

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
Jaffna Electricals இன்
விசேட விலைக்கழிவு
10% முதல் 40%
21.12.2010 முதல் 31.12.2010 வரை

Merry Christmas! from TaintedSong.com

* Mixer Grinders
* Iron
* Toaster
* Electric Kettle
* Oven
* Charger Light
* Egg beater
* Rice Cooker
* Gas Cooker
* Water filter
* Flask
* Double hot plate
* Table fan
* Stand fan
* Industrial Pedastal fan
* Industrial Wall fan
* Orbit fan
* Ceiling fan
* Air cooler
* Water dispensar
* Ironing board
* Chandiliers
* Wall Lamps
* Exhaust fan
* Single hot plate

அனைத்துப் பொருள்களும் ஒரு வருடகால உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

Jaffna Electricals
No.94 (6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax/ Tel: 021 222 4302


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் Merry Christmas! நத்தார் சிறப்பு மலர் 2010

# பாலகன் யேசுவின்......

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் இற்றைக்கு இரண்டாயிரமாண்டுகளுக்கு முன் யேசு பிறந்த சூழலையும் இன்று நாம் வாழும் இன்றய சூழலையும் ஒப்பிட்டு பார்ப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும். அன்று ஆண்டவன் யேசுவை பெற்றேடுக்க அன்னை மரியாள் எவ்வளவு கஷ்டப்பட்டாள். ஆனால், அத்தனை கஷ்டங்களையும் நல்ல மனதுடன் ஏற்றுக் குழந்தையை நல்லவிதமாக பெற்றெடுத்தாள். கருவை கலைக்க நினைக்கவில்லை. பெற்ற பின்னர் வீதியில் எறிந்து விடவும் நினைக்கவில்லை, அல்லது நாலு காசுக்கு ஆசைப்பட்டு விலை பேசவுமில்லை. ஆனால் அந்தத் தாய்மையின் புனிதம் எத்தனை பெண்களால் மாசுபடுத்தப்படுகின்றது. திருமணத்திற்கு முன்னரான தகாத உறவுகளால் கருவுற்று அவமானத்தை மறைக்க கருவழிப்புச் செய்பவர்களும், ஏன், திருமணமான பின்பும் எமக்கு இரண்டு பிள்ளைகள் போதும் என்று உருவான கருவை அழிப்பவர்களும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமாயிருக்கின்றனர். அன்று, புனித சூசையப்பர் மரியாளுடன் தான் கூடி வாழ முன்னரே அவள் கருவுற்றிருப்பதை அறிந்தும் அவளை தன் மனைவியாக ஏற்றுக்கொண்டார். ஆனால் இன்று எமது கணவர்மார் சந்தேகம் என்ற போர்வையில் எத்தனை பெண்களின் வாழ்வை சாகடித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆண்டவன் முன் இன்பத்திலும், துன்பத்திலும் இணைபிரியாதிருப்போம் என்று வாக்களித்தவர்கள் ஆண்டொன்று போகு முன்னே மனைவியை அடித்து விரட்டுகின்றனர். அன்று, மரியாளும் சூசையப்பரும் யேசுவுக்கு கற்றுக் கொடுத்ததெல்லாம் அன்பு மட்டுமே. ஆனால் நாம் இன்று எமது பிள்ளைகளுக்கு எதை சொல்லிக் கொடுக்கின்றோம்?.. யார் பெரியவர் யார் சிறியவர் என்று தெரியாது, யார் மேல் ஜாதி, யார் கீழ் ஜாதி, யார் நல்லவர், யார் கெட்டவர் என்ற பிளவுகள் அவர்களுக்கு தெரியாது. கள்ளங்கபடமற்ற அந்த பிஞ்சு உள்ளங்களில் நஞ்சை விதைக்கின்றோம். அன்று, யேசு தனது பெற்றோருக்கு கீழ்ப்படிவுள்ள பிள்ளையாக வாழ்ந்தார். ஆனால், இன்று நமது பிள்ளைகளில் பலர் பெற்றோரை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை.இன்று தமது முதுமையில் ஆதரவின்றி, அன்பின்றி அல்லலுறும் பெற்றோர்கள் எத்தனை பேரை நாம் காண்கின்றோம்? ஒரு தாய் தான் எத்தனை பிள்ளைகளைப் பெற்றாலும் எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் அவர்களை அல்லும் பகலும் கண்ணின் மணி போல் காத்து வளர்த்தெடுப்பாள். ஆனால், அத்தனை பிள்ளைகளும் சேர்ந்து அந்தத் தாயைப் பார்க்க முடியாமல் இருப்பது கொடுமையிலும் கொடுமை.

இவற்றையெல்லாம் மனதில் கொண்டு இம்முறை கிறிஸ்மஸ் விழாவை அர்த்தமுள்ளதாக்க, எமது உள்ளங்களில் யேசு பிறக்க அங்கே உண்மையான மன மாற்றத்தை ஏற்படுத்துவோம். அங்கே அன்பு, அமைதி என்ற கண்கவர் மின் விளக்குகளை ஒளிரச் செய்து, நீதி, நேர்மை என்ற சோடனைகளை போட்டு, பாசம், பரிவு, பொறுமை என்ற அணிகலன்களை அணிந்து ஒற்றுமை, விட்டுக்கொடுப்புகளை புத்தாடைகளாக தரித்து, மன்னிப்பை அன்பளிப்புகளாக அளித்து, தேவாலயமெங்கும் சமத்துவம், சகோதரத்துவம் என்ற புதிய வடிவங்களில் பாலன் கொட்டில்கள் அமைத்து,பகிர்தல் என்ற கிறிஸ்மஸ் மரங்களை நாட்டி பாலகன் யேசுவின் பிறப்பு விழாவில் பெருமகிழ்ச்சியை எம் உள்ளம் எனும் கொட்டிலில் கொண்டாடுவோம்.

(நன்றி: பாதுகாவலன்)

துன்பங்கள் நீங்கி புத்தொளி வீச எமது
நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
கபிலா பாதணியகம்
13, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
கபிலா காலணியகம்
24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கொழும்பு விலையைவிட குறைவான விலையில்..
DSI, BATA பாடசாலை மாணவர்களுக்கான பாத அணிகள் பெற்றுக்கொள்ளலாம்

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
ஒளிர் நகைமாடம்
எம்மிடம் 22 கரட் நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
இல.204, பங்ஷால் வீதி, சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார்-புதுவருட வாழ்த்துக்கள்
அசல் 22 கரட் நிரம்பிய நவீன வண்ணங்கொண்ட தங்க நகைகளை உ...
...ண்ணம் போல் தெரிவுசெய்து நீங்கள் விரும்பும் தினத்தில் உங்களுக்கு தருபவர்கள்
நிஷானந்தா ஜுவல்லறி
இல.6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 2227935

அன்பர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
யாழ்.நகரில் அனைத்து ரக ஜவுளிகள், றெடிமேட் ஆடைகள், திருமண முகூர்த்தப்
பட்டுப்புடைவைகள், பான்ஸி வகைகள், பேபி நீட்ஸ் அனைத்துத் தெரிவுகளையும்
ஓர் இடத்தில் தெரிவு செய்திடச் சிறந்த தெரிவுகளின் சாம்ராஜ்யம்.
தரமும் விலையும் எங்கள் பாரம்பரியம்
G.S.லிங்கநாதன் அன் கோ
13, 14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். 51, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 8107, 021 222 3139

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
நத்தார்- புதுவருட வாழ்த்துக்கள்
பண்டிகைக்கால அதிர்ஷ்டம்
15.12.2010 இல் இருந்து 14.04.2011 வரை
ரூபா ஆறாயிரத்துக்கு (6000/-) மேல் தங்க
நகைகளைக் கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளரில் 15.04.2011 ஆம்
திகதியன்று குலுக்கல் முறையில்
தெரிவுசெய்யப்படும்
அதிர்ஷ்டசாலிகளுக்கு..
முதலாவது பரிசு T.V.
இரண்டாவது பரிசு துவிச்சக்கரவண்டி
மூன்றாவது பரிசு C.D. பிளேயர்
என்பன பரிசாக வழங்கப்படும் என்பதை
எமது நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,
அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
சிறி சிவாஞ்சனா நகையகம்
இல.149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 8287

அன்பர்கள், நண்பர்கள்
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
Merry Christmas!
எந்நாளும் எப்போதும் எந்நேரமும்
எழிலும் உறுதியும் நிறைந்த
தளபாடங்களுக்கு இன்றே விரையுங்கள்
திரேசா
தளபாட மாளிகை
137, 139, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0212227941

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் Merry Christmas! நத்தார் சிறப்பு மலர் 2010

# நல்மனம் கொண்டோருக்கு அமைதியின் ஒளி பிரகாசிக்கும்



மா டடைக் குடியில் மனுமகன் பிறந்த செய்தி கொண்டாடி மகிழ்கிறது. வாழ்த்துக்கள் வழிபாடுகள், விருந்துகள், விழாக்கள் என இன,மொழி, சாதி, சமய, நிலை கடந்து இருளகற்ற ஒளி பிறந்த நன்நாளைக் கொண்டாடும் பொன்நாள் தத்தார் விழாவானது.

வயல்காக்கும் இடையர்களுக்கு வானதுதர் கூறிய வார்த்தை " அஞ்சாதீர், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சி யூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்" தீவனத் தொட்டியில் கண்ட பாலனின் பிறப்பை பாருக்கு தெரிவித்தவர்கள் சாதாரண பாமர மக்கள்தான் பொய்மை பல தோன்றமறையும் உண்மை இன்றும் உரத்து பேசப்படுகிறது நிலைத்து நிற்கிறது.

மரியின் மடியில் மாபரன் இயேசு பிறப்பின் செய்தியை எதிர்கொள்வோம் பலவிதம் ஏதோது அரசன் அறிந்தான் திகைத்தான் திகில் கொண்டான். தன் அரசுக்கு அழிவு ஏற் படுமோ என அஞ்சினான். தேடினான் பாலகர்களை கொலை செய்து வஞ்சம் தீர்த்தான். மூவி ராசாக்களும் தேடினர் வால் வெள்ளி நட்சத்திரம் வழிகாட்ட பரிசு பொட்டலங்களுடன் சென்று கண்டனர் வணங்கினர். வஞ்சகரின் சூது ஒரு புறம், நல்மனம் கொண்டோரின் தேடல் பரிசுகளாக வாழ்த்துக்களாக மாறியது.

இன்று எம்மண்ணில் மரடி மனைகளிலும் பாலன் குடிலில் பாலன் பிறப்பு நினைவு கூரப் படுகிறது. நிஜங்களாகவும் பாலன் குடில்கள் துன்புறும் பாலனின் சாயல்கள் கடும் குளிர், பனி,மழை வெள்ளத்தில் சொந்த மண்ணிலும் தங்குவதற்கு இடமில்லாது ஏதிலிகளாக அலைகிறது. அன்று சத்திரத்திலும் இடமில்லை' என்ற நிலையில் வாடிய மரியின் மைந்தன் இயேசு சரித்திரத்தில் இடமானார்.

இன்றைய ஏரோதுக்கள் புது வடிவெடுத்து பால இயேசுவின் சாயல்களை பலவழிகளில் அழிக்க முனைகிறது குப்பை கூடையிலும், தெரு வீதியிலும், தூக்கி வீசப்படுகிறார்கள். முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் சித்திரவதைப் படுகின்றார்கள். புதிய ஏரோதுக்களின் மத்தி யில் இருந்து மீட்டெடுக்கும் நல்மனங்கொண்ட மூவிராசாக்களாக ஒவ்வொரு வரும் மாறும் நாளில் ஒளிவிழாக்கள் அர்த்த மூட்டும் வாழ்த்துக்கள், வழிபாடுகள் புனிதம் பெறும் ஆன்மீக விழுமியங்கள் உயிர்ப்பு அடையும்.

" உள்ளத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக." என்ற வாழ்த் தொலி எல்லோர் மனங்களிலும் நிலைக்க எல்லோருக்கும் அன்பும், அமைதியும் நிறைவாக நத்தார் வாழ்த்துக்கள்.

எஸ்.யோசப்பாலா


அன்பர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்

எம்மிடம் 22 கரட்டில் நீங்கள் விரும்பும் அனைத்து விதமான டிசைன்களிலும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

விதுஷன்
நகைத் தொழிலகம்
(தங்கப்பவுண் நகை வியாபாரம்)

உரிமையாளர்:
திரு.க.விக்னேஸ்வரன்
தொ.பே: 0776156111
19 (28), பீச்றோட்,
குருநகர், யாழ்ப்பாணம்.





அன்பர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்

ஆடவர், பெண்கள், சிறுவர்களுக்கான அனைத்துப் புடைவைத் தினுசுகளையும் மாணவ மாணவிகளுக்கான சீருடைத் துணிவகைகளையும் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள

லைடன்
புடைவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.



அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார்-புதுவருட வாழ்த்துக்கள்

இந்தியன் சாறிகள், பஞ்சாபிகள், மற்றும் சிறுவர் சிறுமியர், ஆண்கள், பெண்கள் என அனைவரதும் 2011 ஆம் ஆண்டுக்கான புத்தம் புதிய தெரிவுகளை தரத்தில் உயர்வாகவும் விலையில் மலிவாகவும் மனதுக்குப் பிடித்ததாகவும் பெற்றுக்கொள்ள...

சரவணா
புடைவையகம்
Saravana Tex

526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(பின் வீதி, சிவன்கோயில் அருகில்),
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 1723

770, 772, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெருச் சந்தி
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 0421



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

Style Park
Perfect Collection

யாழ்.நகரில் நவீன வசதிகளுடன் அனைத்து வகையான பல டிசைன்களுடன் கூடிய புடைவை. விற்பனைக் காட்சியகம் யாழ்.நகரில் குறைந்த விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள் நிகரில்லாத் தரங்கள் அழகிய புடைவைத் தினிசுகளின் ரெடிமேட் சாம்ராஜ்யம்

ஸ்ரைல் பார்க்



இல.171, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 222 8383


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ் Merry Christmas!

# நத்தார் சிறப்பு மலர் 2010

அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

வசீகரத் தோற்றத்திற்கு!

**சந்தனாலேப**

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீர தோற்றத்தைத்தரும்.




*'சிவா நறுமணப் பூங்கா'*

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

## 12 நாள் கிறிஸ்மஸ்...

டிசம்பர் மாதம் 25 ஆம்திகதியிலிருந்து ஜனவரி மாதம் 6ஆம் தேதி வரையிலான 12 நாள்களை 12 நாள் கிறிஸ்மஸ் என்று அழைத்து 12 நாள்களும் உறவினர்கள் நண்பர்கள் என்று எல்லோரையும் சந்தித்து பரிசுகளை வழங்கி மகிழ்ந்த நாட்களாக இங்கிலாந்திலும் பிரான்ஸ் தேசத்திலும் பல ஊரகப்பகுதிகளில் கடைப்பிடித்திருக்கின்றனர். இந்த நாட்களில் ஆடல், பாடல் என்று தங்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்திருக்கின்றனர். அந்தக் காலகட்டத்தில் உருவானதுதான் Silent Night எனப்படும் குழு நடனப் பாடல்! வட்டமாகச் சுற்றி நின்றுகொண்டு நடனமாடிக்கொண்டே பாட்டிசைத்து கிறிஸ்து பிறப்பை உற்சாகமாகக் கொண்டாடி மகிழ்ந்திருக்கின்றனர். கிராமங்களில் இதற்கென்றே பாடற்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இந்த நாள்களில் பாடுவதையும், சிலர் பாடிக்கொண்டே தெருக்களில் உலாப் போவதும், தங்கள் வீட்டருகே வரும்போது அவர்களுக்கு குடிப்பதற்கும் கொறிப்பதற்கும் கொடுத்து உற்சாகப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்திருக்கின்றனர். இன்றும் பல நாடுகளில் சில இடங்களில் இத்தகைய குழுப்பாடல் பாடி வலம் வருவதைக் காணலாம்.

### தேவி மரியாளின் திருமகனே!

*தாரணியில் மீட்பர் தாவீதவன் ஊரில்*
*தேவி மரியாளின் திருமகனாய் ஆகி*
*பூரணமாய் அன்பு சமாதானம் புவியோங்க*
*ஈரமிலா யூதர் இழிநிலை நீங்க*
*மனுவுருவான அவரின் மாட்சிமை காண*
*இரக்கியே ஏழைகட்கு ஏற்றமே தந்தருளும்*
*பூரணன் அவரின் பொலிந்திடும் அருளால்*
*புரிந்துணர்வு பெற்று வாழ்வோம் இனிதே!*

கலாபூசணம் மு.தணிகாசலம்

**உங்களின் உடலினை நீங்கள் கட்டுக்கோப்புடன் வைத்துள்ளீர்களா?**

மிதமிஞ்சிய உடல் வளர்ச்சி, உடலின் எடை அதிகரித்தல், வயிறு வைத்தல், கெஸ்ட்ரிக் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களினால் நீங்கள் கவலைப்படுகிறீர்களா....

இதோ..! அதற்கான தீர்வு எம்மிடமிருந்து....

*அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார்-புதுவருட வாழ்த்துக்கள்*

நத்தார் - புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவில் உடற்பயிற்சி சாதனங்கள் பெற்றுக்கொள்ள

**ESER Marketing (PVT) Ltd**

யாழ்.மக்களுக்கு மட்டும்

யாழ்ப்பாண முகவர்:

**யாழகம்**

568, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5563



**ESER Marketing (PVT) Ltd**

38, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரிக்கு முன்பாக)
யாழ்ப்பாணம். T.P: 021 222 4156,

EPC

# யாழ் நகரில்.........

EPC (PVT)LTD
No:95 2/2 Galle Road,Colombo-04,Srilanka
Tel:+94112589868 Fax: +94112589866
Email: info@epc.lk Web: www.epc.lk

**IELTSஇல்லாமல் A/L சித்தியுடன் Bolton University Programmes இற்கான 4 வருட விசா**

Entry Criteria O/L without IELTS Admission 700(130,000)

UK பிரதிநிதிகளின் விசேட கருத்தரங்கு

First time in srilanka.....
Study UK Degrees in Srilanka.

**SPOT ADMISSION JAN/FEB 2011** BA(Hons),Bsc,MBA,MSCPGD
Courses in Srilanka

BA(Hons),Bsc,PGD
IELTS

இம்மாதம் 28,29ஆம் திகதிகளில்
(28/12/2010,29/12/2010)
நேரம் -10.00am
Green Grass,33 Aseervatham Lane,HospitalRoad,Jaffna.

DEAR STUDENTS EDUCATION IS INVESTMENTS - PLEASE BEFORE YOU STUDY .... THINK RE-SEARCH CHOOSE FOR YOUR BETTER PROSPECT

*University of Heriot - Watt - Ranking-45*
*DeMontfort University - Ranking-57*

Please Visit www.EPC.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நட்சத்திரங்கள் மின்னும் கிறிஸ்மஸ் மரம்

கிறிஸ்து பிறப்பு என்றதும் கண்களுக்குள் விரியும் காட்சியில் ஒளியூட்டப்பட்ட, அலங்கரிக்கப்பட்ட, சிறு சிறு நட்சத்திரங்கள் மின்னும் ஒரு கிறிஸ்மஸ் மரம் கட்டாயம் இடம்பெற்றிருக்கும். மனித நேயத்தின் உச்சபட்ச வெளிப்பாடாக இயேசுவின் வருகையை நம்புகிறது கிறிஸ்தவம். உலகின் மீது கடவுள் கொண்ட தாயன்பை நினைவுபடுத்தும் இந்த கிறிஸ்து பிறப்பு தினத்தில் தவிர்க்க முடியாத ஒரு விழாக்காலச் சின்னமாக விளங்குகிறது கிறிஸ்மஸ் மரம்.

ஒரு ஏழை விறகு வெட்டி இருந்தான். ஏழ்மையின் உச்சத்தில் இருந்த அவனை பட்டினியின் பிடியிலிருந்த சிறுவன் ஒருவன் ஒரு கிறிஸ்மஸ் தினத்தன்று சந்தித்து பசிக்கு ஏதேனும் தர முடியுமா என்று கேட்டான். சிறுவனின் சோர்வைக் கண்ட அந்த விறகுவெட்டி தனக்காய் வைத்திருந்த சிறு உணவை அவனுக்கு வழங்கிவிட்டு பசியுடன் தூங்கினான். மறுநாள் காலையில் தன்னுடைய வீட்டிற்கு முன்னால் ஒரு மரம் அழகாய் ஜொலித்தபடி புதிதாய் நிற்பதைக் கண்டு வியப்படைந்தான். நேற்றைய இரவில் தன்னுடன் உணவருந்தியது இயேசுவே என்றும், இவனுடைய மனிதநேயத்தைப் பாராட்டி அவர் தந்த பரிசே அந்த கிறிஸ்மஸ் மரம் என்றும் அவன் நம்பினான். இது கிறிஸ்மஸ் மரத்தின் தோற்றம் பற்றி சொல்லப்படும் கதைகளில் ஒன்று.

ஜேர்மனியே கிறிஸ்மஸ் மரத்தின் பிறப்பிடம் என்னும் சிறப்புப் பெருமையைப் பெறுகிறது. சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் புனித போனிபேஸ் என்பவர் ஜேர்மனியில் கிறிஸ்தவ மத போதனைகளைச் செய்து கொண்டிருந்தபோது ஒரு கூட்டம் மக்கள் அங்குள்ள ஓக் மரம் ஒன்றை வழிபடுவதைக் கண்டார். அதைக்கண்டு கோபமடைந்த அவர் அந்த மரத்தை வெட்டி வீழ்த்த அதனடியிலிருந்து உடனடியாக ஒரு கிறிஸ்மஸ் மரம் முளைத்து வளர்ந்ததாக கூறப்படும் கதையே கிறிஸ்மஸ் மரத்தைக் குறித்து பெரும்பாலான மக்களால் சொல்லப்படும் கதை.

அந்த மரம் முளைத்த செயலை இயேசுவின் உயிர்ப்போடு தொடர்புபடுத்தி தன்னுடைய கிறிஸ்தவ போதனையை மும்முரப்படுத்தினார் அவர். ஆனாலும் அந்த மரம் அப்போதெல்லாம் அலங்காரப் பொருளாகவோ, கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டங்களில் பயன்படுத்தப்படவோ இல்லை.

ஜேர்மானியர்கள் தான் கிறிஸ்மஸ் மரத்தை முதலில் வீடுகளுக்குள்ளும் அனுமதித்தவர்கள். பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் கிறிஸ்மஸ் மரங்கள் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்டு விழாக்களில் பயன்படுத்தப்பட்டிருந்தன என்பது வியப்பூட்டும் செய்தி.

இங்கிலாந்துக்கு இந்த கிறிஸ்மஸ் மரம் வந்த விதம் சுவாரஸ்யமானது. இங்கிலாந்து அரசி விக்டோ ரியா அடிக்கடி ஜேர்மனி நாட்டுக்குப் பயணம் செய்வதுண்டு. அப்படிப்பட்ட பயணங்கள் அவருக்கு ஜேர்மனிநாட்டு இளைஞர் இளவரசர் ஆல்பர்ட்டுடன் காதலை வளர்த்தன.

திருமணம் செய்துகொண்ட இருவரும் இங்கிலாந்து திரும்பினார்கள். 1841ல் அரசர் ஆல்பர்ட் ஒரு அலங்காரம் செய்த மரத்தை இங்கிலாந்திலுள்ள விண்ட்ஸர் மாளிகையில் வைத்து விழா கொண்டாடினர். அதுவே கிறிஸ்மஸ் மரத்தின் இங்கிலாந்து பிரவேசம்.

கிறிஸ்மஸ் மரத்தின் கிளைகள் சிலுவையின் அடையாளத்தைக் கொண்டிருப்பது கிறிஸ்மஸ் மரத்தின் சிறப்பம்சம். அதேபோல கிறிஸ்மஸ் மரத்தின் முக்கோண வடிவம் தந்தை, மகன், தூய ஆவி எனும் இயேசுவின் மூன்று பரிமாணங்களைக் குறிப்பதாகவும் எனவே இயேசு மனித உருவான நாளை மரத்தை அலங்கரிப்பதன் மூலம் கொண்டாடுவது அதிக அர்த்தமுடையது என்றும் கிறிஸ்தவ விளக்கங்கள் பரிமாறப்படுகின்றன.

சுமார் மூன்று கோடியே முப்பது லட்சம் கிறிஸ்மஸ் மரங்கள் வட அமெரிக்காவில் வருடந்தோறும் விற்கப்படுகின்றன. மூன்று லட்சத்து முப்பதாயிரம் மரங்கள் இணையம் வழி விற்கப்படுகின்றன. கிறிஸ்மஸ் மர வளர்ப்பில் ஓரகன், வட கொரோலினா, பென்சில்வேனியா, மிச்சிகன், வாஷிங்டன் மற்றும் விஸ்கான்சின் போன்ற மாநிலங்கள் முன்னணி மாநிலங்களாக உள்ளன.

அமெரிக்காவின் எல்லா மாநிலங்களிலும், கனடாவிலும் கிறிஸ்மஸ் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. சுமார் ஒரு லட்சம் பணியாளர்கள் கிறிஸ்மஸ் மரம் வளர்ப்பு தொழிலில் ஈடுபடுகின்றனர். பல வகையான கிறிஸ்மஸ் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. சுமார் பன்னிரண்டாயிரம் இடங்களில் நமக்குத் தேவையான மரத்தைத் தேர்வு செய்து வெட்டிச் செல்ல அனுமதிக்கப்படுகிறது.



# கிறிஸ்மஸ் பரிசு

கிறிஸ்துமஸ் நாளில் ஒருவருக்கொருவர் பரிசுப்பொருட்களை அளித்துத் தங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திக் கொள்கின்ற உன்னதம் தொடங்கியது எதனால்? ஏன் இந்த நாளில் மட்டும் பரிசுப்பொருட்களை அளித்துக்கொள்கின்றுர்கள் மக்கள்? புனித மத்தேயு எழுதிய பரிசுத்த வேதாகமத்தின்படி, ''உலகை உய்விக்கப்பிறந்துள்ள அன்னை மேரியின் தவப்புதல்வராம் குழந்தை யேசுவைக் கண்டு தரிசிக்க வந்த மூன்று ராஜாக்கள்அந்தக் குழந்தையின் முன் மண்டியிட்டு வணங்கினர். பின்னர் அவர்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த பொக்கிசங்களைத் திறந்து பொன்னும் பொருளும் பரிசுகளாக அளித்தனர். என்ற அந்த நாள் தான் பரிசுகள் இன்று வழங்கப்படுவதின் மூலமாகக் கருதப்படுகின்றது.

இருந்தாலும் 1800கள் வரையில் ஒருவருக்கொருவர் பரிசுப்பொருட்கள் வழங்கிக் கொண்டதாக பழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. பின்னுளில் ''சாண்ட்ட கிளாஸ்'' என்ற கிறிஸ்துமஸ் தாத்தா அறிமுகப்படுத்தப்பட்ட பிறகுதான் கிறிஸ்துமஸ் நாளின் பிரதான நிகழ்வாக பரிசுப்பொருட்கள் வழங்கிக்கொள்ளத் தலைப்பட்டனர்.

# கிறிஸ்மஸ் தாத்தா

உருவம், குழாய் புகைப்பான், புசுபுசுவென்ற வெண்மையான ஓரங்களையுடைய சிவப்பு வெல்வெட்உடை, சர்க்கஸ் கோமாளி அணிவது போன்ற ஒரு குல்லா, முதுகில் தொங்குகின்ற ஒரு நீண்ட பையில் பரிசுகள் சுமக்க காட்சி தருபவர்தான் கிறிஸ்துமஸ் தாத்தா.... ஸாண்ட்ட கிளாஸ்!

சரி, கிறிஸ்மஸ் தாத்தா தயார்! அவருக்கு வாகனம், வாகனம் யினிதே விரைந்திட ரெய்ண்டீர் எனப்படும் நீண்ட கிளைகளையுடைய கொம்புகள் கொண்ட மான்கள் தயாரா?!. அவ்வளவுதான், கிறிஸ்துமஸ் தாத்தா கிளம்பி விடுவார்.

மேற்கத்திய நாடுகளிலும் சில கீழை நாடுகளிலும் மட்டுமே காணப்பட்ட கிறிஸ்துமஸ் தாத்தா இன்றைக்கு உலகெங்கும் பரவி அவருக்கே உரித்தான சிவப்பு உடையில் வெண்தாடி, கண்கண்ணாடி சகிதமாக வலம் வரத்துவங்கிவிட்டார்! சாண்ட்டா என்றும் சாண்ட்ட கிளாஸ் என்றும் அன்போடு குழந்தைகள் குதூகலித்துக் கொள்வதைநாமறிவோம்! உலகில் எந்தக் கிறிஸ்தவக் குழந்தையிடமும் சாண்ட்ட கிளாஸ் என்ருல் அறியாத குழந்தைகளே இல்லை எனலாம்.

17ஆம் நூற்றாண்டில் நியூயார்க்கில் குடியேறிய டட்ச் இனத்தவர் சிண்ட்டர் க்ளாஸ் என்று அறிமுகப்படுத்தியவர் பின்னாளில் சாண்ட்ட கிளாசாக வலம் வரத்துவங்கினார். டச்சு இனத்தவர் சிண்ட்டர் க்ளாஸை அறிமுகப்படுத்தியபோது புனித நிக்கோலஸ் பிஷப் ஆக யிருந்தபோது அவர்அணிந்த சிவப்பு அங்கி போன்ற டையையும் அவர் பயன்படுத்திய வெள்ளைக் குதிரையையும் அறிமுகம் செய்தனர். அதுவே சில மாற்றங்களுடன் பின்ன ர் சாண்ட்ட கிளாஸ் ஆடைகளாக மாறின.

நிக்கோலஸ் வரும் இரவு, குழந்தைகள் ஒரு சிறு புல் கட்டு அல்லது வைக்கோல் கட்டு ஒன்றை அவரது குதிரைக்காகவும் அவர்களுடைய காலணிகளை வீட்டின் நுழைவு வாயிலுக்கு வெளியே வைத்துவிடுவார்கள். ( இப்போதெல்லாம் தங்கள் பரிசுப் பொருட்களை சாண்ட்டா விட்டுச் செல்ல கிறிஸ்மஸ் மரத்தில் பெரிய காலுறைகளை தொங்கவிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்! )

காலையில் எழுந்து பார்க்கும் குழந்தைகளுக்கு அவர்கள் வைத்திருந்த புற்கட்டு மாயமாய் மறைந்திருப்பதையும் அவர்கள் காலணியில் இனிப்புகள், உண்ணும் பருப்பு வகைகள், பரிசுகள் என்றிருப்பதைக் காண்பார்கள். இரவு நிக்கோலஸ் வைத்துவிட்டுச் சென்றதாக குழந்தைகள் நம்பி மகிழ்வது வழக்கம். நள்ளிரவில் வைக்கோலை அகற்றி அனைத்தையும் அவர்களின் பெற்றோர்கள் வைப்பது மட்டும் பரம ரகசியமாகவே இருக்கும்!

# கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகள்

*எந்த நாளுக்கும் ஒரு வாழ்த்து அட்டை என்பது அங்கிங்கெனாதபடி எங்கும் பரவிப் படர்ந்துள்ள ஒரு விடயம் ஆகும்! கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள் முதன் முதலாக வெளியிடப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்ட பெருமை லண்டன் மாநகரைச் சாரும். 1843ஆம் வருடத்தில் லண்டனும் 1846 இல் அமெரிக்காவும் வெளியிட்டன. அமெரிக்காவில் மட்டும் 2 பில்லியன் கிறிஸ்துமஸ் வாழ்த்தட்டைகள் ஒவ்வொரு ஆண்டும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளப்படுகின்றது என்பது வாழ்த்தட்டை விற்பனையகங்கள் தருகின்ற புள்ளி விபரமாகும்!*

*கிறிஸ்மஸ் ஒரு விடுமுறை நாளாகவும் புனித நாளாகவும் கொண்டாடப்பட்டது. அமெரிக்காவில் ஆண்டின் மிகப்பெரிய கொண்டாட்டமாக கிறிஸ்மஸ் நாள் என்றாலும் குறிப்பாக குழந்தைகளுக்குரிய சிறப்பு தின நிகழ்வாக அமைந்துள்ள ஓர் நாள் என்றால்அது மிகையல்ல; அமெரிக்கக் கூட்டரசு, மாநில அரசுகள், அனைத்துக் கல்லூரிகள்,பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் மட்டும் என்றில்லாமல் தனியார் நிர்வாகங்கள் என்று விடுமுறை விடப்பட்டும், சில நிர்வாகங்கள் ஒன்றிரண்டு நாள்களை விடுமுறையாக அளித்தும் இந்த நாள் சிறப்பிக்கப்படுகிறது. ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களுக்கு வருடத்தில் வரும் ஆறு புனித நாள் நிகழ்வுகளுள் கிறிஸ்துமஸ் மிக முக்கியத்துவம் பெறுகின்றது.*

*அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் கிறிஸ்மஸ் மட்டுமே வாரக்கணக்கிலான மிகப்பெரிய வர்த்தகமாகத் திகழ்கின்றது. அநேக சிறு வர்த்தக் நிறுவனங்கள் தங்கள் ஆண்டு வருமானத்தின் 70 சதவிகித வருவாயை ஈட்டித் தருவதே இந்தக் கிறிஸ்மஸ் வர்த்தகம் தான்!*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org